www.tamilarangam.net

2
ஆனி'97

# அம்மா

உள்ளே....


- பார்த்திபன்
- சந்திரிகா சண்முகராஜா
- பா. பிரதீபன்
- பொ. கருணாஹரமூர்த்தி
- யமுனா ராஜேந்திரன்
- ஷோபாசக்தி
- வண்ணதாசன்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**'படைப்பாற்றல் இல்லாத சமூகம் எழுச்சி கொள்ளமுடியாது'**
"அம்மா"

வணக்கம்.

அம்மாவின் இரண்டாவது இதழ்.
முதலாவது இதழிற்கு எதிர்பார்த்ததைவிட மேலான ஆதரவும், அரவணைப்பும் கிடைத்ததையிட்டு அம்மா மிகுந்த உற்சாகம் கொள்கிறாள்.
இவ்வாறான சஞ்சிகைக்குரிய தேவை பரந்த அளவில் இன்னும் இருப்பதாகவே உணரமுடிகிறது.
குறிப்பிட்டது போல ஐம்பது இதழ்களுடன் அம்மாவை கட்டுப்படுத்திக்கொள்ள முடியவில்லை. முதலாவது இதழ் நூறு இதழ்கள் பிரதிசெய்யப்பட்டன. தொடர்ந்து இன்னும் நூறு இதழ்களுக்கான தேவை இருக்கிறது. இது பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளில் வதியும் நண்பர்களால் பிரதிசெய்ய்ப்படவேண்டும் என்பதே அம்மாவின் விருப்பமும் எதிர்பார்ப்பும்.

சஞ்சிகையின் அமைப்புப்பற்றியும், கவிதைகள் சிலவற்றயும் சேர்த்துக்கொள்ளலாம் என்றும் நண்பர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். சஞ்சிகை என்று வடிவம் கொண்டுவிட்டால் வடிவமைப்புதொடர்பான கரிசனையும் அவசியமானதுதான் என்பதை அம்மா ஏற்றுக்கொள்கிறாள். ஆயினும் "இயல்பான" பிரச்சினைகளோடு முடிந்தவரை முயற்சிப்பாள்.
கவிதைகளைப்பொறுத்தவரையில் முற்றுமுழுதாக தவிர்த்தே வைக்கவேண்டும் என்ற இறுக்கமான நிலைப்பாடு அம்மாவிற்கு இல்லை. தவிர்க்கமுடியாமல் தவிர்க்கவும் முடியாது. ஆயினும் ஒருதுறை சார்ந்து முடிந்தளவேனும் ஆழமாகப்போவதே அம்மாவின் நோக்கு.

புலம்பெயர் இலக்கியம்.
"புலம் பெயர் இலக்கியம்" என்றோ அல்லது வேறேதாவது "பெனர்" விரித்தோ வைத்துவிட்டு கீழ்இருந்து எழுதுவது இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட சங்கதி. ஆயினும் சொந்த வாழ்விடத்தைவிட்டு புலம்பெயர்ந்தவர்களால் படைக்கப்படும் இலக்கியம் புலம்பெயர் இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

அண்மைக்காலமாக, தமிழில் அறிமுகமாகியிருக்கும் இவ் இலக்கியம் பற்றி, "வெறுமனே துன்பம், துயரம், சோகம் என ஒரே புலம்பல்களாக, ஓப்பாரிகளாகவே அமைகின்றன. வாழ்வுமீதான நம்பிக்கை தரும் படைப்பெதனையும் காணமுடியவில்லை" என நண்பரொருவர் இறுக்கமான கருத்தொன்றினை முன்வைக்கிறார்.

போராட்டத்தின்மீது நம்பிக்கையிழந்து நாட்டைவிட்டுவெளியேறிய, பற்றிக்கொள்ளத் தத்துவமின்றி தத்துவங்களின்மீது கேள்விகளை எழுப்பிக்கொண்டிருக்கின்ற இன்றையபடைப்பாளிகளிடமிருந்து வாழ்வுமீது நம்பிக்கை தரும் படைப்புக்களை எதிர்பார்ப்பது அவ்வளவு உசிதமானதல்ல. இது புலம்பெயர்ந்த படைப்புக்களுக்கு மட்டுமன்றி சகலஇலக்கியவகையறாக்களுக்கும் பொருந்தும்.
ஆயினும், துன்பப்படும் மனிதர்மீதான மனிதாபிமானப்பார்வையும், உண்மையின் தேடல்மீதான நேர்மையான இலக்கியங்களும் ஆரோக்கியமானவையே.

தவிர, "வெளிநாட்டார் எமைப்பார்த்து தலைவணக்கம் செய்திடல் வேண்டும்" என பிறருக்காக இலக்கியம் படைக்கும் போக்கினை விடுத்து எமக்காக இலக்கியம் படைக்கும்போக்கினை வளர்த்தெடுக்கவேண்டுமெனவும் அம்மா கோருகிறாள்.

**'அம்மா'**
14. 06. 1997

தொடர்பு முகவரி.
S. Manoharan
(Esc. E13)
210, Av. du 8 Mai 1945
93150 Le Blanc Mesnil,
FRANCE.

www.tamilarangam.net

*R. Pathmanaba Iyer*
*27-B High Street*
*Plaistow*
*London E13 0AD*
*Tel: 020 8472 8323*

**பார்த்திபன்**

# ஒரு பிரஜை நாடு

1987.மே.22, வடமாராச்சி ஊர் அமைதியாக இருந்தது. விலங்குகளும் சத்தம் போடவில்லை.
பாதை விளிம்புகளில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு உறக்கத்தில் இருந்தன.
எந்த வீடும் வெளிச்சமாயிருக்கவில்லை. பாடசாலையிலிருந்து 3 வீடுகள் தள்ளியிருந்த அந்த வீடும் அமைதியாயும், இருளாயும் இருந்தது.
வீட்டில் உருவங்கள் சத்தமில்லாமல் நடமாடின.
பழகிப் போய் விட்டதால் இருளில் நடமாடுவதற்கு அந்த உருவங்கள் தடு மாறவில்லை.

"அம்மா பயமாயிருக்கம்மா......." மிக மெதுவா அந்தச் சிறுவன் பயப்பிட்டான்.
"உஸ்...... பயப்பிடாத ஒண்டும் நடக்காது." அவன் அருகில் இருந்த அம்மாவின் குரலிலும் கலக்கம் கலந்திருந்தது.
கடிகாரம் பெரிதாகச் சத்தம் போடுகிறதோ என்று நினைக்க வந்தது.
"அப்பா எங்கேம்மா?" மீண்டும் மெலிதாக சிறுவனின் குரல் கேட்டது.
"மெல்லமா அப்பா இப்ப வந்துடுவார்."
நேரம் நீளமாகப் போய்க் கொண்டிருந்தது.
எங்கும் அமைதி.
எதுவுமே அசையவில்லை.
வீடுகளுக்குள் பதுங்கியிருந்த மனிதர்கள் எதையோ எதிர்பார்த்து பயப்பட ஆரம்பித்தார்கள். பயந்தார்கள், பயந்து வியர்த்தார்கள்.

"பயமாயிருக்கம்மா.........." சிறுவன் மறுபடி பயப்பட்டான்.

சிறுவனுக்கு பத்து வயதிருக்கலாம். பெயர் கணேசமூர்த்தி. கணேசன் என்று தான் கூப்பிடுவார்கள். முதலாம் வகுப்பு வரைமட்டுமே ஒழுங்காக படித்திருந்தான். இராணுவ அட்டகாசங்கள் அவன் பாடசாலைக்கு போய் படிப்பதை தடை செய்திருந்தன. இதனால் அவனுக்கு பொது அறிவு போது மானதாக இருக்கவில்லை. அவனுக்கு எதுவும் புரியவில்லை.

"ஏன் பயப்பிட வேணும்?"
"ஆருக்கு பயப்பிடவேணும்?"
"ஏன் ஆக்களை சாகக் கொல்லுறார்கள்?"

எதுவும் அவனுக்கு தெரியாது. யாரும் அவனுக்கு இந்த



விபரங்களை தெரிவிக்கவில்லை. தானாக அறிவதற்கும் வயது அவனுக்கு பொருத்தமானதாக இருக்கவில்லை. அவனுக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து.

பயம் ஒன்றைத்தான் அவன் பரிபூரணமாக அறிந்திருக்கிறான்.

"கவனமாப் போ!"
"ஆமிக்காரங்கள் வருவாங்கள்."
"ஆமிக்காரங்களை கண்டா ஓடி ஒழி"
"ஹெலிகொப்ரர் வந்தா மரங்களுக்கு கீழ போய் நில்."
"றோட்டில் ஆக்கள் ஒருத்தரும் இல்லாட்டி பக்கத்தில இருக்கிற வீடுகளுக்க போய் நில்."
பாடசாலைக்கு போகும், அல்லது வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் இப்படியான எச்சரிப்புகள். கவனங்கள், கவலைகள். எவ்வளவுதான் வீராப்பாகப் போனாலும் பாதையில் காணப்படும் அசாதாரண நிலமையும், பெற்றோரின் எச்சரிப்புகளும் கணேசனில் பயத்தை உண்டாக்கி விடும். உடனே திரும்பி வந்து விடுவான்.

இந்தப் பயம் சில நாட்களில் நிரந்தரமாகவே மனதைப் பற்றிக் கொண்டது. வீட்டில், பாடசாலையில், பாதையில், கடையில், படுக்கையில் எப்போதும் பயம், பயம், பயம். அந்தப் பயத்தினால் விஷேச ஜாக்கிரதைகள்.

பழைய 'அம்புலிமாமா', 'ரத்னமாலா' க்களில் தேவர், அசுரர். சண்டைகளைப் பற்றி கணேசன் எழுத்துக்கூட்டி வாசித்திருக்கிறான். ஆனால் இப்போது நடக்கும் சண்டை யாருக்கிடையில் என்பதை உண்மையாகவே அந்த சிறுவனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

'ஆமிக்காரங்கள் பொல்லாதவங்கள்.'

www.tamilarangam.net

'ஆக்களைக் கண்டால் சுட்டுப் போடுவாங்கள்.'
'ஆக்களை கண்டபடி வெட்டுவாங்கள்.'
இவை மட்டுமே கணேசனுக்கு தெரியும். ஆமிக்காரங்களின் கண்களில் படாமல் தான் தப்பிக் கொள்ள வேண்டும் என்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனால் இன்றுவரை ஒரு ஆமியையும் அவன்தன் கண்களால் பார்க்கவில்லை! தங்களை பயப்படுத்துபவர்கள். எப்படியிருப்பார்கள் என்றே தெரியாதிருந்தது. புராண கதைகளில் வரும் அசுரர்களைப் போலவே ஆமிக்காரங்களின் உருவத்தையும் தற்காலிகமாக அவன் கற்பனை செய்து வைத்திருந்தான்.

திடீர், திடீரென தெருக்களில் சனங்கள் ஓடுவதையும், திடீர், திடீரென்று பிரேத ஊர்வலங்கள் போவதையும் வீட்டுக்குள் இருந்தவாறே கணேசன் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போதெல்லாம் அவனுக்கு பயமாயிருக்கும்.

"நாங்களும் செத்துப் போவோமா?"

தனியே இருக்கப் பயந்து ஓடிவந்து அப்பாவையோ, அம்மாவையோ கட்டிப் பிடித்துக் கொள்வான். உடல் நடுங்கும், வியர்க்கும். பிரேத ஊர்வலம் பார்த்த இரவு பயங்கரக் கனவெல்லாம் வரும். சில வேளைகளில் நித்திரையிலே கத்தி விடுவான். விழித்துக் கொண்டபின் தூக்கமே வராது.

படிப்பில்லை, நண்பர்களுடன் விளையாட்டில்லை, வெளியே போய்வரத் துணிவுமில்லை, அனுமதியுமில்லை. கணேசனுக்கு சீ என்றிருந்தது. வேலைக்கு போவதற்கு அப்பா வெளியே புறப்படுகையில் அவனுக்கு பீதியாயிருக்கும்.

"அப்பா போகாதையுங்கோ, ஆமிக்காரங்கள் சுட்டுப் போடுவாங்கள்" என்று ஒருநாள் சொல்லி அம்மாவிடமிருந்து நன்றாக அடிகள் வாங்கிக் கொண்டான்.

"சனியன் வெளியில போகேக்க இப்படியே சொல்லுறது."

இதன் பின் கணேசன் வாய்விட்டு எதுவும் சொல்லாவிடினும் அப்பா வெளியே போகும் ஒவ்வொரு தடவையும் மனதுக்குள் பயந்து கவலைப் படுவான். அப்பா திரும்பி வரும் வரையும் வெளிக் கதவருகே காவல் இருப்பான். அவனை பயப்படாதே என்று சொல்லுமளவிற்கு அம்மாவுக்கு தைரியமில்லை, அப்பாவுக்கு நேரமில்லை.

"அப்பா எங்கேம்மா?" கணேசன் மறுபடியும் கவலைப்பட்டான்.
"வந்திடுவார்." அம்மா சுருக்கமாக பதிலளித்தார்.

எங்குமே நிசப்தம், அசாதாரண அமைதி, எல்லா வீடுகளிலும் எல்லோரும் ஒரே மாதிரியாக பயந்து போயிருந்தார்கள், கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். நேரம் போய்க் கொண்டிருந்தது. கணேசன் மீண்டும் ஏதோ கேட்க முயற்சிப்பதுக்குள் அம்மா அவனை பேசாமலிருக்கும் படி சைகை செய்துவிட்டு காதைக் கூர்மையாக்கினாள். தூரத்தில் மிக மெலிதாக அந்த சத்தம் ஆரம்பித்தது. எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்ட சத்தம்.

அம்மா பரபரப்பானாள், கணேசனை ஒரு கையால் இறுக்கப் பிடிச்சாள், இருளில் அங்கும் இங்கும் மோதியபடி வெளிக் கதவை திறந்து ஓடினாள். கணேசனும் இழுபட்டான். வேலியோடிருந்த வேப்பமரத்தின் அருகே வெட்டப்ப பட்டிருந்த பதுங்கு குழிக்குள் அம்மா குதிக்க தொடர்ந்து கணேசனும் விழுந்தான்.

"உஸ்........." மெதுவாக முனகினாள்.
"நோகுதோ?" அம்மா பரிவோடு கேட்டாள்.

முழங்காலில் வந்திருந்த சிராய்ப்புக் காயத்தை கைகளால் தடவிய படியே இல்லையென்றான். சிறிது நேரத்தில் காதை செவிடாக்கும் ரீங்காரம். இராட்சத பறவைகள் மிகத் தாழ்வாக பறந்து திரிந்தன குண்டு முட்டைகள் போட்டன. அக்கம் பக்கத்து வீடுகளில் ஆட்கள் பரபரப்பாய் ஓடும் சத்தங்கள். பதுங்கு குழிக்குள் குதிக்கும் சத்தங்கள். திடீர், திடீரென பெரிய சத்தங்களுடன் நிலம் அதிர்ந்தது. கணேசன் பயத்துடன் அம்மாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

கண்ணைப் பறிக்கும் வெளிச்சங்கள். யார் யாரோ அழும் சத்தங்கள். மீண்டும் மீண்டும் வெடிச்சத்தங்கள் நில அதிர்வும். கணேசன் கண்ணை மூடிக் கொண்டான். அப்போது பயம் இன்னும் அதிகரிக்க உடனே கண்களை திறந்து கொண்டான். நேரம் போய்க் கொண்டிருந்தது.......... இருள் முற்றாகப் பரவியிருந்தது. காலில் ஊர்ந்த ஏதோ ஒன்றைக் கணேசன் உதறினான்.

பூச்சியோ?, மட்டத்தேளோ?, பாம்பும் வருமா? எதற்குப் பயப்பிடலாம்? பயப்பிடாமல் இருக்கவே முடியாதா? வியர்வையில் மண் ஒட்டி உடம்பு முழுதும் பிசுபிசுத்தது. கற்கள் குத்தி வலித்தன. நன்றாக இருக்கவும் முடியாமல் அவர்கள் அவஷ்தைப்பட்டுக் கொண்டிருந்தார்கள்.

1987.மே.23, பதுங்கு குழி

வெளிச்சம் தயங்கியபடி பிரவேசித்தது. தூங்காத கண்களுடன் கணேசனும் அம்மாவும் கூசினார்கள்.
"அப்பா எங்கேம்மா?" அன்றைய முதல் கேள்வியை கேட்டான் கணேசன்.
"மாமா வீட்டில நிண்டிருப்பார், இண்டைக்கு கட்டாயம் வருவார்." மகனுக்கு சமாதானம் சொன்னாலும் 'அவர் எங்கே?' என்ற கேள்வி அவளை கலங்க வைத்தது.

"வீட்டுக்கு போவோமா?" கணேசன் கேட்டான்.
"கொஞ்சம் பொறு" என்று அம்மா காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

வித்தியாசமான சத்தங்கள் எதுவும் கேட்காததால் "எழும்பு போவோம்" என்றாள்.

முதலில் அம்மா பலமுறை சறுக்கியபின் வெளியே வந்தாள். சற்று தூரத்தில் குவியல்களாக கிடந்த கடதாசிகள் அவளைக் கவர அவற்றை நோக்கி போனாள்.

"அம்மா என்னைத் தூக்கி விடுங்கோ." கணேசன் பதுங்கு குழிக்குள் இருந்து குரல் கொடுத்தான். குவியல்களில் இருந்து ஒன்றை எடுத்துப் பார்த்த அம்மா திடுக்கிட்டாள்! நான்கு நாட்களுக்கு தொடர்சியாக ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்

www.tamilarangam.net

பட்டிருப்பதாகவும், வெளியே நடமாடுவோர் சுடப்படுவர் என்றும் சுத்தமான தமிழில் எழுதப்பட்டிருந்தது.

மறுபடியும் வானத்தில் ஆரவாரம்......!

விமானங்கள் தெரிய ஆரம்பித்தன. அம்மா திரும்பவும் பதுங்கு குழிக்குள் இறங்கினாள்.
"என்னம்மா?" கணேசன் பதட்டத்தோட கேட்டான்.
"ஒருத்தரையும் வெளியில திரிய வேண்டாமாம், கண்டா சுட்டுப் போடுவாங்களாம்."

கணேசனுக்கு ஏன் என்று கேட்கத் தெரியவில்லை. இருவரும் அப்படியே இருந்தார்கள்.
விமானங்கள் வந்தன, குண்டுகள் போட்டன, பறந்து போயின.
விமானங்கள் வந்தன, குண்டு......

1987.மே.24, பதுங்கு குழி

கணேசனும், அம்மாவும் சோர்ந்து போயும் களைத்துப் போயும் இருந்தார்கள்.
தூங்காத கண்கள் சிவப்பாகியிருந்தன.
எறும்புகள் கடித்ததால் உடம்பில் ஆங்காங்கே பரவலாக மேடுகள் உண்டாகியிருந்தன.
கணேசன் கொட்டாவி விட்டான்.
இது எத்தனையாவது என்று அவனுக்கு மறந்து போய்விட்டது.
அவனுக்கு பசித்தது, மிகவும் நன்றாக பசித்தது, தலையைச் சுற்றியது, தூக்கம் வந்தது.

இவையெல்லாவற்றையும் மீறி பயம் நிறைந்திருந்தது.
அம்மாவுக்கு அவனைப் பார்க்க பாவமாக இருந்தது. அவன்தான் என்ன செய்ய முடியும்?
வெளியில் போகச் சுட்டுக் கொன்று விடுவார்களே. கவச வாகனங்களின் இரைச்சல் கூட மிக துல்லியமாக கேட்டது.
இராணுவம் அருகாமையில் வந்து விட்டதை அவள் அறிந்து கொண்டாள்.

யுத்த ஆரவாரம் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன.

இராணுவத்தின் பிடிக்குள் தாம் சிக்கிக் கொண்டதாக எல்லோரும் அனுமானித்துக் கொண்டார்கள்.

கணேசனுக்கு பசி வயிற்றை பிராண்டியது, உடம்பெங்கும் எரிந்தது, தலை சுற்றியது. அம்மா அவனைப் பார்த்து கவலைப் பட்டுக் கொண்டிருந்தாள்.
பகல் போய் இரவு வந்தது.
அவர்கள் அப்படியே இருந்தார்கள்.

1987.மே.25, பதுங்கு குழி

வெடிச் சத்தங்களுடன் விடிந்தது.
கணேசன் சுருண்டு படுத்திருந்தான்.
கண்கள் அரைகுறையாக மூடியிருந்தன.
அம்மா அவனை பரிவுடன் தடவினாள்.
உடம்பு மிக வெப்பமாக இருந்தது.
நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.
அங்கும் அதே வெப்ப நிலைதான்.
காய்ச்சலா?
அவன் தலையை தூக்கி மடியில் வைத்தாள்.

"என்ன செய்யுது ராசா?"
"பசிக்குதம்மா......" கணேசன் மெலிதாக முனகினான்.
அம்மா கொஞ்ச நேரம் யோசித்தாள்.
அவனை மெதுவாகத் தூக்கி, மெதுவாக மண்ணில் படுக்க வைத்துவிட்டு பதுங்கு குழியிலிருந்து வெளியே வந்தாள்.
யாரும் இல்லை. வேகமாக வீட்டினுள் ஓடினாள்.
சமையலறையில் புகுந்து சாப்பாடு தேடினாள். அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டாள். படுக்கை அறையில் புகுந்து பரபரப்பாக தேடினாள். கொஞ்சத் தாமதத்தின் பின், டிஸ்பிறின் அகப்பட்டது.
எல்லாவற்றுடனும் வெளியே வரும்போதுதான் அவள் கவனித்தாள்.

சின்ன இடைவெளிக்கு அப்பால் நீட்டிய துப்பாக்கிகளுடன் இராணுவம் வந்து கொண்டிருந்தது.

கணேசனுக்கு நா வரண்டது, தலை பாரமாக இருந்தது.

"அம்மா" என்று முனகினான்.
சிரமப்பட்டு தலையை தூக்கிப் பார்த்தான், அம்மாவை காணவில்லை!

"அம்மா" என்று கூப்பிட்டான்.
அவனுடைய குரல் அவனுக்கே கேட்கவில்லை. கண்கள் நன்றாக திறக்க முடியவில்லை. உடம்பு முழுவதும் கொதித்தது. சில எறும்புகள் ஊர்ந்து கொண்டிருந்தன........ 'அம்மா எங்கே?' அவனுக்கு பயமாகவும், கவலையாகவும் இருந்தது.
அம்மாவுக்காகக் காத்திருந்தான்.

அம்மா வரவில்லை. 'அம்மா எங்கே?' பயம் அவனைக் கலவரப் படுத்தியது.

'அம்மாவை ஆமிக்காரன் பிடிச்சுக் கொண்டு போட்டானோ?'

'இனி நான்தானே, அடுத்ததாய் என்னைத்தானே பிடிப்பாங்கள்!
பிடிச்சா சுட்டுப் போடுவாங்களோ?'

பயம்.......
பயம்...............

அழுகையும் வந்தது.

இந்த இடம் போதுமான பாதுகாப்பாக இல்லை என்று கணேசன் நினைத்தான். வெளியில போகேலாது அங்க கட்டாயம் ஆமிக்காரன்கள் நிப்பாங்கள்.

'அப்ப என்ன செய்யலாம்?'
'இன்னும் கீழே ஆழத்துக்கு போகவேணும்......'
'நல்ல ஆழத்துக்கு போகவேணும்.'
கணேசன் தன்னை சுதாகரித்துக் கொண்டான். சின்னக் கைகளால் மண்ணைத் தோண்ட ஆரம்பித்தான். தலை கனத்தது.
கண் எரிந்தது. பசித்தது.
ஆனாலும் கணேசன் மண்ணை தோண்டிக் கொண்டிருந்தான்.
அவன் தப்பியாக வேண்டும்.

சின்னக் கைகளில் மெல்ல மெல்ல இரத்தம் கசிந்தது.
○

www.tamilarangam.net



# நாட்டுப்புறத்தில் ஒரு கொண்டாட்டம்

- மோப்பாசா(ன்)

தமிழில் : சந்திரிகா சண்முகராஜா

ஐந்துமாதங்களுக்கு முன்பே, பாரிஸிற்கு அண்மையாகவுள்ள கிராமத்தில் எங்களின் மதிய உணவை எடுப்பது என்று திட்டமிட்டிருந்தோம். அன்று பெத்ரோனில் என்று எம்மால் அழைக்கப்படும் திருமதி. துபோரின் விழாநாள்.

நாங்கள் அந்த நாளுக்காகக் காத்துக்கொண்டிருந்ததால் அன்று நேரத்துடனே எழுந்துவிட்டோம். திரு. துபோர் பால்காரனிடம் கூட்டுவண்டியை வாடகைக்கு எடுத்துவந்தார். வண்டியை அவரே ஓட்டியும் வந்தார். இரண்டு சில்லுகள், இரும்பிலான படிகள், வண்டியை மூடித் திரைச்சீலை. கூட்டுவண்டி மிகவும் நேர்த்தியாக இருந்தது. திரையை விலக்கி நாங்கள் வண்டிக்குள் இருந்தபடியே வெளிஇடங்களைப் பார்க்கமுடிந்தது. திரைச்சீலை காற்றில் அசையும்போது ஒரு கொடிபோலவும் இருந்தது. வண்டியுள் ஒரு செந்நிற பாவாடை அணிந்த ஒருபெண் அவளின் கணவனின் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். பக்கத்திலுள்ள இருக்கையில் ஒருவயோதிபமாதும் இளம் பெண்ணொருவரும் இருந்தனர். சிறுவன் ஒருவனின் மஞ்சள் தலைமட்டும் வெளியே பார்க்கக்கூடியதாக இருந்தது. அவெனியு தே சாம்செலிசே பிரதான வீதியைத்தொடர்ந்து லா போத்து மையோவை அடைந்தோம். பொந்து நியூலி இடத்தை அடைந்தபோது நாங்கள் வரவேண்டிய இடத்தை அண்மித்துவிட்டோம் என துபோர் குரல்கொடுத்தார். அவரின் மனைவி வெளியே இயற்கை வனப்புகளை இரசித்தபடி வந்தாள். கூர்பேவுவா வீதிவளைவின் வலதுபுறம் ஆர்ஜந்தை மணிக்கூட்டுக்கோபுரம் தெரிந்தது. இடது புறம் விடிகாலை வானம்தன்னில் சித்திரம் வரைந்திருந்தது. தூரத்தில் சென்.ஜேர்மனிலுள்ள உப்பரிகைகள் தெரிந்தன. எதிர்ப்புறத்தில் மண்திட்டுக்களின் தொடர் கோர்மையின் புதிய கோட்டையைச் சுட்டிக்காட்டியது. பின்புறம் மைதானத்திற்கும் கிராமத்திற்கும் மேலாக இருண்ட பசுமையான காடுதெரிந்தது.

வெய்யில் முகத்தை எரிக்கத்தொடங்கியது. தூசிப்படலம் தொடர்ச்சியாக கண்ணை மறைத்தது. தெருவின் இருமருங்கும் நீண்டவயல்வெளிகள் துர்நாற்றத்துடன்

இருந்தன. அதைப்பார்க்கையில் குஷ்டநோய் அதை நாசமாக்கியதைப்போலிருந்தது. மெலிந்த உடைந்த கட்டிமுடிக்கப்படாத கட்டிடங்களும், சின்னச்சின்ன குடிசைகளும் வேலைமுற்றுப்பெறாமல் தனித்தனியாக இருந்தன. கட்டிடங்கட்டுபவனுக்கு பணம் கொடுக்காத தகராறினால் அவை கூரையிடப்படாமல் சுவர்கள் மட்டும் நீண்டுகிடந்தன.

கொஞ்சக்கொஞ்சத் தூரத்தில் வெளியான நிலத்தில், புகைக்கூண்டுகள் மரங்கள் முளைத்திருப்பதுபோலக்கட்டப்பட்டிருந்தன. இளவேனிற்காற்றில் பெற்றோல் வாசனையும், இன்னுமேதோவோர் தாங்கமுடியாத துர்நாற்றமும் சேர்ந்துவந்தது.

செயின் நதியினை நாங்கள் இரண்டாவது தடவையாகக் கடந்தோம். சூரிய வெளிச்சம் ஆற்றில் பட்டுத்தெறித்தனால் ஆற்றுநீர் பளபளத்துக்கொண்டிருந்தது. அது பார்ப்பதற்குப்பிரமிப்பைத் தந்தது. நல்ல குளிர்மையான புத்துணர்ச்சிமிக்க காற்றைச் சுவாசிக்கமுடிந்தது. அதன்பின்பு இன்னொரு கஷ்டத்தையும நாங்கள் அனுபவிக்கவேண்டி இருந்தது. தொழிற்சாலைகளின் கரும்புகையினையோ, மலம் கொட்டுமிடத்திலிருந்து வந்த துர்நாற்றத்தையோ அந்ததூயகாற்றினால் மேவிக்கொள்ளமுடியவில்லை.

சிறிது தூரத்தில் வண்டி நின்றது. திரு. துபோர் அங்கிருந்த உணவுவிடுதியின் பெயர்ப்பலகையைப் படித்தபின் ' இந்த இடம் உனக்குப் பிடித்திருக்கிறதா? இதையாவது தெரிவுசெய்வாயாவென சலிப்போடு மனைவியைப்பார்த்துக்கேட்டார். அவள் பார்வையைத்திருப்பி அந்தப்பெயர்ப்பலகையைப்படித்தாள். வீடுபோன்றதோற்றத்திலிருந்த உணவுவிடுதியை நீண்டநேரம் பார்த்தாள்.

வயற்காட்டில், இருகரைகளும் மரங்கள் நடப்பட்டஅந்த வெள்ளைநிறஉணவுவிடுதியின், துத்த நாகத்தாலான பளிச்சென்ற அதன் கதவுகள் திறந்திருந்ததையும், இருபணியாளர்கள் சீருடையுடன் இருந்ததையும் நோட்டம்விட்டபின் அவள் முடிவுசெய்து கொண்டாள்.

## 'அம்மா' வாழ்த்துகிறாள்

1881 ல் பிரெஞ்சு எழுத்தாளர் மோப்பசனால் எழுதப்பட்ட இக்கதையினை தமிழாக்கியிருக்கும் சந்திரிகா சண்முகராஜாவிற்கு வயசு பதினெட்டு. பன்னிரெண்டு வயதில் தனது குடும்பத்தினருடன் பாரிஸிற்குப் புலம்பெயர்ந்த இவர் பிரெஞ்சுமொழியில் தனது கல்வியைத் தொடர்கிறார். பிரெஞ்சு இலக்கியமும் இவரது பாடங்களில் ஒன்று. உயர்தரவகுப்புக்கான பரீட்சையில் (BAC) தமிழை ஒரு பாடமாகவும் தோற்றவிருக்கிறார்.

"என்னால் முடிந்தவரை, திரு. மோப்பாசானிற்கு துரோகமிழைக்காது தமிழாக்கியிருக்கிறேன், ஆனாலும் சில தவறுகள் நேர்ந்திருக்கத்தான்கூடும்" என்று மன்னிப்புக்கோரும் தொனியில் கூறும் சந்திரிகா, முதன்முதலாக தமிழில் எழுதியிருக்கிறார்.

www.tamilarangam.net



தமிழில் ஏற்கனவே அறியப்பட்ட எழுத்தாளர் மோப்பாசானின் காலம் 1850 - 1893.
இவர் 1872 வரை தரைப்படையிலும், 1878 வரை கடற்படையிலும் பணிபுரிந்திருக்கிறார்.
இவரது முதல் நூல் (La Main d'Ecorché) 1875 ல் வெளிவந்தது. 1882 ல் Mlle FIFI என்ற தனது முதலாவது நாவலை வெளியிட்டார்.
வாதநோயால் பாதிக்கப்பட்ட இவர் 1892 ல் தற்கொலைக்கு முயற்சிசெய்து தப்பித்துக்கொண்டார். 1893ல் மரணமானார்.

அது நல்ல பார்வையுள்ள இடம். விடுதியின் பின்புறம்வரை மரங்கள் நடப்பட்டிருந்தன. வண்டி உள்ளே சென்றது. நாங்கள் வண்டியிலிருந்து இறங்கினோம். திரு. துபோர் வண்டியிலிருந்து துள்ளி இறங்கினார். பின்பு திருமதி. துபோர் இறங்குவதற்கு உதவியாக தன் இருகைகளையும் நீட்டி இறங்க உதவி செய்தார். இரும்பினால் செய்யப்பட்ட படி வண்டியின் பீடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் இருந்தது. திருமதி. துபோர் தசைப்பிடிப்புடன் திரட்சியாக இருந்த தனது கால்களை கீழே விட்டாள். அந்த உணவு விடுதியின் அழகு திரு. துபோரை உற்சாகப்படுத்தியது. அவர் மகிழ்ச்சியில் அவளின் தொடையில் கிள்ளினார். பின்பு ஒரு பொதியைத்தூக்குவது போல அவளை தூக்கி தொப்பெனக்கீழே விட்டார். அவள் தூசியினைத் தட்டிவிட்டபடி சூழலின் அழகை இரசிக்கத்தொடங்கினாள். அவளின் வயது கிட்டத்தட்ட முப்பத்தியாறு வரையில் இருக்கும். சதைகூடியவளாகவும், மலர்ச்சியானவளாகவும் இருந்தாள். அவளின் இறுக்கமான இரவிக்கை அவளைச் சுவாசிக்கச் சங்கடப்படுத்தியது. மார்பின் அளவு பெரிதானதாகையால் அது அவளின் நாடி வரை தள்ளியிருந்தது.

துபோரின் மகள் தந்தையின் தோளில் கையைவைத்து மெதுவாகத் தள்ளினாள். மஞ்சள்தலை இளைஞன் சில்லின்மேல் கால்வைத்து இறங்கி வயதான அவனின் பாட்டி இறங்குவதற்கு தந்தைக்கு உதவி செய்தான். வண்டியிலிருந்த குதிரையை அவிழ்த்து மரத்தில் கட்டினோம். வண்டி முன்புறம் விழுந்தது. அதிலிருந்த இருநேர்க்கால்கள் நிலத்தில் விழுந்தன. ஆண்கள் எல்லோரும் மேலங்கியைக்கழற்றிவிட்டு வாளியிலிருந்த தண்ணீரில் கைகளைக்கழுவினோம். பின்பு பெண்கள் ஏற்கனவே அமர்ந்திருந்த ஊஞ்சலை நோக்கிப்போனோம். பதினெட்டு அல்லது இருபது வயதிலான துபோரின் மகள் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தாள். அவளைத் தற்செயலாக நீங்கள் வழியில் காணநேரின் திடீரென காதல்வசப்பட்டு, உங்களை இழந்துவிடுவீர்கள். உணர்வுச்சஞ்சலத்துடன் உங்கள் மனம் அலைபாயும். மெல்லியவளாகவும், உயரமானவளாகவும், இடுப்பு பெரிதானவளாகவும் இருந்தாள். அவளின் தோல் மண்ணிறமாகவும், கூந்தல் கருமையாகவும், கண்கள் காந்தமாகவும் இருந்தன. அவளின் உடை நேர்த்தியான அலங்காரத்துடன் நீண்டிருந்தது. தசைகள் உறுதியுடனும், நிறைவுடனும் இருந்தன. அவளின் நீண்ட அழகியகைகள் தலைக்குமேலிருந்த கயிற்றைப்பிடித்துகொண்டிருந்தன. அவளின் மார்புகள், ஒவ்வொரு ஆட்டத்தின்போதும் எதுவித அசைவுமில்லாமல் நிமிர்ந்து நின்றன. விரைவாக வீசியகாற்றினால் அவளது தொப்பி பின்புறமாக விழுந்தது. ஊஞ்சலின் ஒவ்வொரு திரும்பலுக்கும் அவளின் மெல்லியகால்களிலிருந்து தொடைவரை தெரிந்தது. அவளின் கால்களின் அழகு சிரித்தபடிஅவளை இரசித்துக்கொண்டிருந்த ஒவ்வொரு ஆண்களையும் நிலைகுலையவைத்தது.

இன்னொரு ஊஞ்சலிலிருந்த திருமதி. துபோர் தனிமையில் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். திரு. துபோரைப்பார்த்து தன்னை வந்து தள்ளுமாறு வேண்டிக்கொண்டாள். திரு. துபோர் ஒரு பெரியவேலையைத்தொடங்கப்போவது போல சட்டைக்கையை மடித்துவிட்டுக்கொண்டும் ஒரு வித எரிச்சலுடனும் போனார். அவள் கயிற்றை இறுக்கிப்பிடித்தபடியும், கால்கள் நிலத்தில் படாதபடியும், ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்ததைப்பார்க்க ஒரு பொம்மை அசைவதைப்போல இருந்தது. வேகம் கூடியபோது அவளிற்குப்பயமாக இருந்தது. அவளின் கத்தல் சிறுவர்களை வெருண்டோடவைத்தது. அவளிற்கு முன்புறமிருந்த வேலிக்குமேலாக ஒரு போக்கிரிக்கூட்டத்தின் தலைகள் தெரிந்ததைக் கண்டாள். ஒரு பணியாளர் வந்ததும் அவர்கள் தமக்கான உணவுவகைகளைத் தெரிவித்தனர். துபோர் இரண்டுலீற்றர் வைன் மேலதிகமாககொண்டுவரும்படி சொன்னார். வயோதிபப்பெண்மணி அங்கிருந்த பூனையைப்பார்த்து குஷிப்பட்டாள். பத்துநிமிடங்களுக்கு மேலாக எதுவிதபிரயோசனமுமில்லாமல் கத்திக்கொண்டு பூனையைப்பின்தொடர்ந்தாள். அந்த மிருகம் அவளின் கவனத்தையிட்டுச்சந்தோசமடைந்தது. அவளின் கைக்கு அருகிலேயே நிற்கும். பின் சத்தமிட்டபடி மரங்களைச்சுற்றிநிற்கும்.

நிலத்தைப்பார்த்துக் கொண்டிருந்த மஞ்சள்தலைஇளைஞன் "அதோ பார்! அங்கே நல்ல படகுகள் நிற்கின்றன" என்று திடீரெனச் சத்தமிட்டான். நன்றாக வேலைசெய்யப்பட்ட மரத்தாலான இரண்டு படகுகள் இரண்டுபெரிய மெலிவான பெண்களைப்போல அருகருகே நெருக்கமாக நின்றன. விடிகாலையிலேயோ அன்றி இரவிலேயோ அந்தப்படகில் பயணம் செய்யும் ஆவலை எமக்குத்தூண்டியது. சுத்தம்செய்யப்பட்ட வாய்க்கால்களின் ஓரங்களில் பூக்களிருந்தன. அங்கேயிருந்த மரங்களின் கிளைகள் தண்ணீருக்குள் தோய்ந்திருந்தன. முடிவில்லாமல் நிறைந்திருந்த நீர்க்கோரைகள் காற்றில் நடுங்கிக்கொண்டிருந்தன. நீல நிற மீன்கொத்திப்பறவை ஒன்று வேகமாகப் பறந்துபோனது.

குடும்பத்தினர் எல்லோரும் மகிழ்வோடு அதை இரசித்தனர். ஓ! அது மிகவும் நன்றாக இருக்கிறது! என திரு. துபோர் திரும்பத்திரும்பச்சொன்னார். அவர் படகுகளை நன்கு அறிந்தவர்போல நன்றாகப்பார்த்தார். தனது இளமைக்காலத்தில் தானும் துடுப்புக்களுடன் கப்பலோட்டியதாகச்சொன்னார். துடுப்பை வலிப்பதுபோல அபிநயம் செய்தார். மற்றவர்கள் இருப்பதைப்பற்றி அவர் யோசிக்கவில்லை. முன்பு யுவான்வில்லில் பல ஆங்கிலேயர்களை வெற்றி கண்டதாகவும் பெருமையடித்தார். பெண்கள் படகின் துடுப்புப் போன்றவர்கள். பொதுவாக படகுக்காரர்கள் எவரும் துடுப்பினை விட்டுச்செல்லமாட்டார்கள் என்றார். அவர் சூடாகப்பிரசங்கம் செய்து அந்தப்படகால் ஆறுஇடங்களை எந்த நெருக்குதலுமின்றி ஒருமணிநேரத்தில் கடப்பேன் என்று முரட்டுத்தனமாகப் பந்தயம் கட்டினார்.

உணவு ஆயத்தமாகிவிட்டதாக வாசலில் வந்தவேலையாள் சொன்னான். எல்லோரும் அவசரப்பட்டோம். திருமதி துபோரினால் நல்ல இடத்தைத்தெரிவுசெய்யமுடிந்தது. ஏற்கனவே இரண்டு இளம்ஆண்கள்

www.tamilarangam.net

அங்கு உணவருந்திக்கொண்டிருந்தனர். நிச்சயமாக அவர்கள் தோணிச்சொந்தக்காரர்களாகத்தானிருக்கவேண்டும். ஏனெனில் அவர்கள் படகுகாரரின் ஆடைகளே அணிந்திருந்தனர்.

அவர்கள் கதிரையில், நீட்டி நிமிர்ந்து கிட்டத்தட்ட படுத்திருப்பதைப்போலிருந்தனர். அவர்களின் முகம் வெயில் பட்டுக் கருமையாக இருந்தது. அவர்களின் மார்பு வெள்ளைப்பருத்தியிலான மேலங்கியால் மூடப்பட்டும் கைகள் வெறுமையாயும் இருந்தன. முற்சியுடைய இரு பலவான்கள் என்பதை அவர்களது தோற்றம் காட்டியது. ஆனால் எல்லாவற்றையும்விட அவர்களின் செயற்பாடுகள் நாகரீகமாகவும், நெகிழ்ச்சியானவையாகவும் இருந்தது.

அவர்கள் திரு. துபோரைக்கண்டதும் ஒரு புன்சிரிப்பை உதிர்த்தனர். பின் அவர்களது பார்வை துபோரின் மகள்மீது விழுந்தது. "எங்களிடத்தைக் கொடுப்பதன்மூலம் அவர்களை அறிமுகம் செய்துகொள்ளலாம்" என்றபடி ஒருவன் எழுந்தான். அவன் கையில் பாதிசிவப்பும் பாதி கறுப்புமான ஒரு தொப்பி இருந்தது. இரண்டு படகுக்காரர்களும் தமது உணவுத்தட்டுக்களுடன் சிறிதுதூரத்தில் சென்றமர்ந்து உண்ணத்தொடங்கினர். அவர்களின் மூடப்படாத கைகள் வெளியே தெரிந்துகொண்டிருந்தமை இளம்பெண்ணை உறுத்தியதால் அவள்தலையைத்திருப்பி எங்கேயோ பார்ப்பதுபோலிருந்தாள். ஆனால் திருமதி. துபோர் மிஞ்சின ஆவலினாலும், அவளின் பெண்மை அவளைத்தூண்டியதினாலும் நாணமற்றுத்துணிவுடன் அவர்களைப்பாத்தாள். சிலநேரங்களில் அது அவளது விருப்பமாகவும் இருந்தது. தனது அழகற்றகணவனுடன் அவர்களை ஒப்பிட்டுச்சலிப்படைந்தாள்.

அவள் உள்ளுக்குள் இடிந்துபோய் கால்களை மடித்துவைத்தபடி கதிரையில் ஆடிக்கொண்டிருந்தாள். துபோருக்கு அந்நியர்கள் பெண்கள்மேல் அன்புகாட்டியதும், அவர்கள் தொடாந்து அங்கே இருப்பதுவும் வெறுப்பைஉண்டாக்கியது. அவர் வேறெதையும் நினைக்காது இருப்பதற்கு வசதியான இடத்தை மட்டும்தேடினார். மஞ்சள்தலை இளைஞன் அமைதியாக ஒருபூதத்தைப்போல் உணவருந்திக்கொண்டிருந்தான்.

திருமதி. துபோர் படகுக்காரர்களுடன் பேச்சுத்தொடுக்க விரும்பினாள். அவர்களில் ஒருவனைபார்த்து "இன்று நல்ல காலநிலை" என்றாள்.

"ஆம் பெண்ணே" என்று அவன் இதமாகப் பதிலளித்தான். "அடிக்கடி நீங்கள் இக்கிராமத்திற்கு வருவீர்களா?" "இல்லை. வருடத்தில் ஓரிருதடவை, அதுவும் காற்றுவாங்குவதற்காக. நீங்கள் எப்படி?" "நான் ஒவ்வோரு இரவும் இங்கு படுப்பதற்காக வருவேன்" "ஆ! அது சந்தோசமாக இருக்கவேண்டுமே!" "ஆம்! நிச்சயமாக!" மேலும் அவன் தனது ஒவ்வோருநாள் வாழ்க்கையையும் பட்டணத்துக்காரர்களின் இதயத்தைத் தொடும்விதமாக கவிதைநடையுடன் சொன்னான்.

இளம்பெண் ஆடிப்போய் தலையைத்தூக்கி படகுக்காரனைப் பார்த்தாள். திரு. துபோர் முதன்முறையாக "அதுதான் வாழ்க்கை" என்றார். பின் தனது மனைவியைப்பார்த்து "இன்னும் கொஞ்சம் முயல்கறிவேண்டுமா அன்பே" என்றார். "இல்லை எனக்கு வேண்டாம். நன்றி" என்றாள். அவளது பார்வை அந்த இளம்படகுக்காரர்களின் ஆடைகளில்லாத வெறுமையான கைகளைநோக்கியே இருந்தது. "உங்களுக்கு குளிரவில்லையா என்றாள்" அவர்கள் சிரிக்கத்தொடங்கினார்கள். தமது தவிப்பான திகில் நிறைந்த வாழ்க்கையையும், வியர்வைக்குளிப்பையும், இரவுகளில் பனிக்குளிரினூடான தமது ஓட்டத்தையும் சொல்லி, பயங்கரமான சத்தத்துடன் நெஞ்சில் சத்தம்வரும்படியாக அடித்துக் காட்டினார்கள். திரு. துபோர் தான்முன்பு ஆங்கிலேயர்களை வென்றதுபற்றியே பலதடவைகள் கதையளந்துகொண்டிருந்தவர் "ஓ! நீங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறீர்கள்" என்று அவர்களைப் பார்த்துப் பாராட்டினார்.

இளம்பெண் படகுக்காரர்களையே கடைக்கண்ணால் பார்த்துக்கொண்டிருந்தபோது, மஞ்சள்தலை இளமனிதன், அதிக குடியினால் புரையேறி திருமதி. துபோரின் சில்க்துணியில் துப்பிவிட, அவள் கோபமடைந்தாள். சட்டைக்கறையைக் கழுவத்தண்ணீர் கொண்டுவரும்படி அவனைப்பணித்தாள்.

வெப்பநிலை அதிகரித்துக்கொண்டுவந்தது. ஆற்றுநீரும் வெப்பமடைந்திருந்தது. வைன் மணம் தலையைக்கிறுகிறுக்க வைத்தது.

திரு. துபோர் சத்தமாக ஏப்பம் விட்டபடியே தனது சட்டையின் பொத்தான்களைக் கழற்றித் தளர்வாக்கிக்கொண்டிருந்தார். திருமதி. துபோர் அவரின்செயலைக்கண்டு ஆச்சர்யப்பட்டதுடன் தானும் தனது சட்டையின்பொத்தான்களைக் அவிழ்த்து தளர்வாய் விட்டாள். துபோர் சந்தோசமாக. சட்டையிலிருந்து கழற்றிய அலங்கோலமான கயிற்றை எறிந்துவிட்டு தண்ணீரை குவளையில் ஊற்றி கொஞ்சம் கொஞ்சமாகக் குடித்துக்கொண்டிருந்தார். வயோதிபமாது மதுமயக்கத்தினால் பார்வை மங்கியிருந்தாலும் உறுதியுடனிருந்தாள். இளம் பெண்ணின் முகம் எவ்வித உணர்வையும் வெளிக்காட்டாவிட்டாலும் கண்களை மட்டும் அலைபாய விட்டுக்கொண்டிருந்தாள்.

அவளின் மண்ணிறக்கன்னம் கொஞ்சம் கொஞ்சமாகச் சிவப்பாகிக்கொண்டிருந்தது. கோப்பியுடன் உணவருந்தல் முடிவுக்கு வந்தது. நாங்கள் பாட்டுப்பாடுவது பற்றிக்கதைத்தோம். ஒவ்வோருவரும் ஒவ்வோரு கவிதைவரியைச்சொன்னார்கள். இருபெண்களும் மயக்கத்தோடு ஒன்றும் தெரியாததுபோல் மூச்சுவிட்டுக்கொண்டிருந்தனர். நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டு எழுந்தோம். இரு படகுக்காரரும் அதிகம் குடித்திருந்தும் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்தனர். பாரமான உடல்களையுடைய அவர்கள் வெறியுடனும், சிவந்தமுகத்துடனும் சங்கிலியின் வளையத்தில் தொங்கிக்கொண்டிருந்தனர். அவர்களின் சட்டைகள் கொடிபோல் காற்றிலசைந்து எந்தநேரத்திலும் விழுந்துவிடுவதுபோல் பயமுறுத்தியது.

படகுக்காரர்கள் தமது படகுகளைத் தண்ணீரில் தள்ளிவிட்டு, ஆற்றில் சுற்றுலாச்செல்லக்கேட்பதற்கு பெண்களிடம் வந்தார்கள்.

"துபோர் நீயும் வருகிறாயா?" என்று திருமதி. துபோர் சத்தமாக அழைத்தாள். துபோர் போதையேறிய முகத்துடன் ஒன்றும் புரியாமல் அவளைப் பார்த்தார். அப்போது மற்றய படகுக்காரன் மீன்பிடிக்கும் தூண்டிலுடன் அவளின் அருகே வந்தான். மீன் பிடிக்கும் ஆவலும், கடைக்காரர்களின் ஆலோசனையும் அவரைப்போதையிலிருந்து விழிக்கச்செய்தது. அவர் மற்றவர்களைப்போக விட்டுவிட்டு பாலத்தின் கீழிருந்த நிழலான இடத்தில் போயிருந்து ஆற்று நீருள் காலை விட்டபடி இருந்தார். மஞ்சள் தலை இளைஞன் அவரருகே படுத்திருந்தான்.

ஒரு படகுக்காரன், மற்றவனுக்கு இளம்பெண்ணை விட்டுக்கொடுத்துவிட்டு, திருமதி. துபோரை தான் அழைத்துக்கொண்டு படகுச்சவாரிக்குச்சென்றான். சற்றுத்தூரத்திலிருந்த மற்றப்படகுக்காரனைப்பார்த்து "சிறிய

www.tamilarangam.net

காட்டிற்கு" என்று கத்தினான். மற்றய படகு கொஞ்சம் மெதுவாகவே சென்றது. அந்தப்படகோட்டி வேறெந்த நினைவுமின்றி, படகிலிருந்த இளம்பெண்ணையே உற்றுநோக்கிக்கொண்டிருந்தான். அவனின் உள்ள உணர்ச்சிகள் அவளின் வேகத்தைத் தடுத்தது. படகுக்காரனின் அருகிலிருந்த இளம்பெண் படகு இருக்கையின் கைபிடியில் அமர்ந்து தண்ணீரில் இருக்கும் மகிழ்ச்சியில், இயற்கையின் சுகத்தில் தன்னை மறந்து லயித்திருந்தாள். அவளின் குடிவெறி பலமடங்காய் அவளின் ரசனையைப்பலவந்தப்படுத்தியது. அவள் சிறிது சிறிதாக மூச்சு விட்டதனால் முகம் சிவப்பாகியது. மதுமயக்கம் அவளை வழியிலிருந்த மரங்களுக்கு சல்யூட் பண்ணவைத்தது. சந்தோசஉணர்வும், இரத்தக்கொதிப்பும் அவளின் உடம்பில் கிழுகிழுப்பை உண்டுபண்ணின. தனியே அவனுடன் தண்ணீரில் இருப்பதும் சனநடமாட்டமின்மையும், வெய்யிலின் கொடுமையும் அவளைச்சங்கடப்படுத்தியது. படகுக்காரனின் கண்கள் அவளின் உடலைப் பார்வையாலேயே முத்தமிட்டன.

மெளனமான நிலை பலவீனமான அவர்களின் உணர்வுகளைத்தூண்டின. சுற்றுப்புறங்களையே இருவரும் பார்த்துக்கொண்டிருந்தனர். அப்போது அவன் பெருமுயற்சிசெய்து அவளின் பெயரைக் கேட்டான். ஹென்றியத் என்று அவள் பதிலளித்தாள். ஓ! எனது பெயரும் ஹென்றி என்று சந்தோசப்பட்டான். அவர்களின் குரல் அவர்களைச் சாந்தப்படுத்தியது. அவர்கள் நதியோரத்தை ஆவலுடன் பார்த்தனர். மற்றயதோணி அங்கு நிறுத்தப்பட்டு இவர்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பதுபோலிருந்தது. அந்தப் படகுக்காரன் "நாங்கள் உங்களை காட்டில் சந்திப்போம், நாங்கள் றொபின்சன் என்ற இடத்திற்குப்போகிறோம். ஏனெனில் திருமதி. துபோர் தாகத்துடன் இருக்கிறாள்" என்று கத்தினான். பின்பு சற்று வேகமாகச்சென்ற படகு கொஞ்சம்கொஞ்சமாக அவர்களின் பார்வையிலிருந்து மறைந்தது.

ஆனாலும் அவனின் தொடர்ச்சியான முணுமுணுப்பினை பகுத்துணரமுடிந்தது. ஆற்றில் சத்தம் ஒன்று நடுக்கத்துடன் ஆழமானபகுதியிலிருந்து மேலே வந்தது. சத்தம் பற்றிய ஆராச்சியில் இறங்கினாள் அவள். "ஆற்றில்அணைக்கட்டின் தடுப்பு தீவில் ஆற்றை இரண்டாகப்பிரிப்பதால் வருகின்ற சத்தம்" என அவன் விளக்கம் கூறிக்கொண்டிருந்தபோது நீர்வீழ்ச்சியின் சத்தத்துடன் ஒரு பறவையின் பாடலும் கலந்து அவர்களைத் தட்டி எழுப்பியது. "ஆஹா பறவைகள் நாட்பொழுதில் பாடிக்கொண்டிருக்கும் காலம் இது. எனவே பெண்பறவைகள் அடைகாக்கும்" என்றான். அவள் முன்பொருபோதும் அதைக்கேட்டதில்லை. அது அவளிடமுள்ள கவியுணர்வைத் தட்டி எழுப்பி மகிச்சியூட்டியது. "காணமுடியாத சந்திப்பின் சாட்சியாய் பறவையின் பாட்டைக்கேட்டு யூலியற் மன்றாடிக்கொண்டிருந்தாள்" என்றாள் இளம் பெண். இந்த இசைமோகம் மனிதனின் முத்தத்துடன் சேர்ந்தது. இந்தமுடிவில்லாத உருக்கமான பாடல் இளம்பெண்களின் இறுக்கமானஇதயத்தில் ஒருதிட்டவட்டமான உணர்வினை உருவாக்கும். அவள் இப்போது பறவையின் பாட்டைக்கேட்க விரும்பினாள். "நாங்கள் சத்தம் செய்யாது காட்டினுள் இறங்கி பறவையின் பக்கத்திலிருந்தே கேட்கலாம்" என்றான் படகுக்காரன். தோணி வழுக்குவது போலிருந்தது. மரங்களெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தன. வாய்க்கால் சின்னதாக இருந்ததால் அடர்த்தியான செடியினுள் நுழைந்து படகு நிறுத்திக்கட்டப்பட்டது. ஹென்றியத் அவனின் கைகளைப்பிடித்துக்கொண்டு மரங்களினுள் நடக்கத்தொடங்கினாள். "குனியுங்கள் என்றான் படகுக்காரன். அவள் குனிந்தாள். சிக்கறுந்த அலங்கோலமான கொடிகளினுள், இலைகளின் கோரைகளுள், அவனுக்குத்தெரிந்த கண்டுபிடிக்கமுடியாத இடத்திற்குப்போனார்கள். "எனது ஏகாந்தமான வசந்தமண்டபம் இது" என்றான் அவன்.



அவர்களின் தலைக்குமேலே பறவைகளை ஆதரித்த மரங்களிருந்தன. பறவை ஒன்று பாடிக்கொண்டிருந்தது. அதன்குரல் தொடுவானம் வரை நிறைந்திருந்தது. அங்கே அமைதியைக்குலைத்துக் கொண்ட ஆற்றின் குறுக்காக இன்னொருபறவை பறந்தது. அது அவர்களை சோர்வடையச்செய்தது.

அவர்கள் பறவை பயங்கொள்ளாமல் இருப்பதற்காக ஒருவருக்கொருவர் பேசாது அருகருகாக அமாந்திருந்தனர். மெதுவாக படகுக்காரனின் கை அவளை கட்டிஅணைத்தது. அவள் அவனின் அந்த துணிச்சலான கையை கோபமின்றித் தட்டிவிட்டாள். ஒவ்வொரு தடவையும் அவன் கைகள் தழுவும்போதும் அது அவளிற்குத் தொந்தரவில்லாமல் இயல்பானதுபோலஇருந்தும் அவள் கைகளைத்தட்டிவிட்டாள்.

பறவையின் ஒலியினால் அவள் பரவசப்பட்டு மயங்கிக்கொண்டிருந்தாள். முடிவில்லாத விருப்பமான ஒரு சந்தோசம் அவளைச்சுற்றிவந்தது. மனிதத்தன்மைக்கு மேலான அந்தப்பறவையின் பாடல் அவளது இதயத்தையும் நரம்புகளையும், இளகவைத்து அழவைத்தது. படகுக்காரன் அவளைத்தன்னுடன் சேர்த்து இறுகக் கட்டி அணைத்தான். அவள் அவனின் கைகளைத்தள்ளிவிட முயலாமலிருந்தாள்.

பறவை திடீரென தனது சத்தத்தை நிறுத்தியது. தூரத்திலிருந்து ஹென்றியத் என்றொரு சத்தம் கேட்டது. "பதில்சொல்லவேண்டாம்.

www.tamilarangam.net

பறவையைப்பறக்க
வைத்துவிடுவீர்கள்" என்று
படகுக்காரன் அவளின் காதிற்குள்
சொன்னான். அவளும் பதில்சொல்லும்
நிலையிலில்லை.
திருமதி. துபோரின் சத்தம்
கொஞ்சநேரத்திற்கொருதடவை
மெதுமெதுவாய்கேட்டது. அவளின்
சின்னச்சின்னச்சத்தங்கள்
மற்றயபடகுக்காரனை நிச்சயமாக
கவலைப்படவைத்திருக்கும்.

அந்த இளம்பெண் மென்மையான
உணர்ச்சிகளுக்கு ஆட்பட்டு
அழுதுகொண்டிருந்தாள். அவளின்
சூடான உடலை இனம்புரியாதகூச்ச
உணர்வு ஆக்கிரமித்திருந்தது.
படகுக்காரன் அவளின் தோளில்
சாய்ந்திருந்தான். திடீரென அவன்
அவளை முத்தமிட்டான்.
அவளிற்குக்கோபம் வந்ததால்
அதைத்தத்தவிர்ப்பதற்காக
முதுகினைத்திருப்பிக்கொண்டு
நின்றாள். அவன் அவளைக்கட்டி
அணைத்தபடியே நின்றான். அவன்
திரும்பவும் அவள் உதட்டில்
முத்தமிட்டான். அவளும் அவனது
அன்பில் மயங்கி அவனை
முத்தமிட்டாள். அவளின் மனஉறுதி
உடைந்தது.

சூழலில் எல்லாமே அமைதியாக
இருந்தன. பறவை மீண்டும்
பாடத்தொடங்கியது. அதன் பாடல்
காதலின் வரிகளாய் விளங்கியது.
சிறுஅமைதியின்பின்
மனதைப்பலவீனமாக்கும் ஆறுதலான
இசையைப்பாடத்தொடங்கியது.
மென்மையான இளம்காற்று
இலைகளின் இரைச்சலைக்கூட்டியது.
இரண்டு எரிகின்ற மனங்கள்
பறவையின் பாடலுக்குள்ளும்,
காட்டின் இரைச்சலுக்குள்ளும்
சங்கமமாகின.
பறவையின் ஒலி
கொஞ்சம்கொஞ்சமாக அன்பு
வளர்வதுபோல வளர்ந்தது. மரத்தின்
கீழே திடீரென முத்தச்சத்தங்கள்
கேட்டன. குயில் தனது குரலை
நிறுத்தியது.

கீழேஇருந்து பிரிகின்ற
ஆத்மாவிற்குசொல்வதுபோல் வந்த
பெருமூச்சை உற்றுக்கேட்டது.
அந்தப்பெருமூச்சு சிறிதுநேரம்
நீடித்துக்கொண்டிருந்தது. அவர்கள்
அங்கு தனிமையையும்,
அமைதியையும் கண்டனர்.
பின் பெருமூச்சு அழுகையில் நின்றது.
புல்வெளியிலிருந்த இருவரும்
வெளிறிய முகத்துடன் பிரிந்தனர்.
நீலமான மேகம் அவர்களுக்கு
இருட்டாகத்தெரிந்தது. நெருப்பான
வெய்யில்கூட அவர்களின்
கண்களுக்குத்தெரியாமலிருந்தது.
அவர்கள் அங்கே தனிமையையும்
அமைதியும் கண்டனர். அவர்கள்
அருகருகே பேச்சின்றி ஒருவரைஒருவர்
தொடாமல் விவேகமாக விலகி
நடந்துகொண்டிருந்தனர்.

சமாதானமாகாத
விரோதிகள்போன்றதொரு உணர்வு
அவர்களுக்குள் இருந்தது.
அவர்களின் உடலுக்குள் ஒரு
அருவெருப்பும் எண்ணத்தில் ஒரு
வெறுப்பும் உண்டானது.
சிறுநிமிடஇடைவெளிக்கொருமுறை
ஹென்றியத் அம்மா என்ற கத்தினாள்.
அது காட்டின் அமைதியில் ஒரு
கலக்கத்தை ஏற்படுத்தியது. அவன்,
ஒரு வெள்ளைப்பாவாடை உடுத்திய
கால்கள் மடிந்து
உட்காந்திருப்பதைக்கண்டான். பின்பு
திருமதி. துபோர் கலக்கத்துடனும்,
கண்களில் ஒளியுடனும், மார்புகள்
கலங்கிய நிலையிலும்,
மற்றபடகோட்டியின் மிக அருகில்
அமர்ந்திருக்கும் தோற்றம் தெரிந்தது.
அவர்கள் ஏதோ அதிசயமான
விடயங்களைக்கண்டிருக்கிறார்கள்
என்பதை அவனின் பிரகாசத்துடனும்,
சிரிப்புடனுமிருந்த முகம் காட்டியது.

எல்லோரும் படகுகளை
நோக்கிச்சென்றனர். திருமதி. துபோர்
படகோட்டியின் கைகளைப்பிடித்தபடி
வந்தாள். ஹென்றி சத்தமில்லாமல்
ஹென்றியத்தின் அருகே
நடந்துகொண்டிருந்தான். மூச்சடங்க
முத்தமிட்டவர்களை திடீரென
பிரித்ததுபோல் நினைத்தான்.

கடைசியில் பெசோனிற்கு வந்தபோது
துபோர் வெறிமயக்கம் தெளிந்து
எல்லோருக்குமாகக்
காத்துக்கொண்டுநின்றார்.
மஞ்சள்தலை இளைஞன்
புறப்படுவதற்கு முன்பாக உணவு
விடுதியில்
உணவருந்திக்கொண்டிருந்தான்.
வண்டி முற்றத்தில் பூட்டப்பட்டிருந்தது.
வயோதிப மாது பாரிஸின் சுற்றுப்புறம்
நன்றாக அமையாததால்
அந்தமைதானத்தில் நிற்கப்பயந்து
வண்டியில் ஏறி அமாந்துகொண்டாள்.

எல்லோருடனும் கைகுலுக்கியபின்
துபோர் குடும்பத்தினர் புறப்பட்டனர்.
போய்வாருங்கள் என்று
படகுக்காரர்கள் கத்தினார்கள். ஒரு
பெருமூச்சும், ஒரு அழுகையுமே
அவர்களுக்குப் பதில் கொடுத்தது.

இரண்டு மாதங்களின் பின்
படகுக்காரன் ஹென்றி ரியூது மார்லி
தெருவால் போனபோது "துபோர்
பாண்டவியாபாரி" என்று ஒரு கதவில்
எழுதியிருந்ததைக்கண்டான். அவன்
உள்ளே சென்றபோது திருமதி.
துபோர் வியாபாரமேசையில்
அமர்ந்திருப்பதைக் கண்டான்.
அவனை உடனேயே அவள்
அடையாளம் கண்டுகொண்டாள்.
உபசரணைகளின் பின் அவன்
ஹென்றித்தைப்பற்றி விசாரித்தான்.
"அவள் நன்றாக இருக்கிறாள்,
திருமணம் முடித்துவிட்டாள்" என்று
பதில் வந்தது.
அவன் மனக்கலக்கம் அடைந்தான்.
தொடர்ந்து கேட்டான்,

"யாருடன்?"
"உங்களுக்கு அவனை
நன்றாகத்தெரியும். அன்று எங்களுடன்
வந்திருந்த அந்த மஞ்சள்தலை
இளைஞன்தான்."
அவன் இனம்தெரியாத கவலையுடன்
புறப்பட்டான்.
திருமதி. துபோர் அவனை மீண்டும்
அழைத்தாள்.
உங்களின் நண்பர் எப்படி
இருக்கிறார்? என்று வெட்கத்துடன்
கேட்டாள்.
"அவர் நன்றாகவே இருக்கிறார்"
"அவரை நாங்கள்
கேட்டதாகச்சொல்லவும். அவரை
எங்களைப்பார்க்க வரச்சொல்லவும்.
அது எனக்குச் சந்தோஷமாக
இருக்கும்" அவள்முகம் வெட்கத்தால்
சிவந்திருந்தது.
"நான் மறக்காமல் சொல்லுவேன்,
நான் போகிறேன்" என்றுவிட்டு அவன்
போய்க்கொண்டிருந்தான்.
"இல்லை மீண்டும் விரைவில்
சந்திப்போம் என்றாள்" அவள்.

அடுத்தவருடம், ஒரு
ஞாயிற்றுக்கிழமை, வெய்யில்
மிகுதியான நாளில், ஹென்றிக்கு,
மனதில் மறையாது பதிவாகியிருந்த
அந்தநாள் சம்பவங்கள்
நினைவிற்குவர, அவன் தனது காட்டு
வசந்தமண்டபத்திற்குச்சென்றான்.
அங்கு நுழைந்ததும் ஹென்றியத்
அங்கிருப்பதைக்கண்டு
ஆச்சரியமடைந்தான்.
அவள் கவலையுடன்
அந்தப்புல்லிற்குள் இருந்தாள்.
அருகே சட்டையணிந்த
மஞ்சள்தலைஇளமனிதன் ஒரு
மூடனைப்போல்
தூங்கிக்கொண்டிருந்தான். அவள்
அந்தப்படகுக்காரனைக் கண்டதும்
வெளிறிப்போய் நின்றாள். அவன்,
அவள் மூர்ச்சையடையப்
போகிறாளோவென்றும் பயந்தான்.
பின்பு இருவரும் இதற்குமுதல்
எதுவுமே நடைபெறாததுபோல்
இயற்கையாகக்
கதைக்கத்தொடங்கினர்.

இந்த இடம் அவனுக்குமிகவும்
பிடிக்கும் எனவும்,
ஞாயிற்றுக்கிழமைகளில் அவளின்
நினைவுகளில் திளைப்பதற்காக
இங்கு வருவதாகவும் சொன்னான்.
அவள் அவனை நீண்டநேரமாக்
இமைவெட்டாது
பார்த்துக்கொண்டிருந்தாள். பின் தான்
இந்த இடத்தை ஒவ்வோரு இரவும்
நினைப்பதாகச்சொன்னாள்.
"போவோம் மனைவியே, நாங்கள்
புறப்படும்நேரம் நெருங்கிவிட்டது"
என்று தூக்கத்திலிருந்து விழித்த
அவளின் கணவன் கொட்டாவி
விட்டபடியே சொன்னான்.

●

www.tamilarangam.net



**பா. பிரதீபன்**

அஞ்சு நிமிசங்களுக்கு மேல நிண்டிருப்பன். அதுக்குப்பிறகுதான் ஒருமாதிரி மெற்றோ வந்திது. அவசரம். எல்லாருக்கும் அவசரம். சனமெல்லாம் பாஞ்சு பிடுங்கிக்கொண்டு ஓடிக்கொண்டிருக்குதுகள். என்ன வாழ்க்கை இது? ஏனிப்படி ஓடுதுகள்!

“முதலாளித்துவம் மனிதனை இயந்திரமாக்கவே செய்யும்“ முந்தி ஒருக்கா இயக்கவகுப்பொண்டில அண்ண ஒராள் சொன்னது மண்டேக்குள்ள ஒரு மூலேக்குளால வந்து துருத்திக்கொண்டு நிக்குது. அண்ண பாடமாக்கிவைச்சுச்சொன்னது மாறி அப்பிடியே சொன்னார். இப்ப இயக்கமும்போய் அண்ணையும்போய்...... அண்ணயும் எந்தநாட்டில ஆருக்கு வட்டிக்கு குடுக்கிறாரோ!

இது ஒரு கடைசி மெற்றோ ஸ்ரேசன். குப்பையள் நிரப்புற தகரங்களெல்லாம் மூடுப்பட்டுக் கிடக்கு. இதுக்குள்ளயும் குண்டுகள் வைச்சுப்போடுவாங்களாம். நினைக்க ஒருபக்கம் சிரிப்பாயும் கிடக்கு. ஒருபக்கத்தால செக்குருட்டி எடுத்துக்கொண்டு வர மற்றப்பக்கத்தால வெடிக்குது. திருடனாய்ப்பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒளிக்கமுடியாது என்று வாத்தீன்ர பாட்டைப்பாடவா? அல்லாட்டி கார்ல்மார்க்ஸை கொணர்ந்து முன்னால விடுறதா? எனக்கு ஒண்டுமாய் விளங்கேல்லை. நான் போற பாதையில குண்டுவெடிச்சால் நானும்தான் துலையப்போறன். ஆனாலும் எனக்கென்னவோ கொஞ்சமும் பயம் வரேல்லை. அந்தளவுக்கு வாழ்க்கை விரக்தியாயும் இருக்கலாம்.

“பிரான்ஸ் நாடு இன்றும்கூட உலகெங்கும் நாற்பத்தியேழு நாடுகளை காலனிப்படுத்தி வைத்திருக்கிறது“ ஓம்! இருக்கட்டும். எனக்கு அகதி “அந்தஸ்து” தந்து வாழவைச்ச நாடு. நன்றி மறந்து கண்டபாட்டுக்கு கதைக்கக்கூடாது.

மெற்றோ வர எல்லாரும் உஸ்ஸ்போட்டு தலையைப் படக்கெனச் சரித்துப்பெருமூச்சுவிட்டுக்கொண்டிச் சினம்.

மெற்றோ கிட்டவரேக்கயே கண்டிட்டன்!! அடுத்தவிசயம் யோசிக்கிறதுக்கு நேரமில்லை. தாவீட்டன்.

என்னா தாவல்! எரிஞ்சுகொண்டிருந்த சிகரெட்டை அவசரமவசரமாய் நூத்து மூடிக்கிடந்த அழுக்குக்கூடைக்கு மேல வைச்சுப்போட்டுத் தாவினன்.

நான் இந்தப்பக்கத்தால போக மற்றப்பக்கத்தால எனக்கு நேரெதிராயும் ஒருத்தன்வர வலு றிக்சாய் அவன குறொஸ்பண்ணி அந்தக் குடை இருந்த இடத்தைக் கைப்பற்றினன்.

மாபெரும் சாதனை ஒன்றை நிகழ்த்திவிட்டது போல நிமிர,
அட நாயே! ஒரு அற்ப குடைக்காகவா இந்தத்தாவு தாவினாய்?
மனச்சாட்சி இடிச்சது.

ம்.. எத்தின குடயள மெற்றோக்க துலைச்சிருப்பன். ஆக இது “ஒரு” குடை. ஒரே ஒரு குடை. இதுக்குப்போய்.... ஏன் முந்தித் துலைச்ச இந்தியக்குடைய விட இது பெரிசே!



எங்கட வீட்டில கனகுடையள் இருந்தாலும் இந்தியாக்குடைக்கு ஒருதனிமதிப்பு இருக்கத்தான் செய்திது. எங்கட அம்மான்ரஅப்பான்ர இந்திரப்பழங்குட. அம்மம்மான்ர சின்னக்குடை. அன்ரீன்ர சுருக்குக்குடை. இதவிட அப்பா எங்களுக்காக வைச்சிருக்கிற பெரிய குடை எல்லாத்தையும் ஒருமுறை அப்பா கொழும்பில இருந்து வரேக்க கொணந்த இந்தியாக்குடை அமத்தித்தான் போட்டுது. இப்பயோசிச்சுப்பாக்கேக்க இந்தியாக்குடை அப்பிடி ஒண்டும் பெரிய பிரமாதமாயில்லை. நல்ல கன்னங்கரேலெண்ட கறுப்புத்துணி. நல்ல வெள்ளிக்கம்பியள். பச்சைக்கைபிடி. பெரிய வடிவெண்டில்ல. ஆனால் றலி சைக்கிள் ஊசிலிமிஷின் கணக்கில சாமான் சொலிற். இதவிட இந்தியாக்குட, இந்தியக்குடை எண்டு நாங்களும் ஒருமதிப்பை உயர்த்தினதால அந்த சுற்றுவட்டாரத்திலயே அதுக்கு ஒரு கிராக்கி ஏறித்தானிருந்திது. பக்கத்து வீட்டில இருக்கிற யாரும் இரவல் கேட்டாலும் அந்தக்குடைமட்டும்

www.tamilarangam.net

இரவல்போகாது. மற்றக்குடையளெல்லாம் றோட்டால கத்திக்கொண்டு போற குடைதிறத்திறவனிட்ட குடுத்து பத்துகள் போட்டுக்கொண்டிருக்க இந்த இந்தியக்குடை மட்டும் பவுத்திரமாக இருந்திது.
இப்பிடி மகோன்னதமான குடை சந்தர்ப்பவசமாக ஒருநாள் எனக்கும பள்ளிக்கூடம் கொனடு போகக்கிடைச்சுது.
நானும் பவுத்திரமாக கொண்டுபோய் கடைசி வரைக்கும் பவுத்திரமாகவே காவல் காத்து பின்னேரம் வரேக்க வைச்சஇடத்திலயே பவுத்திரமாய் விட்டிட்டு வந்திட்டன்.
மழை இல்லாததால வீட்டிலயும் அந்த நினைப்பில்ல.
இரவு படுத்திருக்கேக்கதான் நினைப்பு வந்திது. பிறகெங்க நித்திரை.
காலம பள்ளீல போய்ப்பாத்தால் எங்க அது!
அதுக்குப்பிறகு வீட்டில நடந்ததுபற்றிச் சொல்லத்தேவயில்ல.

இப்ப நான் குடைக்கு மேலகுந்தியிருந்து தறுதறுவெண்டு அங்கயுமிஞுசயும் பாத்து முழுசி, மெள்ளம்மெள்ளமா அரச்சரைச்சு குடய சைற்றுக்குத்தள்ளனன்.
இப்ப குடை எனக்கும் சீற்மூலைக்கும் இடையில, என்ர குடை மாரியும் இல்லாதமாரியும் கிடக்கு.

ஒருத்தரும் என்னைக்காணேல்ல. கண்டாலும் என்ன பண்ணுறது!
“செப்பாஆ....” தோளைக்குலுக்கி ஒரு ஆட்டு ஆட்டவேண்டியதுதானே!
எனக்குத்தெரியாதப்பா. குடை இதில கிடக்கு. நான் என்ன செய்யிறது.
ஓ! உன்ர எண்டா கொண்டுபோவன்.

ஒண்டுமட்டும் நிச்சியம் குடைக்காரன் இதுக்குள்ள இருக்கமுடியாது. அவன் இறங்கி இப்ப எங்கயோ போயிருப்பன். சிலவேளை வீட்டபோய் மனிசிக்காரியிட்ட கிழி வேண்டக்கதான் நினைவுவரும்.

சீ.. இது பொம்புளக்குடை. கைபிடி எல்லாம் நல்ல வடிவாயிருக்கு. என்ர மனுசிக்கு நல்ல எடுப்பாத்தானிருக்கும்.

இத துலைச்சவள் எவ்வளவு கவலைப்படுவாளோ!
தற்செயலா யாராவது அன்பளிப்பாக் குடுத்திருந்தால்.......
அதுவும் அவளுடைய காதலனாயும் இருந்தால்....!

அதுக்கு நான் என்ன செய்யிறது! நான் இனி எங்க தேடிப்போவன்! வந்தா சந்தோசமாய்த்தூக்கி உடன குடுத்துட்டுப்போறன். அவ்வளவுதான்.
உதுக்குப்போய் வீணா ஏன் அலட்டிக்கொள்றன.
பத்துக்கு ஒண்டாவது கிடைச்சிதே எண்டு திருப்திப்படுறதை விட்டிட்டு.....

மெத்ரோவுக்குள்ள கொஞ்சம் தள்ளிஇருந்த ஒரு வாட்டசாட்டமான ஒருத்தன் என்னைஎன்னையே பார்த்துக்கொண்டிருந்தான்.
இவன்ஏன் பாக்கிறான்?
ஒருவேளை அவன்ர குடையாய் இருக்குமோ?
ம். மசிர்! தன்ர குடையெண்டால் நேரில வந்து கேக்கவேண்டியதுதானே!
நானென்ன களவெடுத்தே வைச்சிருக்கிறன்.
ஒருக்கால் அங்கையுமிஞ்சயும் ஆடி அசைஞ்சு போட்டு கழுத்தைப் படக்கெண்டு வெட்டி எங்கயோ பாத்துக்கொண்டிருந்தன்.

மனிசிக்கு நல்ல அம்சமாய்த்தானிருக்கும் !
இண்டைக்கு வீட்டைகுடையக்கொண்டு போனால் மனுசி எவ்வளவு சந்தோசப்படுவாள்! அதுவும் ஓசியில வந்தகுடையெண்டால் அவளின்ர சந்தோசத்தைச் சொல்லத்தேவையில்லை.
ஏன் ஓசியெண்பான். வாங்கினதெண்பம். நம்பாள் பாவி.
அப்பிடி நம்பினாலும், வீட்டில ஒண்டுக்கு மூண்டு கிடக்கு இத என்னத்துக்கு நாலாவது எண்டு அரிச்சனை போடுவாள். உண்மையையே சொல்லுவம்.
ஓசிச்சாமானெண்டு எப்பன் சந்தோசமாயிருக்கட்டுமன்.

அடுத்த ஸ்ரேசனில் மெற்றோ நிக்க ஆறேழு பெட்டையள் ஏறிக்கொண்டாளவை. அவளவயின்ர குலுக்கலும் சிரிப்பும், அடடாடாஎன்னா வடிவு! அவர்களுள் ஒருத்தி இமைவெட்டாது என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள்.
இடையிடையே குடையையும் பார்த்துக்கொண்டாள்.
நான் எங்கயோ பாத்துக்கொண்டு இடைக்கிடை கடைக்கண்ணால நோட்டம் விட்டன். அவள் விர்றதாயில்ல.
இதென்னடா வில்லங்கம் பிடிச்சவேலையாக்கிடக்கு!
இந்தாருங்கோப்பா எனக்கு குடைவேண்டாம்.
ஆளைவிடுங்கோ எண்டு குடையைத்தூக்கிக்கொண்டுபோய் குடுப்பமோ ஒண்டும் யோசிச்சன்.
என்ர வாழ்க்கேல ஒருக்காலும் ஓசிச்சாமானுக்கு பொசிப்பேயில்லை.

அடுத்த ஸ்ரேசனில மெற்றோ நிக்க அவளவை எல்லாரும் இறங்கீட்டாளவை. அப்பாடா!

குடையை மெதுவாத்தொட்டுப்பாத்தன். நல்ல பளபளப்பா இருந்திது. புதுசுதான். நல்லபிடி. அனேகமா இதுதான் லேற்றஸ்ற்றாத்தான் இருக்கவேணும். நல்லகலர். மனிசிக்கு எடுப்பாத்தானிருக்கும்.
ஏன் நானும் பாவிக்கலாம்தானே!
ஆனால் ஒரு கண்டிசன். இந்தப்பக்கம் கொண்டரக்குடாது.
வீட்டுச்சுற்றாடலோட வைச்சுக்கொள்ளவேண்டியதுதான்.
திரும்பவும் ஒருக்கால் மடியில எடுத்துவைச்சுப்பாத்து, ஆராவது என்னை நோட்டம் விடுகினமோண்டும் பாத்தன்.
ஒருத்தரும் ஏன் நாயே எண்டும் கணக்கெடுக்கேல்ல.
பிறகென்ன குடை என்ரதானே?

குடை எனக்கெண்டு தொண்ணூறு வீதம் உறுதியானதும் மனச்சாட்சி திரும்பவும் உறுத்தத்தொடங்ககீட்டுது.

“அடேய் நீசெய்யிறது நல்லாயில்லை! உது என்ன சொன்னாலும் களவு களவுதான்“
யோவ்! உப்பிடி எல்லாரும் நினைச்சிருந்தால் நான் ஒண்டையுந்துலைக்கவேண்டி வந்திராதல்லே!
“இஞ்சேர் ஞாயப்படுத்தாதை. மற்றவன்ர பெருளுக்கு அசைப்படுறது சரியான தப்பு”
சும்மா குளறாதை. உப்பிடியெல்லாம் பாத்துத்தான் நான் இப்பிடி ஒட்டாண்டியா நிக்கிறன்.
“என்னவோ சொல்லுறதை சொல்லிப்போட்டன்“
அப்ப என்னை என்ன செய்யச்சொல்லிறாய்?
“உரியவனைத்தேடிப்பிடிக்கேலாது. ஒத்துக்கொள்றன கொண்ட ஆறேரிபி ஒவ்வீசில குடுத்துட்டுப்போ“
என்னால முடியாது. அங்ககுடுக்க, அங்கநாலஞ்சு நாளாகிடந்து தூங்கினப்பிறகு ஆரோதானே கொண்டுபோகப்போறான். அத இப்பநானே கொண்டு போறன். வாறது வரட்டும்.
உந்த மனச்சாட்சி உப்பிடித்தான் அடிக்கடி என்னை ரென்சன் ஆக்குது.

பரபரப்போடு வலு உற்சாகமாயும் இருந்தன்.
நான் இறங்கவேண்டிய இடம்வந்தது.
மனச்சாட்சி எவ்வளவுதான் இடிச்சாலும் என்ரமுடிவில மாத்தம் இல்ல.
இறங்கினன் ஒரு புழுகத்தோடயுந்தான்.

மெற்ரோ போய்க்கொண்டிருந்துது.
மெற்ரோவோட என்ர குடையும்......

அட, ச்சாய்!

□

www.tamilarangam.net

# பகையே ஆயினும்.....

பொ. கருணாஹரமூர்த்தி

இந்த வீட்டுக்கு ஆறுமாசத்துக்கு முன்னர் குடிவந்திருந்தோம். வரும் போதே எதிர்வீட்டுத் துருக்கிக்காரன் மாடிப்படிகளில் பெரிய பலகை ஒன்றை வைத்து இறைச்சி வெட்டிக்கொண்டிருந்தான்.

தரையெங்கும் திட்டுதிட்டாக இரத்தமும், இறைச்சியும், எலும்புத் துகள்களும் பறந்திருந்தன.

--ஏன் உள்ள வைச்சுத்தான் வெட்டிறதுக்கென்ன..............?-- என்றேன்.

--சுவர் பழுதாகிவிடாதா.......?-- என்று பதில் கேள்வி போட்டான்.

--எல்லாருமே படியில வைச்சுத்தான் இறைச்சி வெட்டுவாங்களோ இங்கே........?-- என்றேன்.

அவன் ஒரு கருடப்பார்வை பார்க்க....... மனைவி சொன்னாள்: -

--அவனோட என்னத்துக்கு வீண் பேச்சு........ துஷ்டனைக் கண்டால் தூரவிலகென்றிருக்கு....... இந்த வீடு எமக்குத்தோதுப்படாது....... வேற வீடு பார்த்துப்போயிடுவம்....--

தளபாடங்களை ஏற்றி இறக்கின என் தேக நோ எடுபடவே இன்னும் மாதமாகும் போல இருந்தது. இந்த வீடு எடுக்கப் பட்ட மாய்ச்சல் ஒன்றும் அவள் அறியாததல்ல.

இருந்தும் ஏதோ நூறுமார்கிற்கு டசின் வீடு கிடைப்பதான தோரணையில் பேசினாள்........... .

--முடிஞ்ச வரைக்கும் சமாளிச்சுப்பார்ப்பம்........ அறவே ஏலாமப்போனால் பிறகு பார்ப்பம்.....--

--ம்ம்ம்ம்ம்.......எல்லாம் உங்களுக்கு பிறகு பார்ப்பந்தான்......--

கழுத்தை நொடித்தாள் பெரிய அம்மாமி மாதிரி!

அடுத்த சனிக்கிழமை முழுவதும் சுவரில் எலெக்றிக் டிறில்லரால் தொளைகள் போட்டுக்கொண்டிருந்தான். சத்தம் நாராசமாய் காதைத்தொளைக்கவும் இளையவள் சாம்பவி (ஆறுமாதம்) பயந்து வீல் என்று அலறினாள்.

இன்றைக்கு வீட்டில் இருக்கமுடியாதென்று தோன்ற......

கனகாலமாய் எங்களைத் தங்களிடம் விசிட் பண்ணுவதேயில்லை என்று குறைப்பட்டுக்கொண்டிருந்த நண்பன் ஒருவனுக்குப் போன்பண்ணினேன்.

--உனது நெடுங்காலத்தைய குறை இன்று தீர்க்கப்படுகிறது.--

மனைவி ஓடிவந்து ரிசீவருக்கு மறுபுறமிருந்த காதில் கிசுகிசுத்தாள்.

--சொல்லாமல் கொள்ளாமல் போய் நிக்கப்போறம்...... கறிபுளி இருக்கோவென்றெல்லாம் கேளுங்கோ--

--சாய் கேட்டாலுந்தான்........ இல்லையென்டு ஆரும் சொல்லுவினமே.....எதுக்கும் வழியில இறங்கி மீன் வாங்கிக்கொண்டுபோவம்--.

போனோம்.

சனி விடுமுறைநாள் முழுவதாய் நண்பன் குடும்பத்துடன் முடிந்தது.

மறுநாள் ஞாயிறு பிள்ளைகளுக்கு தமிழ்ப்பள்ளிக்கூடம். மனைவி கூட்டிப்போய்விடுவாள். நான் வீட்டில் தனியே சாம்பவியைப் பார்த்துக்கொள்ள வேண்டும். அவளோ தூங்க மறுத்து ஈரத்துவாலையைப் பிழிவதைப்போல் உடம்பை முறுக்கிக் காட்டி என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தாள்.

போதாக்குறைக்கு துருக்கிக்காரன் பாக்கியிருந்த தொளைகளைப் போடத்தொடங்கினான். அந்த டிறில்லரோ நிமிடத்திற்கு 500 தடவைகள் அடித்து அடித்து தொளைபோடும் வகையானது.

சைரன் பிடித்தது போல் சத்தம் வரவும் சாம்பவி மீண்டும் பயந்து அலறினாள்!

நேரே அவனிடம் போனேன்.

--உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா......... குழந்தைதூங்கமுடியாமல் அழுகிறது....... நேற்றுப்பூராவும் வீட்டிலேயே இருக்கமுடியாதபடி பண்ணினாய்..... போதாக்குறைக்கு இன்றைக்கு வேறு ஆரம்பித்துவிட்டாய்! ஓய்வுநாளில் அமைதியைக் கெடுக்கக்கூடாதென்று சட்டமிருக்கு......... தெரியாதா உனக்கு? --

--சட்டத்திற்கு எனக்கு இன்றைக்கு மட்டிலுந்தான் இதுகள் பண்ண நேரம் கிடைக்குமென்ற சங்கதி தெரியுமா?--

அதிபுத்திசாலித்தனமாகப் பேசுவதாக நினைத்துக்கொண்டு

www.tamilarangam.net

பதில்கேள்விபோட்டான். இனி இவனோடு குஷ்தி போடுவதில்தான் வாழ்வின் பெரும்பகுதி கழியப்போகிறது என்று எண்ணிக்கொண்டேன்.

யார்தான் போன் பண்ணினார்களோ........... சற்று நேரம் கழித்து 2 பொலிஸ்காரர்கள் வந்து அவனை விசாரித்து இரையவேண்டாமென்று எச்சரித்து விட்டுப்போனார்கள்.

பொலீஸ் போனதும் பஸ்ஸர் ஒலித்தது. கண்ணாடியினூடு பார்த்தேன். இறைச்சி வெட்டும் கத்தியை வைத்துக்கொண்டு துருக்கி நிற்கிறார்.

என்னிடமும் திரிசூலமொன்று ஒன்றரை மீட்டர் நீளப் பிடியுடன்

( பண்ணைகளில் உருளைக்கிழங்கு கெலிக்கப்பாவிப்பது) கூரிய இலைகளுடன் இருந்தது , அதை எடுத்துக்கதவின் பின்னே தயாராக வைத்துவிட்டு கதவைத்திறந்தேன்.

--பொலிஸிலேயா கொம்பிளெயின் பண்ணிறாய்...............பாக்கிஸ்த் தானி.........? இன்னொரு தரம் பண்ணினேயென்றால்.........சொரு கிவிடுவேன்....சொருகி..!--
என்றுவிட்டுக்கத்தியின் வாதாரையை சைளரக்கத்தியைப்போல் உள்ளங்கையில் தடவிக்காட்டினான்.

--என்னட்டும் இருக்கு ஐட்டம்......--

லபக் எனத்திரிசூலத்தை எடுத்தேன். மிரண்டுபோனான்.........!

--நீ சொருக முன் உன் குடல் என்ர கையில வளையமாடிக்கிடக்கும்.......--
என்றேன்.
--உன்னை பிறகு கவனிக்கிறமாதிரி கவனிக்கிறன்..........--

--உப்பிடி எத்தனையோ வீரசிங்கங்களைக் கண்டிருக்கிறன் ........ நீ மாறு.........!--
தரையில் காலை ஓங்கி உதைத்துவிட்டு வந்தவேகத்திலேயே திரும்பிப்போனான்.
கடைக்குப் போயிருந்த மனைவியிடம் துருக்கி ஆவேசம் பொங்கிக் கெம்பின விஷயம் நான் சொல்லவேயில்லை. சொன்னால்

வேற வீடு....... என்று உடனேயே ஆரம்பித்து விடுவாள்!

அடுத்த நாள் மாலை நான் வேலையால் வந்தும் வராததுமாய் மகன் கிரிதரன் ஓடி வந்து சொன்னான்:

--இன்றைக்கு ஹாஸண்ட பப்பா ஒரு பெரிய்ய ஆடு வாங்கியாந்தவர்.........!--
(துருக்கிதான்).

--என்னடா உளர்றாய்........?--
--ஒன்றும் உளறேல்ல.......உம்மை...... வேணுமென்டால் அக்காவையும் கேட்டுப்பாருங்கோ.......... --
அக்கா ஆர்த்தி உடனே ஓடி வந்து தம்பிக்கு சாட்சிக்கு ஆஜரானாள்.

--.........ஓமப்பா...... உசிர்ர்ர்ர்...... ஆடு......! இவ்வளவு உயரம்...... --
என்று கையை தரையிலிருந்து இரண்டடி உயரத்தில் பிடித்துக்காட்டினாள்.

--அவை ஆடே வாங்கியிட்டினம்.....



நீங்களெனக்கு இன்னும் நாயிக்குட்டி வாங்கித்தரேல்லை யென்னா.......?--
தன் நீண்ட நாள் ஆதங்கத்தை முன்னூற்றிமூன்றாவது தடவையாகக் என்னிடம் கொட்டினான்.

அன்றிரவு முழுவதும் அவர்கள் வீட்டு பாத்றூம் கடாமுடா என்று குருஷேஷ்திரக் களேபரமாயிருந்தது.

மறுநாள் காலை குப்பைக் கொன்ரயினருள் ஆட்டின் மண்டையோடும் , தோலும் , கொம்புகளும் , நகங்களும் கிடந்தன.

ஹவுஸ் வார்ட்டிடம்(வீடு பரிபாலிப்பவர்) புகார் செய்தேன்.

அவனுமோ --நானும் பல தடவைகள் அவனுக்கு எடுத்துச்சொல்லியாயிற்று...... அழிச்சாட்டியம் பிடிச்சபயல் கேட்கிற மாதிரியில்லை..... துருக்கிக்காரன் ஆட்டை உள்ளுக்குக் கொண்டு வர்றதைக்கண்ட இரண்டு உறுதியான சாட்சிகள் இருந்தால் நாங்கள் பொலிசில முறைப்பாடு கொடுக்கலாம்.........--கொடுப்போமா என்றான்.

மனைவி மீண்டும் தொணதொணக்கத் தொடங்கினாள்.

--கூலிக்கு நாற்று நடபோய் -ம் எல்லைக்கு வழக்குப் பேசின கதையாய் இனி உங்களுக்கு பொலிசும் கையுமாகத்திரியத்தான் நேரம் சரியாயிருக்கும்......... பேசாமல் வேற வீடு பாருங்கோப்பா..........நல்ல அயலான் அமையிறதும் பதினாறு வகைச்செல்வங்களில ஒன்று...... எல்லாத்துக்கும் கொடுப்பினை இருக்கவேணும்.......!--.
பெருமூச்செறிந்தாள்.

துருக்கிக்கும் ஆடு அடிக்கிறது, புல் தரையில் கிறில்மூட்டி இறைச்சி வாட்டிறதையும் தவிர வேறு வேலையேதும் இருப்பதாகத் தெரியவில்லை. சதாகாலமும் வீட்டிலேயே கிடந்தான்.

ஒரு முறை இரவுநடுச்சாமம் தன் வீட்டிலிருந்த அப்புறப்படுத்த வேண்டியிருந்த ஒரு பழைய அலமாரியையும், ஸெற்றியொன்றையும் எப்படித்தான் நகர்த்தினானோ, நகர்த்திக்கொண்டு போய் கீழே வீட்டின் பிரதான நுழைவாசல் அருகில் வைத்துவிட்டுப் போய் போர்த்துக்கொண்டு படுத்துவிட்டான்(முறைப்படி உரிய இடத்தில் கொண்டுபோயே போட வேண்டும், அல்லது அபராதம் எல்லாம் உண்டு).

மேற்படி கைங்கரியம் பிதாமகருடையதுதான் என்பதைக் கண்டுபிடிக்க ஹவுஸ்வார்ட்டுக்கும் சிரமமிருந்திருக்காது.

விடிந்ததும் விடியாததுமாய் போய் அவனிடம் சத்தம் போட்டான்!

அவனோ அவை தன்னுடையதேயில்லை.... தான் போடவேயில்லை- என்று சாதித்தான்.

பின்னேரம் முகத்தில் ஆத்திரம் பிரவகிக்க வந்து கதவைத்தட்டினான்.

--என்ன...?--

--ஹவுஸ்வார்ட்டிடம் என்னைக் காட்டிக்கொடுத்தது நீதானே......? ஒரு வெளிநாட்டுக்காரனாய் வேண்டாம் ஒரு இஸ்லாமியச்சகோதரனாய் இப்படி நீ செய்யலாமா.......?--

--கொஞ்சம் பொறு..... நீ சொல்றபடிக்கு நான் எதையாவது செய்திருந்தால்.....

www.tamilarangam.net

நீ சொல்வது நியாயம்
என்றாகும்...... நான்தான்
எதுவுமே
செய்யவில்லையே.......!--

--சும்மா புழுகாத....... முந்திப்
பொலிஸ்"க்கும் போன்
பண்ணின ஆளல்லா நீ....!--
--உன்னட்ட திட்டு வேண்ட
வேண்டியிருக்கிறதும் எந்நேரம்
பார்.....! முந்தி நீ
எவ்வளவுதான் சத்தம்
போட்டபோதும் நான் சகித்துக்
கொண்டேன்.... பொலீஸ்"க்குப்
போகவேயில்லை...... இப்பவும்
நீ அலமாரியைத்தான்
போட்டியோ...... ஆட்டுத்
தலையைத்தான் போட்டியோ
எனக்குக் கவலையில்லை
ஹாஜி....!--

என் வார்த்தைகள் எதையுமே
நம்பவில்லை என்பதை -உர்-
ரென்ற அவன் உறங்குட்டான்
முகம் காட்டியது.

--இந்த வீடு நமக்குச் சரிப்பட்டு
வராதெண்டு இன்னுமாப்பா
உங்களுக்குப்புரியேல்லை.......?--

--புரிஞ்சு போச்செண்டுதான்
வையுமன்..... இப்ப என்னை
என்ன செய்யச்சொல்லுறீா........?-

--ஆங்ங்....... ஆனந்தி வீட்ல
போய்ப் படுக்கச்சொல்றன்.........!-

ஆனந்தி, என் கல்லூரி
சகமாணவியொருத்தி. என்
இலக்கிய நண்பி. அவ பெயரே
இவள் நான் சொல்லித்தெரிந்து
கொண்டதுதான். பாத்திர
அறிமுகம் போக
மீதிக்கற்பனைகள், இயக்கம்
தயாரிப்பு எல்லாம் இவளே!
எனக்கு ஆத்திரமூட்டவென்று
எண்ணும்போதெல்லாம் இவள்
ஆனந்தி சஹஸ்ரநாமம்
உச்சரிப்பதுண்டு.

சமயங்களில் துருக்கிக்காரனே
தேவலை

எங்களுக்கு வீடு
கிடைத்துவிட்டதென்று பார்க்க
வந்துவிட்டு

--.....பழசுதான் புது
வீடென்றில்லை...... கட்டிப்
பத்துவருஷமென்டாலும்
இருக்கும்...... ஆகப்
பெருத்துப்போச்சு............., ஹைசுங்
(கணப்புக்கானஎரிபொருள்)
காசெல்லே கனக்க
வரப்போகுது.......... ஊ-
பாணுக்கு(சுரங்கரயில்) இன்னும்
கொஞ்சம் கிட்டவெண்டால்..........
சோக்காயிருக்கும்........ --.
என்றெல்லாம் விமர்சனங்களை
அள்ளித் தெளித்தவர்கள்

ஒவ்வொருவரிடமும் தவறாது
மனைவி துருக்கிக்காரன் பண்ணுற
நட்டணைகளையும்
சொல்லிவைக்க அவர்களும் --
இதென்ன எங்கட தேசமே.........
விரும்பின இடத்தில வீடுகட்டி
குடியிருக்க..... எங்கையும் ஒரு
நெகரிவ் பொயின்டும்
இருக்கத்தானே செய்யும்-- என்று
சொல்லி உள்ளார மகிழ்ந்தனர்.

வீட்டின் கொம்பவுண்டினுள்
சிறுவர்களுக்கான ஒரு
விளையாட்டிடம் உண்டு. ஒரு
மணற்குழியும் , சறுக்குச்சாய்வும்

அங்குண்டு. எங்கள் பிள்ளைகள்
அங்கே எப்போதாவது



விளையாடப்போனால் நாங்கள்
யாராவது கண்காணித்தபடி இருக்க
வேணும் அல்லது அடுத்த
பத்தாவது நிமிஷத்துள் ஹாஸன்,
தலையில் மண்ணை
அள்ளிக்கொட்டிக்
கொட்டிவிட்டானென்றோ அல்லது
பாக்கீர் நிக்கருக்குள் தண்ணீரை
வார்த்துவிட்டானென்றோ திரும்பி
வருவார்கள் (அவன்
பிள்ளைகள்தான்).

சின்னக்குஞ்சுகளென்றாலும்
பெரியவர்களையும் மரியாதை
பண்ணத்தெரிந்தே
வைத்திருந்தார்கள். வழியிலோ ,
படியிலோ கண்டால் முந்தையரை
மறந்துவிடாது நினைவுறுத்தும்
வகையில் முகத்தை
அஷ்டகோணலாக்கி
நைக்காட்டவோ, முழு நாக்கையும்
வெளியே நீட்டி பழிப்புக்காட்டவோ
தவறுவதில்லை!

மனைவி சொல்லுவாள்: --
விரியனின் குட்டி நாகம்....... அதன்
குட்டி நட்டுவக்காலி...........
ஆரேனும் எங்கட
தமிழ்ப்பிள்ளையளாய்

இருந்திருக்கோணும் அதிலேயே
துவைச்சுக் காயப்போட்டிருப்பன்
.............! --.

--பாவம் அவர்கள்.........
குழந்தைகள்! பெரியவர்களே
பண்பாட்டு விழுமியங்களை
அறியாதவர்களாக
இருக்கும்போது
குழந்தைகள்தான் என்ன
செய்யும்.......?--

-- யோ......இந்த மனுஷனை
வேறை வீடு
பார்கச்சொன்னால்.......
விளங்காத மாதிரி
என்னென்னவோ எல்லாம்
பேத்துதே..........! கோத்திரத்தில
ஆருக்கும் இந்தமாதிரி
மேற்படியான்
பிசகியிருந்திருக்கோ என்று
ஆராயாமல் அப்பர்
அவசரப்பட்டு
ஐ காலைவிட்டிட்டாரே..........!--
அடித்துக்கொண்டு புலம்புவாள்.

யானையிடமிருந்தும்
தப்பித்துவிடலாம்........ நுளம்பிடம்
முடியுமோ....?.

இவ்வாறு பரிதவித்துக்
கொண்டிருக்குங்காலம்----

ஒரு ஞாயிறு காலை தூக்கமும்
விழிப்பும் கலந்த மோனநிலையில்
பெட் கா.ஃ.பிக்கான காதலுடன்,
கட்டிலிலிருந்தபடியே குலாம்
அலிகானின் கஜலில்
கிறங்கியிருக்கையில்..........

தற்செயலாக முன்னராக
எழுந்துவிட்ட கிரிதரனுக்கும்
ஆர்த்திக்கும் யார் முதலில் கேம்
போயை விளையாடுவது
என்பதில் பெரும் போர் மூண்டு
இழுபறிப்படுகையில் ஆர்த்தி
சற்றே பிடியைத்தளர்த்தவும்
கிரிதரன் நெற்றியில்
இடித்துக்கொள்ள நேர்ந்தது.
இதனால் கடுஞ்சினமுற்ற தாய்
ஆர்த்தியின் முதுகில் -பொளாச்-
என்று சாத்தவும்
துடித்துப்போனாள். விசித்துக்
கொண்டு போய் தன் அறைக்குள்
-ஸோலோவாக -வயோலா- வாசிக்க
ஆரம்பித்தாள்.

-கஜலில் துய்க்க முடியாதபடிக்கு
ஏதடா இடைஞ்சல்- என்று
எண்ணவும்............ பஸ்ஸர்
வேறு -கிர் கிர்- என்கிறது.

-ஆர்த்திக்கண்ணா போய்
கதவைத்திறவடா- என்றேன்.

--ங்ங்ங்ங்........நான் இன்னும்
அழுது முடிக்கேல்ல டாடி......!--
என்று விட்டு விட்ட இடத்தில்
இருந்து தொடர்ந்தாள்.

இன்று ஞாயிறு கடிதங்கூட
வராதே..... யாரயிருக்கும்.......?

www.tamilarangam.net

யோசனையுடன் சாரத்தை இறுக்கிக் கட்டிவிட்டு . ஒரு ஷர்ட்டை எடுத்துப் போட்டுக்கொண்டு போய் கதவைத்திறந்தால்.............

நான் என்றுமே காணாதபடி -டிப் டொப்- கோட்ஸுட்டில் துருக்கி , ஏற்றாற்போல் மெட்டாக உடுத்திய மனைவியும், பிள்ளைகளுமாக ஸ்ரீசோமாஸ்கந்தக்கோலத்தில் எங்கேயோ தொலைப்பயணம் புறப்பட்டவர்கள்போல் காட்சிதந்தான்!

எதுக்கிப்ப இங்க வாறான்...........

நான் ஒன்றுமே புரியாதபடிக்கு நெற்றியைச்சுருக்கவும்.....................

--நாங்கள் ஊருக்குப் புறப்படுகிறோம்...... அதுதான் குட் பை சொல்ல வர்றோம்........--என்றபடி கையை நீட்டினான்.
நீண்ட அவன் கைகளைக் குலுக்கியபடியே கேட்டேன்:

--என்ன Urlaub (விடுமுறையா)பா..... துருக்கிக்கா......-- என்றேன்.
--Keinen Urlaub......fuer immer....!-- ( விடுமுறைக்கல்ல..... நிரந்தரமாய்......! ) முகம் ஓடிக்கறுத்தது.

--Oh.......Was........(என்ன)........!!!!-

-ஜா....... கொலிகே...... எங்கள் அகதி விண்ணப்பம் மூன்றாவது தடவையும் இறுதி நீதிமன்றினால் நிராகரிக்கப்பட்டு விட்டது.......

இனி அப்பீல் எடுக்கமுடியாது.......... கிளம்புவதைத்தவிர வேறு மார்க்கமேயில்லை.......-- அவன் குரல் உடைந்து கரகரத்தது.

என் கண்முன்னேயே பனிமலை ஒன்று தகர்ந்து தண்ணீராய் ஓடியது. இதயம் இனம்புரியாத வலியில் துவண்டு துடித்தது.

அவன் மனைவி

--உங்களுக்கு ஆட்சேபம் இல்லையென்றால்..........எங்களிடமுள்ள சில பொருட்களை உங்களுக்குத் தரலாமென்று விரும்புகிறோம்......-- என்றபடி ஒரு பிளாஸ்டிக்பை ஒன்றை மனைவியிடம் நீட்டினாள்.

தயங்கி அவள் என்னைப்பார்க்க -- பரவாயில்லை வாங்கும்--என்றேன்.

--Danke--

என்றபடி வாங்கிக்கொண்டு உள்ளே போனவள் கிரிதரனுக்கு பாடசாலை ஆரம்பிக்கும்போது போடுவதற்கு வாங்கிய புதியசெற் உடுப்பொன்றை இன்னொரு பிளாஸ்டிக்பையில் வைத்து ஹாஸனிடமும், ஒரு சொக்கலேட்பாரை பாக்கீரிடமும் தந்தாள்.

மீண்டும் -குட் பை- சொல்லியபடி கைலாகு தந்தான், துருக்கியர் பாணியில் என்னைக் கட்டிப்பிடித்து இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி முத்தமிட்டான்.

எல்லோர் கண்களுமே தளும்பி நின்றன. பிரிவு இன்னாததுதான்!

அவர்களை பிரிந்து போவதை எம்வதியும் அறை ஜன்னலால் கண்மறையும் வரையில் எட்டிப்பார்த்துக் கொண்டு நின்றோம். பின் மனைவி அவர்கள் தந்துவிட்டுப்போன பையை ஆராய்ந்தாள்.

அடியில் கனதியாக இருப்பது உருளைக்கிழங்கும் வெங்காயமுமென்று ஊகத்திலேயே புரிந்தது. மேலே பிரித்தும் பிரியாமலும் சில மா , சீனிப்பக்கெட்டுக்கள், கொஞ்சம் வாட ஆரம்பித்துவிட்ட காய்கறிகள், எண்ணைய்ப் போத்தல்களின் நடுவே நிறுதிட்டத்திமாய் வெள்ளியென பளபளத்துக்கொண்டு கிடந்தது அவனது கத்தி!

□□□

பெர்லின்.23.பெப்ரவரி.97

## ஓவியங்கள்!

அம்மாவை அழகுபடுத்த ஓவியங்கள்தேவை. உங்கள் உங்கள் ஆக்கங்களுக்கு பொருத்தமான ஓவியங்களை தேடி அனுப்புவீரானால் நல்லது. உங்களுக்கு அருகில் ஓவியர்கள் இருந்தால் அவர்கயைும் உற்சாகப்படுத்துங்கள்! அம்மாவின் அட்டைவரை ஓவியங்கள் விரும்பப்படுகின்றது. எங்காவது புத்தகங்களில் கத்தரித்ததாகஇருந்தால் புத்தகம்பற்றிய விபரம் முக்கியம்!

## படைப்பாளிகளுக்கு!

கணனி வசதி உள்ளவர்கள், உங்கள் ஆக்கங்களை கணனிமூலம் பதிப்பித்து உதவுவீர்களானால் உதவியாக இருக்கும். எழுத்துப்பிழைகளும் தவிர்க்கப்படும். படைப்புக்களில் வரும் எழுத்துப்பிழைகள் பாரதூரமானவைதான். இவை அசட்டையீனமாக விடுபடுபவையல்ல. இயலாமையே காரணம். நேரத்துடனே ஆக்கங்களை அனுப்பிஉதவுவீகளானால், கணனியில் பதிவுசெய்தபின் உங்களிடமே திரும்பவும் அனுப்பிச் சரிபார்த்துக்கொள்ளுதல் இன்னுமொரு சுலபமான வழியாக இருக்கும்.

இந்த இதழை கணனிமூலம் பதிப்பித்துதவியவர்கள்:
பண்ணாகம் துரைசுதன்,
புவனன்,
பொ. கருணாஹரமூர்த்தி.

தலைப்பு ஓவியங்கள்
அ. தேவதாஸ்

## கிடைக்கப்பெற்றோம்!

**'படி'**
**(இலக்கிய இதழ்)**
"Pakkiya Bawan"
Kandaiyah Overseer Road,
Nochchimunai, Batticaloa.
Sri Lanka.

www.tamilarangam.net

யமுனா ராஜேந்திரன்

# ஞாபகம்

ஆறு மணிக்கு அலாரம் அடித்தது. வழக்கம் போல அரை மணிநேரம் படுக்கையில் கிடந்து கைகளைபிடறிக்கு வைத்து மல்லாக்க படுத்திருந்து நொடிபிடிவாத முடிவில் எழுந்தாயிற்று. ஜட்டி போடவில்லை. லுங்கியையும், பனியனையும் படுக்கையில் தயாராக வைத்துவிட்டு தீர்ந்துபோன சோப்பை ஞாபகமாகத்தேடி பாத்துறூமுக்குள் நுழைந்து மேமாத சலனமில்லாத காற்றுக்காக ஜன்னலை அகலத் திறந்துவிட்டு டப்புக்குள் இறங்கியாயிற்று. கொஞசம் குளிர்நீரும் அவதானமாக வெந்நீரும் திறந்துவிட்டு குதத்தை மெதுவாக வைத்துவிட்டு போதுமாக இரண்டு குழாய்களையும் திறந்து விட்டேன். முதலில் முதுகு, கழுத்து நனைய வேண்டும். பிறபாடு பிடரி இடுப்பென நனைந்து முழு உடம்பையும் தண்ணீருக்குள் முக்கினால் சந்தோஷம்.

அவளை வழக்கமபோல் மனசுக்குள் திட்டினேன். மூடப்பட்ட கதவுகளுக்கிடையில் இப்படி வைவது ஒரு சந்தோஷம். சுகமாக மெதுவாக அன்பாக வாஞ்சையுடன் குறியைத் தடவிவிட்டேன். கால்களை நீட்டி, கொட்டிக் கொண்டிருந்த தண்ணீர் வெந்நீரை சமமாக அள்ளி வாய்க்குள் நிரப்பி அளாவி விழுங்க ருசியாக இருந்தது. என் சின்னச் சிட்டுக் குருவியே என மகளுக்கு அன்பாக முத்தமிட்டேன். அவளைப் பார்த்து மூன்று வருடங்களாகி விட்டது. அவளுக்கு அனுப்பிய புத்தகங்களும், துணிமணிகளும் பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர் என்ற குறிப்புடன் திரும்பி வந்து விட்டது. அடுத்த வீட்டில் வழக்கம்போல வேலைக்கு போகும் முன் அம்மாவிடம் சண்டை போடும் கறுப்புப் பெண்ணின் குரல், பக்கத்து வீடுகளிலிருந்து வரும் சப்தம் ஊர்க்காற்றின் குளிர்போல சுகமானது.

ஊரிலிருந்தால் அநேகமாக இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை திட்டமிட்டு மிச்சம் பிடித்த ரூபாயை எடுத்துக் கொண்டு போகும் வழியில், வருகிற பஸ்சில் இருக்கிற எல்லாப் பெண்களும் முதல் தடவையாக அழகாக இருப்பார்கள். இறங்கி மார்க்கெட்டுக்குள் நுழைந்தால் மீன் கடைகளின் கவுச்சை வாசம் கொஞ்ச நேரத்தில் மறந்து போகும். முனிசிபாலிட்டியில் இருந்து வாசலை அடைத்துக்கொண்டு முலைகளை வேணுமெண்டே உரசிக் கொண்டு நகரும் நகரசபைச் சிப்பந்திகளின் அயர்ன் பண்ணப்பட்ட கால்ராய்களின் ஓரத்தில் சாணியின் நிறம்படும். பழக் கடைகள் பழைய சாமான் இரும்புக் கடைகள் தாண்டிப் போனால் மனசுக்குள. சந்தோஷம் முட்டும்.

போய்ப்போய் எனக்குப் பழகிவிட்டிருந்தது. சாண்டில்யன், இந்துமதி, சிவசங்கரி பைண்டுகள் இருக்கும். இங்கு பெட்ரோல் சைட்டுகளிலும் பெண்கள் நிக்கிறதான இந்தியக் கடைகளில் கவிழ்த்து வைக்கப் பட்ட நிலையிலும் தென்படும் அம்மணப் புத்தகங்கள். அப்போது மழையில் நனைந்து புத்தகங்கள் சாம்பல் நிறமாக அங்கு நிறைய விலையில் விற்பனையாளன் பக்கத்தில் வைத்துக் கொண்டிருப்பான். சரோஜாதேவியின் 18 பக்கப் புத்தகத்தில் இருக்கிற திகில் அந்தப் புத்தகங்களில் இல்லையென நடராஜனும், கணேசனும் கடைசிப் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார்கள்.



டிரவல் கார்டு எடுக்கும்போது நிறைய திட்மிட்டுதான் எடுக்க வேண்டியிருக்கிறது. நேற்று ரஞ்சனுக்கு மொழி பெயர்க்கப் போனேன். அயோக்கியர்கள் சாப்பாட்டுக் காசையும், வாடகைக் காசையும் நிறுத்தி விட்டார்கள். அவனை முடிந்து வீட்டுக்கு போகச் சொல்லிவிட்டு தார் ரோட்டில் நின்றபோது 'தேமஸ்' நதியில் மிதக்கும் 'கோக்' போத்தல்கள் உடனடியாக ஞாபகம் வந்தது.

தூக்கத்தில் திடீரென்று விழித்தால் கூட அந்த நிரவப்படாத கல் தரைகளில் கோணலான கால்களின் மீது போடப்பட்டிருக்கும் பலகைகளின் வார்னீஸ் அடிக்கப்படாத நிறம். இரண்டு வருடங்களுக்கு முன் போனபோது மாரிக்காலத்திலும், குளிர் நாட்களிலும் அதேரெண்டு ஆட்கள் அநேகமாக பன்னிரெண்டு நீள பெஞ்சுகளில் புத்தகங்களை அடுக்கி வைத்திருப்பார்கள். அதிலிருந்து தள்ளி நதிக்காற்று படுகிற தூரத்தில் கறுத்த ஷெல்புகளுக்கு பக்கத்தில் நாற்காலி போட்டு உட்கார்ந்து புகையிலையைத் திறந்து காகிதத்தை விரலில் நீவி அடைத்துக் கொண்டிருப்பார்கள். போனவுடனே புத்தக பெஞ்சுகளில் நீளத்தையும் எண்ணிக்கையையும் பார்த்துக் கொள்வேன். அதிகமாக இருந்தால் ஒருநாளும் உடனடியாக போய் பார்த்து விடமாட்டன். பிறபாடு நிதானமாக வெறுமையில்லாத போது போவேன்.

நேற்று நிறைய நேரம் செலவிட முடியாது என எனக்குத் தெரிந்தாலும் போனேன். ரோட்டோரக் கடைகளில் ஒன்றையும் காணோம். டெலிபோன் பூத்துகளில் கலர்கலராக நோட்டீஸ்களில் பின்புற பெண்கள் நாற்காலியில் அமர்ந்திருந்தார்கள். புதிதாக வந்த இந்தியப் பெண்ணின் இலக்கம் கண்ணுக்குள் தெரிந்தது. பொலிசுக்கும், தொலைபேசி நிறுபனத்திற்கு எதிராகவும் வழக்குப்

www.tamilarangam.net

போட்ட தீர்மான அப்பெண்கள்மீது மரியாதை வந்தது.

ஆண்டு திரைப்பட விழாவுக்கு முன்பாக இந்த நவம்பருக்குள் பாரையும் சாப்பாட்டு விடுதியையும் வெள்ளை கறுப்பு மெட்டல் ஆசனங்களிலும் மேற் கூரையில் பிரதி பலிக்கும் தரையுமாக கட்டப்போவதாக பிரசுரத்தில் படித்திருந்தேன். பழைய விடுதி கலைந்து கிடந்தது. ஜீன்ஸ் பேண்டுகளில் மடமடத்த வெள்ளை பெயிண்டுடன் வெள்ளை நண்பனொருவன் சிரித்தான்.

நிற்கும் பெண் என்னிடம் ஏதோ கேட்பதாக அவதானிக்க நினைத்தபோது அவள் தயங்கி பின்வாங்கி எனக்குத் தூரத்தில் வந்து கொண்டிருந்த வெள்ளை மனிதனிடம் போனாள். பிலிம் ஸ்கிறிப்டுகளையும் மிஞ்சியிருந்த ஐந்து பௌண்டு நோட்டையும் நான் யோசித்துக் கொண்டிருந்த போது அவர்கள் தற்காலிக விடுதிக்குள் போனார்கள்.

பனிக்காலத்து காற்றைப்பார்த்து புத்தகங்களின் மேலட்டைகள் திறந்து கொண்டு சலசலத்தது. வரிசையாக புறாக்கள், குளிர் காற்றில் நனைந்து அவ்வப்போது வரும் வெயிலில் காய்ந்து விநோதமான வாசமொன்று அந்தக் காகிதங்களில் இருந்தது. மழைபெய்த கிராமத்து புழுதி மண்ணை ஞாபக மூட்டும் வாசம். காகித கைக்குட்டைகளின் மடிப்புபோல சில பக்கங்களில் வரிகள் ஓடும்.

பார்ஸி பெண் கவிகளின் கறுப்பு முகமூடிகளுக்குள் கண்கள் தெரிந்தன. நிறைய பெங்குவின் புத்தகங்கள் ஆரஞ்சு நீல நிறங்களில் 80 பக்கப் புத்தகங்கள், 60 அல்லது 70களில் வந்த புத்தகங்கள். இந்துமத புராணங்கள் பற்றியும், இன்கா அஸ்டக் இடிபாடுகள் பற்றியும் புத்தகங்கள், அஸ்டக் இன்கா என்று இப்போது புதிதாகக் கார்கள் வந்திருகிறது. ஒரு மெக்ஸிசிகோ கவிதையொன்றின் எலும்புக் கூடுகளும் கபாலங்களும் பெயர்க்கப்பட்ட கற்களின் புகைபடங்களும் தோன்றின. ஆரஞ்சு நீலநிற அட்டை புத்தகங்களில் 200 பக்கத்துக்குமேலான புத்தகங்கள் வசீகரமற்றவை. அமெரிக்கக் கக்கூஸின் சமூகவியல் ஆய்வுகள் அவற்றில் நாறுவதாக எனக்குப்படும்.

அமெரிக்கன் ரெவ்யூஆப் புக்ஸில் அலன் ஜின்ஸ் பர்க் எல்எஸ்டி அடித்து கொண்டு வியட்நாம் எதிர்ப்புக் கோஷம் போட்டுக் கொண்டிருந்ததும் அடிக்கடி மாறிமாறி ராத்திரி லுங்கியில் காய்ந்த கறைகளின் வெம்மை பற்றியும் புரிந்து கொள்ள புத்தகமலைகளின் இடுக்குகள் தோதாகவிருந்தன திண்டுதிண்டாக புத்தகங்கள் வைத்துக்கொண்டு அதட்டிக் கொண்டிருக்கும் பட்டைக் கண்ணாடி போட்டா, பெரிய மீசை மழித்த முகங்களுக்கு மத்தியில் புத்தகக் கடைக்காரப் பையன் எனக்கு கடவுள் மாதிரி பரவசமூட்டினான்.

தில்லான்ஸ் போயில்ஸ் போன்றவற்றில் நிறைய கம்யூட்டர்களினால் கடை இயங்கும். தேடுகிற சுகத்தை அவர்கள் வைக்க மாட்டர்கள். ஒரு முறைதான் போனதாக ஞாபகம். கருத்தியல்பற்றி அறுபதுகளில் வந்த புத்தகங்கள் தற்பொழுது கிடைக்காது என்ற பதிலை சதா சொல்பவர்கள். சேரிங் கிராஸ் பெண்கள் உலக ம்முழுதுமின்று வருவார்கள். ஈரானியப் பெண்கள்தான் அழகானவர்கள் என்று சொல்பவர்களை மடக்குவதற்கு, நான் சேரிங் கிராசுக்குத்தான் நணபர்களை கூட்டிப் போவேன். போனமுறை சீக்கிரமே வாருங்கள் என்று சொன்னாள் என்று ஸ்பானிஸ் பெண்ணின் கறுத்த முடிக்கற்றைகளின் கிறக்கத்தில் போய் நிற்பேன். மேலிருந்து கீழாக இறங்கினால் புத்தகங்களின் மக்கத் தொடங்கிய மணம் வரும். ஃபீவர் இருப்பதால் மூக்கி விடைத்துக் கொண்டு தும்மல் வர விற்பனையாளன் நிமிர்ந்து ஒரு மாதிரி பார்ப்பான். ஸாரி சொல்லா விட்டால் முறைப்பான்.

இதனால் எல்லாம்தான் ஆற்றங் கரையின் மேலிருக்கிற சில்லிட்ட கற்களின் மீதிருக்கிற பெஞ்சுகளின் மீது பரப்பப்பட்ட புத்தகங்களில் லயித்துப்போய் ஸவுத்பேங்க் வளாகம் எனக்குப் பிடித்திருந்தது. கண்ணாடிகள் உடைந்து பிளாஸ்ரர் ஒட்டிய பழைய புத்தகக் கடைகளில் ஐந்து பவுணுக்கு அநேகமாக நான்கு புத்தகம் வரை வாங்கலாம். எசடின்பார்க் பெப்யூ 1-50 க்கும் என் கவுண்டர் 25 பெனிக்கும் கிடைக்கும். சில புத்தகங்கள் அப்போதுதான் நாற்பது வருடங்களுக்கு பின் பொலிவுகண்டு அடியிலிருந்து கிடைக்கும். பெரும்பாலும் வில் 5-50 க்கு மேல்தான் இருக்கும். லோக்கல் லைபிரரியில் செய்தமாதிரி அதை எடுத்து ஏதேனும் செல்பில் ஒழித்துவிட்டு காசு பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்.

நேற்று நான் திட்டமிட்டு போகவில்லை. ஐந்து பவுன் அட்வான்ஸை கொடுத்துவிட்டு தெரிதாவின் இலக்கியம் பற்றியும், பனானின் அனுபவ இலங்கியல் பற்றியும். அதனது இலக்கியதரம் பற்றியும் அவனிடம் இரண்டு நிமிடம் சொல்லிவிட்டு-அவன் புத்தகவிலை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு மீதி 10 பவுன் என்றான். நான் வருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

அண்டர்கிறவுண்ட் ரயில்வே ஸ்டேஷன் காகித குப்பைகளில் பீ இருக்காது. ஊரில் பீ சுற்றிப்போட்ட காகிதங்களிலிருந்து தேடி எடுத்து நான் நிறைய விசயங்கள் சேர்த்திருக்கின்றேன்.

பழைய புத்தகக் கடைக்காரர்கள் உலகம் முழுக்க மனசு நிறைய அன்புடன் புரிந்துகொள்ளும் மனசுடன் படைக்கப் பட்டிருக்கிறார்கள். அநேகமானோர் நானயமானவர்கள். எங்கள் ஊரில் பெண்கள் பழைய புத்தகங்கள் விற்கிறவர்களாக இருப்பதில்லை என்று நினைத்தேன். பெண்களின் முகத்தில் வழிகிற வியர்வையும் புத்தகங்களில் படிந்த மண் வாசம் வீசும் முந்தானையும் இருக்கிற கடைகள் இருந்திருந்தால் நான் இங்கே வந்திருக்கவே கூடாது என்கிற எனது நம்பிக்கை இன்னும் திடப்பட்டிருக்கும்.

அன்று மழை பெய்யும் என்று சொல்லியிருந்தார்கள். அடுத்தநாள் போக எனக்கு மனம் கொள்ளவில்லை. நான் போனபோது புத்தகங்களை சேகரித்து கறுத்த பெரிய பெட்டிக்குள் வைத்துக் கொண்டிருந்தார்கள். பிக்காஸோவின் தொப்பி போட்டிருந்தவர் நட்பாக சிரித்தார். அவரிடம்தான் நது பவுன் கொடுத்திருந்தேன். கிழிந்திருந்த யு4 ஸைஸ் பிரவுன் கவரின் மேல் என் பெயரில் மிச்சப்பணம் பார்த்து புத்தகங்களை எடுத்துக் கொடுத்தார்.

புத்தகங்களுக்கு நெஞ்சோடு சேர்த்து தனித்தனியே முத்தம் கொடுக்க வேண்டும் போலிருந்து. அவற்றைப் பார்த்தபடி, ஆட்கள் அற்ற இரும்புப் பெஞ்சில் போய் உட்காந்தேன். புழுதி நிறத்தில் ஆறு. இாகிதங்கள், சிகரெட் பக்கட்டுகள், டின்கள் என கரையில் ஒதுங்கிக் கிடந்தது தெரிந்தது. ஆணுறைகளும் கிடந்தன.

பார்த்துக் கொண்டே இருந்தபோது எனது அறையில் புத்தகச்செல்புகள் உடைந்து போனது ஞாபகம் வந்தது. ஸ" பிய்ந்து போய்விட்டிருந்தது. ஸ"லேசை லூஸ் செய்து பிய்ந்துகிடந்த பாகத்தையும் சேர்த்துக் கட்டிவிட்டு இரவு வரும்வரை காத்திருக்க முடிவு செய்தேன்.

ஸ" வாங்க வேண்டும் என நினைத்துக் கொண்டேன். இனி இதைப் போட்டுக் கொண்டு நடப்பது சாத்தியமில்லை. குழந்தையொன்று தாயை தூரவிட்டு திரும்பிப் பார்த்து கீச்சிட்டபடி ஓடி வந்து கொண்டிருந்தது. அது விழுந்துவிடும் என நிச்சயமாகப் பயந்து தூக்கித் தூசுதட்டி பிஞ்சுக் கன்னத்தை வருடிவிட, அவஷ்தையுடன் எழுந்திருக்கும் கால்களை நிலத்தில் அழுத்தமாக ஊன்றிக் கொண்டேன்.

❖

www.tamilarangam.net

# காய்தல்

ஷோபாசக்தி

எனக்கும் அங்கிளுக்கும் நல்லவெறி.

அங்கிள் ரோட்டு நீட்டுக்கு ஆடி ஆடி பாட்டு படிச்சுகொண்டு வந்தார். ஆனால் நான் "ஸ்ரெடி" நேரம் இப்ப இரவு பன்னிரெண்டு மணியிருக்கும். என்ர "றூமு"க்கு போக இன்னும் பத்து நிமிசம் நடக்க வேணும்.

இப்ப எங்களுக்கு குறுக்கால இரண்டு வெள்ளைக்கார பொம்பிளப்பிள்ளையள் வந்திச்சினம். வந்து எங்களட்ட சிகரெட் கேட்டிச்சினம். அங்கிள் ரெண்டு சிகரெட் குடுத்தேர். அவையள் நாலுதரம் "மெசி" சொல்லிச்சினம். அதில ஒரு பிள்ளை ரெண்டு கையையும் நெஞ்சில வைச்சு நிமிந்து நிண்டு கும்பிட்டு மெசி சொல்லிச்சு. அங்கிள் இன்னும் ரெண்டு சிகரெட் குடுத்தேர்.

வெறி எண்டு இல்ல. . . . . அதுகள் கும்பிட்டுப் போட்டுதுகள் எண்டு இல்ல. . . . .அதுகள் பொம்பிளப் பிள்ளையள் எண்டு இல்ல. . . . .அங்கிளின்ர குணமே இதுதான். ஆருக்கும் ஒரு பிரச்சனையெண்டா அங்கிள் துடிச்சுப் போயிடுவேர். உயிரைக் குடுத்து உதவி செய்யக் கூடிய மனுசன்.

நான் முன்னம் முன்னம் ரெஸ்ரோடண்டுக்கு வேலைக்கு போறன் அங்க அங்கிளோட சேர்த்து எல்லாமா நாலு தமிழ் ஆக்கள் வேலை செய்யினம். குசினிக்குள்ள பெரியவனும் ஒரு தமிழ் பெடியன் தான். வெறும் விசரன். . . . தேவையில்லாம எங்களை எல்லாம் தூசணத்தால ஏசுவான். போன அண்டு பின்னேரமே எனக்கு ஏச்சு விழுந்தது.

எனக்கு கைகால் எல்லாம் நடுங்குது. கண்ணெல்லாம் கலங்கிப் போச்சு. வேலையை விட்டிட்டு போவமோ எண்டு கூட யோசிச்சன். எனக்கு பக்கத்தில் நிண்டு கிழங்கு சீவிக் கொண்டிருந்த அங்கிள் முன்னுக்கு கூட்டிக்கொண்டு போய் ஒரு க.்.பே அடிச்சுத் தந்தேர். அப்பதான் நான் அவரை வடிவா கவனிச்சன். நாப்பத்தைஞ்சு, அம்பது வயசிருக்கும், வலு ஸ்மாட்டான ஆள்.

"கோப்பிய குடியும்" எண்டு சொல்லிப் போட்டு என்னைக் கடகடவெண்டு இன்ரவியூ செய்ய வெளிக்கிட்டார்.

"தம்பி சிலோனில எவ்விடம்?"

"மண்டதீவு" எண்டு சொன்னன். எனக்குத் தெரியும் அடுத்த கேள்வியா அப்ப மண்டதீவெண்டா சபாரத்தினம் போஸ்மாஸ்டரையோ , இல்லாட்டி பொன்ராசா சம்மாட்டியையோ, இல்லாட்டி பாம்பு பரியாரியையோ இப்பிடி இன்ன இன்ன ஆக்களை கேப்பினம். ஆனால் இவர் வேற கேள்வி கேட்டார்.

"அம்மா அப்பா எல்லாம் எங்க?"
"இப்ப பூநகரியில இருக்கினம்"
"இஞ்ச வந்து கன காலமோ?"
"நாலு வரியம்"

"முந்தி எங்க வேலை செய்தனீர்?"
"முந்தி பேப்பர் போடுற வேலை செய்தனான். பிறகு கனகாலம் வேலையில்லாம இருந்து இப்ப தான் வேலை கிடைச்சிருக்கு "

எனக்கு குரல் எல்லாம் நடுங்குது "நெர்வஸ்" ஆயிற்றன். ஏனெண்டா இந்த வேலையிலயும் கனநாளைக்கு நிண்டு பிடிக்க ஏலாது போல கிடந்தது.
அவர் என்ர கையைப் பிடிச்சு அனுசரனையா சிரிச்சேர். "தம்பி இஞ்ச கொஞ்ச நாளைக்கு வேலை கஷ்டமாதானிருக்கும் பல்லைக் கடிச்சுக் கொண்டு நில்லும் பிறகு பழகிப் போயிரும்" எண்டேர். அண்டைக்கு வேலை முடிய நானும் அவரும் தான் ரெயின் பிடிக்க நடந்து வந்தனாங்கள். வாற வழியில ஒரு அரைப் போத்தல் விஸ்கி வேண்டினேர். ரோட்டிலையே பச்சையா குடிக்கத் தொடங்கிற்றேர். என்னையும் "குடிக்கிறீரோ" எண்டு கேட்டேர். நான் குடிக்கிறது இல்ல எண்டு பொய் சொல்லிப் போட்டன். நானும் நல்லாக் குடிப்பன். மொஸ்கோவில நிக்கேக்க பழகினது. ஆனால் வயசுக்கு மூத்தஆளொட குடிக்கிறது மரியாதை இல்லையெண்டு வேணாம் எண்டிட்டன்.

இது நடந்து இப்ப ரெண்டு மாசமாகுது. இப்ப ரெண்டு பேரும் சேர்ந்து தண்ணியடிக்கிற அளவுக்கு நெருங்கிற்றம். என்னை அவருக்கு எந்தளவுக்கு பிடிச்சிருக்கோ தெரியாது. ஆனால் எனக்கு அங்கிள்ளை நல்ல விருப்பம். போன மாசம் ஐயா வவனியாவில வந்து நிண்டு கொண்டு ரெலிபோன் எடுத்து "உடன ஒரு லெச்சம் ரூபா அனுப்பு இல்லாட்டி கொம்மாவையும் குமரையும் பிடிச்சு கிணத்துக்குள்ள தள்ளிப்போட்டு நானும் சாவன்." எண்டு பிளாக்மெயில் பண்ணுறேர். எனக்கெண்டால் என்ன செய்யிறதெண்டு தெரியேல்ல. அங்கிளிட்ட விசயத்தை சொன்னன். உடன அங்கிள் அங்கமாறி இஞ்சமாறி ஐயாயிரம் பிராங் தந்தேர். நேற்று சம்பளமெடுத்து அப்படியே கடன் காசைக் குடுத்திற்று மிஞ்சின இருநூறு பிராங்கிலதான் இப்ப போத்தில் வேண்டி அடிச்சிற்று வாறம்.
அங்கிளுக்கு நல்லா ஏறிற்றுது "சக்தி உமக்கு தெரியுமா என்ர மகள்தான் , வகுப்பிலேயே முதலாம் பிள்ளையாம் எண்டு மனிசி கடிதம் போட்டிருக்கிறா" எண்டு ஒருக்கா சொல்லுவேர் பிறகு அப்படியே "ரூட்மாறி" "செப்"புக்கு ஒருநாளைக்கு மீன் வெட்டுற கத்தியால ஏத்தி இழுக்கிறனோ இல்லையோ பாரும்" எண்டு பல்லை நெரிப்பார். அப்படியே "ரக்"மாறி அர்த்தமுள்ள இந்து மதத்தில கண்ணதாசன் சொன்னது "ஹண்ரெட் பெர்சன்ட் கரக்ட்" எண்டு சிரிப்பேர்.

அங்கிள இப்பிடியே அவர் தங்கியிருக்கிற றூமுக்கு அனுப்ப ஏலாது. ஒரு "பமிலி"காரர் வீட்டிலதான் தங்கியிருக்கிறேர். அவையள் அங்கிளின்ர சொந்தக்காரர் தானாம். ஆனால் அவையளுக்கும் ஒரு நாளைக்கு அடியிருக்கெண்டு கொஞ்சத்துக்கு முந்தியும் சொன்னவர். இந்தக் கொண்டிசனில அங்க போனேர் எண்டால் பரிசு

www.tamilarangam.net

கெட்டுப்போயிரும். அதுதான் என்ர றூமுக்கு இண்டைக்கு கூட்டிக்கொண்டு போறன். இன்னும் ஒரு மூண்டு நிமிசம் நடந்தால் என்ர றூமும் வந்திடும். அங்கிள் உரக்க பாட்டுப்படிச்சுக் கொண்டு வாறார்.

விறுக்கெண்டு ஒரு கார் வந்து எங்கிட காலுக்குள்ள "சடன்பிரேக்" போட்டு நிண்டுது. நாலு பக்க கதவையும் திறந்து கொண்டு இங்கிலிஸ் படங்கள் கணக்கா நாலு உருவங்கள் பொத்து பொத்து எண்டு குதிச்சுதுகள். கண்ணை ஒருக்கா வெட்டி முழிச்சுப் பாத்தன் ஏறக்குறைய எனக்கு வெறி முறிஞ்சு போச்சு. பொலிஸ்.

அவையள் எங்களை மறிச்சுப் பிடிச்சுக் கொண்டு எங்கட விசாவை கேட்டிச்சினம். நான் உடன என்ர விசாவை எடுத்து குடுத்திற்றன். அங்கிள் அவையளை பாத்து சிரிச்சுக்கொண்டு நிக்கிறர். நான் அங்கிளிட்ட "விசாவை" குடுக்கச் சொல்லி சொன்னன். அங்கிள் என்னைப்பாத்து கண்ணடிச்சு சிரிச்சேர். அம்மாளாச்சி இதென்ன வெள்ளிடி எண்டு போட்டு நான் அங்கிளின்ர "ஜக்கட்" பொக்கற்றுக்குள்ள கையை விட்டு விசாவை எடுக்கப் போனன். அங்கிள் பொக்கற்றை பொத்திப் பிடிச்சுக்கொண்டு சிரிக்கிறேர். படாரெண்டு ஒரு பொலிஸ்காரன் பாய்ஞ்சு அங்கிளைப் பிடிச்சு ரோட்டுக்கரை மதிலோடு சாத்தி வைச்சுப்பிடிக்க இன்னொருத்தன் ஆளை கொம்பிளீட்டா செக் பண்ணி விசாவை எடுத்துப் போட்டான்.



இவ்வளவு அமளிக்கு இடையிலேயும் நான் பத்து பதினைஞ்சு தரம் அவையளிட்ட "எக்ஸ்கியூசே நூ, எக்ஸ்கியூசே நூ. . . . " எண்டு மன்னிப்பு கேட்டுப் போட்டன். அதுக்குமேல ஒண்டும் கதைக்க வருகுதில்ல. ஆனால் சும்மா நிண்ட என்னையும் ஒருக்கா கொம்பிளீற்றா செக்கப் செய்திச்சினம். ஒரு பொலிஸ்காரன் எங்கட விசாவை பார்த்து பார்த்து வோக்கி டோக்கியில எங்கையோ கதைக்கிறான்.

அங்கிள் அந்த பொலிஸ்காரனை பார்த்து முழிய பிரட்டி பல்ல நெறுமினேர். "எனக்கு பத்து வரியம் விசா இருக்குது. ஏழு வரியம் முடிஞ்சுது. . . . இன்னும் மூண்டு வரியம் இந்த நாட்டில இருக்க எனக்கு உரிமை இருக்குது" எண்டு மல்லுக்கு நிக்கிறேர். அவன் எங்களைப் பார்த்து சிரிச்சுக்கொண்டே வோக்கியில கதைச்சு முடிச்சான். பிறகு சொன்னான், "உண்மைதான் உங்களுக்கு இன்னும் மூண்டு வரியம் இஞ்ச இருக்க உரிமை இருக்குது. மூண்டு வரியம் முடிய நீங்கள் உடுப்பு, சாமான்களை கட்டி வையுங்கோ நாங்கள் ஸ்ரீலங்காவுக்கு பெரிய கப்பல் "ரெடி" பண்ணி வைக்கிறம்" அவ்வளவுதான் "டக்பக்" எண்டு அவையள் காரில ஏறிப் போயிற்றினம்.

பெரிய மழை பெஞ்சு நிண்டமாதிரி கிடந்தது. விறுவிறுவெண்டு அங்கிளையும் இழுத்துக்கொண்டு என்ர றூமுக்கு வந்திற்றன். அங்கிள் இவ்வளவு கூத்து காட்டினாப்பிறகும். எனக்கு அங்கிளில கோபம் வரயில்ல. அவ்வளவு அன்பா பழகிப்போட்டம். ஒரு தேப்பன் மாதிரி எனக்கு எவ்வளவு "ஹெல்ப்" செய்திருக்கிறார். அங்கிள் என்ர றூமுக்கு இண்டைக்கு தான் முன்னம் முன்னம் வாறேர். என்ர றூமை வடிவா பார்க்கிறேர். றூம் எந்த நிமிசமும் இடிஞ்சு விழுகிற நிலையிலதான் கிடக்கு. சரியான குப்பையாயும் கிடந்தது.

நான் சாப்பாட்டை அடுப்பில வைச்சு சூடுகாட்டினன். அங்கிள் கட்டிலில ஏறி சம்மணம் கட்டி இருந்து கொண்டு "எனக்கு வேணாம்...... என்னால சாப்பிட ஏலாது......... நீர் சாப்பிடும் வெறும் வயித்தில படுக்காதையும்" எண்டு திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டிருந்தவர் அப்பிடியே சரிஞ்சு நித்திரையாப் போனேர். எனக்கும் சாடையா சத்திவாற மாதிரிக் கிடந்தது சாப்பாட்டை மூடிவைச்சுப் போட்டு அங்கிளின்ர சப்பாத்தை கழட்டி விட்டன். பெட்சீட்டை எடுத்து நிலத்தில விரிச்சுப்போட்டு அதில படுத்திற்றன்.
நேரம் ரெண்டு மணியாப் போச்சுது. எனக்கு நித்திரை வருகுதில்ல. சாடையான காய்ச்சல் குணமா இருக்குது. தேகமெல்லாம் குத்தி முறியுது. சரியான வெக்கையா கிடக்கு அப்பிடியே மெள்ள மெள்ள நித்திரையாப் போனன்.

திடீரெண்டு என்ர முகத்துக்கு குளிர் காத்து அடிக்குது. உடம்பெல்லாம் காத்தில பறக்கிற மாதரி கிடக்கு. கைகாலுக்க உள்ள நரம்புகள் எல்லாம் தங்கட பாட்டுக்கு வயலின் வாசிக்கினம். நித்திரை குழம்பிப்போக கண்ண உன்னி திறந்து பார்த்தன். அங்கிள் எனக்கு பக்கத்தில படுத்துக் கிடக்கிறேர். ஒரு கையால என்னை தன்ர நெஞ்சோட சேர்த்து கட்டிப் பிடிச்சுக் கொண்டு அடுத்த கையால என்ர உடம்பு முழுவதும் தடவுறேர். என்ர கால் ரெண்டும் அவற்ற காலுக்குள்ள சிக்குப்பட்டு கிடக்க என்ர முகத்தில கொஞ்சுறேர்.

ஒரு "செக்கன்" ஏங்கிப்போனன்.

"அங்கிள் விடுங்கோ" எண்டன் அவர் இன்னும் பிடியை இறுக்கினார். இரண்டு உள்ளங் கையையும் அவற்ற நெஞ்சில குடுத்து தள்ளினன். கொஞ்சம் பிடி இளகிச்சுது. அப்படியே பாய்ஞ்சு எழும்பி ஓடிப்போய். "பாத்றூமுக்குள்ள" உள்ளிட்டு கதவை சாத்திப்போட்டு நிண்டிட்டன்.

இந்த மனிசன் இப்பிடிப் பட்ட காவாலி நாயா! ஐயோ அம்மாளச்சி எனக்கு ஏன் இப்படியொரு கிலிசுகெட்டு சினேகித்தை தந்தாய்? நான் இந்தக் கிழடோட சினேகிதம் கொண்டாடேக்க ரெஸ்ரோரண்டில வேலை செய்யிற மற்றப் பெடியள் நக்கலா சிரிக்கிறவங்கள். அவங்களோடும் சேட்டை விட்டிருக்குமோ? அவங்கள் என்னையும் பிழையான ஆள் எண்டு கணக்குப் பண்ணியிருப்பாங்களோ?

இப்படியே யோசிச்சுகொண்டு அரை மணித்தியாலமா பாத்றூமுக்குள்ளையே நிண்டன். கதவை திறந்து கொண்டு றூமுக்க போக பயமாக் கிடந்தது. என்னத்துக்கு பயப்பட வேணும்? மசிர்....... இனி ஏதும் சேட்டை விட்டேரெண்டா அடிச்சு மூஞ்சிகீஞ்சி எல்லாம் உடைச்சுத்தான் அனுப்புவன்.

"அவக்"கெண்டு கதவைத் திறந்து கொண்டு றூமுக்குள்ள வந்தன். பெரிய ஜென்டில்மென் கணக்கா கட்டில்ல இழுத்துப் போத்துக்கொண்டு படுத்துக் கிடக்கிறேர். இண்டையோட இவற்ற சிநேகிதம் "கட்" எண்டு முடிவெடுத்துக் கொண்டு பெற்சீட்டை ஒருக்கா உதறிப் போட்டு நிலத்தில விரிச்சுப் படுத்தன்.

காலம்பிற ஏழுமணிக்கு "அலாம்" அடிச்சுது. அவர் எனக்கு முதலே எழும்பி தேத்தண்ணி போட்டுக் கொண்டு நிக்கிறேர். நான் முகம் கழுவிற்று வர எனக்கு தேத்தண்ணி தந்தேர். நான் "வேணாம்" எண்டு சொல்லிப்போட்டன். காய்ச்சல் சாடையா காயுது.

"ரெயினி"ல வேலைக்கு போய்க் கொண்டிருக்குறோம். ரெண்டு மூண்டு தரம் என்னோட கதைக்க "ட்றை" பண்ணினேர். நான் கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழி சொல்லிப்போட்டு என்பாட்டுக்கு இருந்திற்றன். ராத்திரி நடந்ததை நினைக்க ரத்தம் கொதிக்குது. இவரோட எனக்கென்ன கதை.

www.tamilarangam.net

பகல் பன்னிரெண்டு மணியிருக்கும்........ வேலை செய்து கொண்டு நிக்கிறன். தலையெல்லாம் சுத்துது, நிலத்தில நிக்க ஏலாம கிடந்துது. ஓடிப்போய் சத்தி எடுத்தன். பத்துரோனிட்ட போய் எனக்கு சுகமில்லாம கிடக்குது வீட்டை போகப்போகிறன் எண்டன். சனம் வாற நேரமாக் கிடக்கு நிண்டு வேலையை செய்துபோட்டு பின்னேரமா போகச் சொன்னான். இல்ல நான் போகத்தான் வேணும் எண்டு விடாப்பிடியா நிண்டன். என்னால கதைக்க கூட ஏலாம கிடந்தது. பத்துரோனுக்கு முகம் சரியில்ல "சரி சரி போ" எண்டு சொன்னான். குசினிக்குள்ள ஒருத்தருக்கும் சொல்லயில்ல வெளிக்கிட்டு வந்திற்றன். எப்பிடிதான் ரெயின் பிடிச்சு மாடிப் படியேறி என்ர கட்டிலில வந்து படுத்தனோ தெரியாது.

உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டுது, இந்தா உள்ளங்கால் கூட வேர்க்குது, முகம் முழுக்க எரியுது. தண்ணி தண்ணியா விடாய்க்குது. . . . . தொண்டை நெஞ்சு எல்லாம் எல்லாம் அடைச்சுப் போச்சு! ஆயிரம் பேர் என்ர தலையில ஏறிநிண்டு "டான்ஸ்" பண்ணுற மாதிரி நோகுது. தேகம் குத்தி முறியுது. எனக்கு திரும்பியும் காய்ச்சல் வந்திற்று. நாலு வரியத்துக்கு பிறகு காயுது.

எனக்கு என்ர பத்து வயசில முன்னம் முன்னம் இந்த காய்ச்சல் பிடிச்சுது. அண்டைக்கு நடுச்சாமம் இருக்கும் அம்மா வந்து என்னை எழுப்பினா. "சக்தி பெரியம்மா வீட்டை போயிட்டு வருவம் வா" எண்டா ஏன் இந்த சாமத்தில பெரியம்மா வீட்ட போகவேணும் எண்டு எனக்கு விளங்கேயில்ல. அதோட பெரியப்பா செத்து இன்னும் ஆறுமாசம் முடியேல்ல எப்படியும் வீட்டைச்சுத்தி பேயாய் திரிவேர் எண்டும் சாடையாப் பயந்தன். எண்டாலும் அம்மாகூடவாறா ஐயாவும் வருவேர் பயப்பிட தேவையில்ல எண்டு போட்டு உசாரா சாறத்த தூக்கி சண்டிக்கட்டு கட்டிக் கொண்டு விறாந்தைக்கு வந்து யாவைத் தேடினேன். ஐயாவைக் காணயில்ல "எணை ஐயா எங்கையணை" எண்டு அம்மாவிட்ட கேட்டன். அம்மா ஒண்டும் பறையாம என்ர கையைப் பிடிச்சுக்கொண்டு மற்றக் கையால தங்கச்சியை தூக்கிகொண்டு ஒழுங்கையில இறங்கினா. தங்கச்சி அப்ப கைக்குழந்த.

பெரியம்மா வீட்டுக்கு கிட்ட வந்ததும் அவ்விடத்திலேயே நிண்டம். உள்ளுக்க போகயில்ல அம்மா "சக்தி ஐயாவை கூப்பிடு" எண்டா எனக்குஒண்டும் விளங்கேயில்ல. எண்டாலும் அம்மா சொல்லுறா எண்டு போட்டு "ஐயா...... ஐயா.........! "எண்டு ஐத்திக் கூப்பிட்டன். ஒரு அசுமாத்தமும் இல்ல! நானும் விடயில்ல படலையில ஏறிநிண்டு "ஐயா......... ஐயா........" எண்டு கூப்பிட்டன்.

திடீரெண்டு ஐயா பெரியம்மா வீட்டுக்கையிருந்து ஓடிவந்தார்! பெரியம்மா வீட்டுக்குள்ள இருந்து எங்கட ஐயா ஏன் வாறார் எண்டு அந்த "ரைமில" எனக்கு விளங்கயில்ல ஓடிவந்த வீச்சுக்கு கையாலும், காலாலும் அம்மாவுக்கு அடிச்சார். அம்மாவின்ர தலைமயிர சுருட்டி கையில பிடிச்சுக் கொண்டு வயித்தைப் பொத்தி உதைஞ்சார்.
"வேச, வீட்டை போடி...... வேச, வீட்டை போடி......" எண்டு சொல்லிச் சொல்லி அடிச்சார். அம்மா மரம் மாதிரி நிக்கிறா. ஒரு சத்தம் போடயும் இல்ல. ஒரு சொல்லு பறையவும் இல்ல. நான் "என்ர ஐயா அம்மாவுக்கு அடிக்காதையுங்கோ, அடிக்காதையுங்கோ" எண்டு குளறினன். அடுத்தநாள் விடிய எனக்கு காய்ச்சல் பிடிச்சிற்று. கடுமையா காய்ஞ்சுது. சாகிற கட்டம்!

நான் பத்தாம் வகுப்பு படிக்கேக்க எனக்கு ரெண்டாம் தரம் இந்த காய்ச்சல் வந்தது. மேரி ஜஸ்மின் அப்ப இளவாலை கொன்மென்டில தங்கியிருந்து படிச்சுக் கொண்டிருந்தவ. லீவிலதான் ஊருக்கு வருவா. அந்த முறை அவ லீவுக்கு வந்து நிக்கேக்க வாசிகசாலைக்காரர் விளையாட்டுப் போட்டி நடத்திச்சினம். அவவும் "நூறுமீற்றர்" ஓடினவ நான்தான் "பினிஸிங்"கில கயிறு பிடிச்சுக்கொண்டு நிக்கிறன். மேரி ஜஸ்மின் தான் முதலாவதா வந்தவ. அது மட்டும் அவவ நான் பெரிசா "நோட்" பண்ணயில்ல அவ கயிறு முட்டி அறுத்த அந்த செக்கனும், அவவின்ர ஹிப்பி தலை காத்தில பறந்த "பிளானும்" சாடையா "லெவலடிக்கிற" அவவின்ர சிரிப்பும் என்ர மைன்டில பதிஞ்சிற்று.

இரவு பகலா அவவின்ர நினைப்புத்தான். அவ தனிய ரோட்டால சைக்கிளில போகேக்க ரெண்டு தரம் பின்னாலேயே நானும் போய் கதைக்க ட்றை பண்ணிப் பார்த்தன். அவவின்ர சைக்கிளை நான் "ஓவர்டேக்" பண்ணேக்க வாய் திறக்காமல் சிரிப்பா நானும் சிரிப்பன் அவ்வளவுதான். ஆனால் மூண்டாம் தரம் துணிஞ்சிற்றன். அவவ "சைற்" எடுக்கிற நேரத்தில இன்ன இன்ன மாதிரி நான் உங்களை "லவ்" பண்ணுறன் எனக்கொரு முடிவு சொல்லுங்கோ எண்டன்.
அவ்வளவு தான்........ மேரி ஜஸ்மின் சைக்கிள பிறேக் அடிச்சு நிப்பாட்டிப் போட்டு "பொறும் கடாபி அண்ணாவிட்ட சொல்லுறன்" எண்டா. நான் சைக்கிளை உழக்கிக் கொண்டு பறந்திற்றன். கடாபி எண்டவர் அப்ப எதோ ஒரு இயக்கத்தில எதோ ஒரு பொறுப்பாளர். ஐயோ காம்பில கொண்டே போட்டு பெட்டையோட சேட்டைவிட்டனான் எண்டு சொல்லி உழக்கப் போயினமே எண்டு நினைச்சு நினைச்சு அழுதன். காய்ச்சல் பிடிச்சிற்று....... சாகிற கட்டம்.
இதுக்கு பிறகு நான் ஊரில நிக்கு மட்டும் எனக்கு அடிக்கடி காய்ச்சல் வந்திச்சு, ஆனால் பிரான்சுக்கு வந்தாப்பிறகு ஒருக்காலும் காய்ச்சல் வரயில்ல இனி வராதெண்டுதான் நினைச்சன். ஆனால் வந்திற்றுது.

வேலைக்கு போகாம விட்டு இண்டையோட மூண்டு நாள் முடியுது. காய்ச்சலும் வர வர கூடுது. பாண்தான் சாப்பாடு. அதைக்கூட சாப்பிட மனமில்லாமல் கிடக்கு. இப்ப ஒரு தேத்தண்ணி வைச்சுக் குடிச்சா கொஞ்சம் உசாராயிருக்கும், ஆனால் என்னால எழும்பி அடுப்படிக்குப் போய் தேத்தண்ணி வைக்க ஏலாது. நடக்கவே தஞ்சக்கேடா இருக்கு.

நேற்று முரளிக்கு ரெலிபோன் அடிச்சு சரியான வருத்தமா கிடக்கு ஒருக்கா வந்து டொக்டரிட்ட கூட்டிக் கொண்டு போவெண்டு கேட்டன். தனக்கு நேரமில்லையெண்டு சொல்லிப்போட்டான்.

இப்படியே இந்த றூமுக்குள்ள கிடந்து செத்துப் போயிருவன் போல கிடக்கு. இந்த முறை தப்பமாட்டன். ரெண்டு மூண்டு நாளால தான் பிரேதம் மணக்கத் துவங்கும். அதுக்கு பிறகுதான் பக்கத்து றூம் ஆப்கானிஸ்தான்காரி பொலிசுக்கு ரெலிபோன் அடிப்பா. அதுக்கு பிறகு பொலிஸ் வந்து கதவை உடைச்சுத்தான் பிரேதத்த எடுக்க வேண்டிவரும். அம்மா ஐயாவுக்கு அறிவிப்பாங்களா?

கதவு தட்டிக் கேக்குது. ஆராயிருக்கும் முரளியா இல்லை, ஆப்கானிஸ்தான்காரியா? எழும்ப ஏலாமக் கிடந்தது "தம்" கட்டி எழும்பினன். சுவரை பிடிச்சுக் கொண்டு மெள்ள மெள்ள நடந்து போய் கதவை திறந்தன். அங்கிள் நிக்கிறார்!

நான் ஒண்டும் பறையாமல் மெள்ள நடந்து வந்து கட்டில்ல ஏறிப் படுத்திற்றன். அவர் வந்து கதிரையில இருந்து தலையைக் குனிஞ்சு கொண்டு இருந்தார். பிறகு மெள்ள எழும்பி எனக்கு கிட்ட வந்தார். என்னை நிமிர்ந்து பார்க்கிறார் இல்ல.

எனக்கு முகமெல்லாம் பத்தி எரியுது. தேகம் குத்தி முறியுது. தாங்க ஏலாம கிடக்கு. அங்கிள் மெள்ள என்னை நிமிர்ந்து பார்த்து "சக்தி என்னப்பு செய்யுது, தேத்தண்ணி போட்டுத் தரவா?" எண்டு கேட்டார். எனக்கு எப்படித்தான் அழுகை வந்ததோ தெரியாது! அழுது கொண்டே எழும்பி அங்கிள இறுக்கி என்ர ரெண்டு கையாலும் கட்டிப்பிடிச்சு அவற்ற முகத்தில கொஞ்சினன்.

ஃ

www.tamilarangam.net

# உரைகல்

## எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

அம்மாவைக் கண்டேன். முழுக்கமுழுக்க சிறுகதைகளை நம்பி வெளியிட்ட கன்னிமுயற்சி. பாரட்டத்தக்கது. நல்ல கதைகளோடு சில குழப்பமான கதைகளும் உண்டு.

தேவன், சுவர்ணமாலிமூலம் நம்காலத்து மனிதர்களின் அவலங்களை நமக்குள் உணர்கிறோம். எளிய நடையில் எழுதப்பட்ட இந்தஆசிரியரின் கதை கருத்தாளத்திலும், நடையழகிலும் சிறப்பாக அமைந்துள்ளது. நமக்குள் நுழைந்து நம் நிம்மதியைக்கெடுக்கின்றது என்ற வகையில் இக்கதை கலையின் வெற்றிதான்.

திரு. வாசுதேவன் என்னசொல்ல வருகிறார் என்று புரியவில்லை. கொஞ்சம் புரட்சி, கொஞ்சம் சமாதானம். இரண்டு பக்கத்திலும் இருந்து தப்பப்பார்க்கிறார். முடிவில் இரண்டு பக்கத்திலும் அடிவாங்குகிறார். "யதார்த்தமாகச் சிந்தியுங்கள்....... நான் வேறு என்னதான் செய்யமுடியும்?" போன்ற வரிகள் மானிடமாற்றத்திற்கும், ஏன்! தமிழுக்கும், சிறுகதை வளற்சிக்கும், துணை நிற்குமா என்பதை ஆசிரியர் சிந்திக்கவேண்டும்.

சிறுகதைக்குள்ளும் வாழ்வின், வரலாற்றின் இலக்கியத்தின் சில அற்புதமான பரிமானங்கள் இடம்பெற முடியும். இத்தகைய பரிமானங்கள் கூடிவருகின்ற அளவுக்கு சிறுகதைக்கலையின் மேன்மையை நாம் கொண்டாடமுடியும். இந்த "நேர்மையற்றவனை" ஒரு கதாபாத்திரம் என்றோ இக்கதை இவர்களைப்பற்றியகதை என்றோ சொல்வதன் மூலம் நம்மைநாமே கேவலப்படுத்திக்கொள்கிறோம்.

நுளம்பு+ நுளம்புகள். நவீனம் என்ற பெயரில் குளறுபடி. சரியான பித்தலாட்டம். புதியன என நினைத்துக்கொண்டு யாருக்குமே புரியக்கூடாது என்ற நினைப்பில் எழுதப்பட்டவை. தலைப்புக்கும் கதைக்கருவுக்கும் நிறைப் பொருத்தம்.

போய்வருகிறேன்! எங்கேயோ இடிக்கிறது. அழகியல் என்ற அம்சமே இல்லை. பாசத்தைக்காட்டுகிறேன் பேர்வழி என்றுதொடங்கிய ஆசிரியர் கோட்டைவிட்டுவிட்டார். கொஞ்சம் கவனமாகத் தொகுத்திருக்கலாம். கதை வாசிக்கும்போது தலையிடியில் தொடங்கி மண்டைக்குத்தில் முடிந்தது.

அம்மாவின் இறுதிக்கதையான "மகிந்தாவின் சாவு" ஒரு குறுநாவலாகவே வந்திருக்கலாம். இலக்கியம் மனித மனங்களைப் பண்படுத்தும், மனிதப்பண்புகளைக்கிளறி, மானிட நேயத்தை வளர்த்தெடுக்கக்கூடிய கதைகளே அம்மாவின் ஆன்மா என்பதற்கு இச்சிறுகதை மட்டுமே உதவியிருக்கிறது. தவிர படைப்பாளிகள் தங்கள் எழுத்துவன்மையைப்பெருக்கிக்கொள்ளலாமே தவிர இலக்கியவளர்ச்சிக்கு உதவுகிறேன் என்று சொன்னால் அது மோசடிக்குச்சமன். எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் தருவன முதலாவதும் இறுதியானதும்தான்.

- பாண்டியன்,
பிரான்ஸ்

## அம்மாவின் கதைகள்

இதில் வெளியான கதைகள் ஒன்றும் இதுதான் கதைக்களம் என்று வரையறுத்துக்கூறவில்லை. இதன் பாடுபொருளும் இன்னதே என்றும் அவைகூறவில்லை. எனவே புலம்பெயாந்த இலங்கை எழுத்தாளர்களால் புலப்பெயர்வின் இன்னல்கள் பற்றியே எழுத்படவேண்டும் என்று எவ்வித நியதியும் இல்லை. ஆனால் ஆனால் புலம்பெயரப்புறப்படுகின்ற ஒருமனிதனின் கதையும், புலம்பெயர்ந்து அகதிஅந்தஸ்து கோரி அதுவழங்கப்படாமல் துரத்தப்பட்ட ஒருமனிதனின் கதையும் இதில் அடங்கிஇருக்கின்றது. அதுகூட புலம்பெயர் வாழ்வின் தொடக்கமும் முடிவுமாக அமைந்துவிடுகிறது. மேலும் இலங்கைச்சூழலைச் சித்தரிக்கின்ற இருகதைகளும் புலம்பெயர் நாடொன்றைச்சித்தரிக்கிற ஒரு கதையுமாக ஓரளவுவட்டத்தை தொட்டுவிடுகிற கதைகளை "அம்மா"வில் காணலாம். ஒரு தேர்ந்தகலைஞர் இவற்றைத்தொகுத்தே இன்னொரு படைப்பாக்க முடிந்திருக்கும்.

நான் சொன்ன வகையில் "போய்வருகிறேன்"(புவனன்) கதையை ஆரம்பக்கதையாகக்கொள்ளலாம். இடையில் நுளம்பு + நுளம்புகள் (அஸ்வதி), "மகிந்தாவின் சாவு" (அ. இரவி) கதையையும் அடத்துவைத்து பின்னர் நியாயார்த்தங்கள் (வாசுதேவன்) கதையை வைத்தால் ஓர் ஒழுங்குக்குட்படுவதைக் காணலாம். இறுதியாக "எலி வேட்டை" (ஷோபா சக்தி) கதையை வைத்து விட்டால் இன்னொரு இலக்கியமாகக்கூட ஆகியிருக்கும். தொகுப்பாசிரியர் அவ்வாறு கவனித்துத் தொகுத்திருப்பாரேயானால் வாசகரும் அவ்வாறு இனம்கண்டிருக்கமுடியும். இவற்றிலிருந்து மறுபிரசுரம் செய்யப்பட்ட "தேர்" (மீ. விஸ்வநாதன்) கதையை சுலபமாகத் தவிர்த்து விடுகிறேன். இன்னொருவகையிலும் கூட "தேர்" தமிழ்ச்சினிமாத்தன்மை மிகுந்த கதையாகப்படுகின்றது. என் கருத்தில் அக்கதையை மீள் பிரசுரம் செய்யாமல் விட்டிருக்கலாம்.



www.tamilarangam.net

மேற்சொல்லப்பட்ட கதைகளில் அ. இரவி எழுதிய "மகிந்தாவின் சாவு" கதையைத் தவிர்த்து ஏனைய கதைகள் பற்றியே என்குறிப்பை வரைகிறேன். இக்கதைகள் பொதுவில் தனிமனித உணர்வுகளைப் பிரதானப்படுத்தியும், நான் எனும் தன்மை ஒருமைப்பெயர் பாத்திரமாகக்கொண்டு கதைகூறுவதாகவும் அமைகிறது. ஆனால் அவரவரைக்கொண்டு அனுபவம் வேறுபட்டு, அவ்வனுபவங்களை கதைகளாக வடிப்பதிலும் வேறுபடுகிறார்கள். கழிவிரக்கப்படுகின்ற பாத்திரங்களே இக்கதைகளில் பேசப்படுகின்றன. ஒரு கதையும் "பண்ணிய" கதைகளாகத்தெரியாமல் அனுபவங்களால் வார்க்கப்பட்ட கதைகளாகவே தெரிகின்றன. அது ஒரு சிறப்பு.

புவனன் எழுதிய "போய் வருகிறேன்" கதையானது இயல்பான மொழிநடையாலும், அதன் களத்தாலும் என்னைக்கவர்ந்து விடுகிறது. இவரது கதைகள் சிலவற்றைப் பார்த்தபோது ஒருதுளி அனுபவத்தை, இயல்பான நடையோடு, கலைநேர்த்தியாகத் தருகிறார். இக்கதையில் "நானி"ன் வயது கூறப்படவில்லை என்றாலும் சுமார் இருபது வயது மதிக்கத்தக்க "நானை" இனம்காண்கிறேன். அவ்வயதுக்குரிய "கோளாறை" இதில் காணமுடிகிறது. வீட்டுடன் ஒட்டாத வாழ்வும், வெளி உலகுடன் பிணைக்கப்படாத தன்மையையும் இக்கதை சுட்டுகிறது. அவ்வயதில் இளைஞர்களுக்கு ஏற்படுகிற "புறம்போக்கான" நிலையை இக்கதை வெளிக்காட்டுகிறது. இன்னொருபுறத்தில் எண்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்தில் இராணுவ அட்டூழியங்களும் அவை இளைஞர்களையும், அவர்தம் குடும்பத்தையும், பாதித்தவிதத்தையும் வெட்டுமுகமாக இக்கதை காட்டுகிறது. அனுபவத்தை வாசகர்மீது தொற்றவைக்கிற கதையை நான் "திறம்" என்பேன். இக்கதையும் அத்தகையதே. இதே அனுபவத்தை இன்னும் விரிவாக எடுத்துரைக்கலாமோ என்றும் நான் யோசிக்கிறேன். ஒரு பின்னேரப்பொழுதைக் காட்டியிருந்தார். அவசரமாக முடிந்த பின்னேரமாக இக்கதை இருந்தது. இக்கதையில் உணர்வைத்தொட்டுவிடக்கூடிய உறவைப்புலப்படுத்தும் வரி ஒன்றுண்டு. "நான் பிள்ளை பிள்ளையெண்டு எவ்வளவு பாசத்தைப்பொழியிறன், நீ என்னை அம்மா எண்டு கூப்பிடுறாயில்லை என்னடா?" எனக்கென்னவோ இவ்வரியுடன் ஆழ்ந்துநோக்கிப்போனாலே இன்னொரு அற்புதமான இலக்கியம் தோன்றிவிடும்போல் இருக்கிறது. கனவுகள் பற்றிக்கதையின் முதலில் வருகிற பந்தி தேவைதானா புவனன்? இன்னொரு கதை தொடங்குவதற்கான பந்தியா அது?

ஒரு அனுபவத்தை சரியாகத்தொற்றவைக்க முடியாமல்போன கதையாகவே "நுளம்பு + நுளம்புகள்" எனும்கதையை இனம் காண்கிறேன். அல்லது இவ்வனுபவம் என்னில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையோவும் தெரியாது. என்னால் இக்கதையினுள் புகமுடியவில்லை. அஸ்வதியின் நடையில் மெல்லிய நகைச்சுவை இழையோடுகின்றது. இந்நடையை அவர் கையாண்டு இன்னும் நல்ல சிறுகதைகளை அவரால் தரமுடியும். தன் அனுபவத்தளத்தையும் விரிவாக்கவேண்டிய தேவை அஸ்வதிக்கு உண்டு. அஸ்வதியிடம் மேலும் சிறப்பான கதைகளை எதிர்பார்க்கலாம்.

நடையில் இன்னொருவடிவம் கொண்டகதையாகவே வாசுதேவனின் "நியாயார்த்தங்கள்" கதை அமைகின்றது. இக்கதை பலவிதங்களிலும் மாறுபட்டுள்ளது. ஆனால் இன்னனொருபுறம் "இது கதையா?" என்னும் கேள்வியும் என்னுள் எழுகிறது. இதுபற்றி என்னால் அதிகமாக விவாதிக்கமுடியவில்லை. இது ஒரு புதுவடிவம் என்று யாரும் சொல்லக்கூடுமென்றால் அதுவும் சரிதான். இதுதான் வடிவம் என்று யாரால் சட்டம்போட்டுவிட முடியும்? இரண்டு மூன்றுமுறை வாசித்து என்னைச் சிந்திக்கத்தூண்டிய கதை இது. சிந்தனை இதன் வடிவம்பற்றியதுதான். இக்தையில் பல இடங்களில் கட்டுரையின் சாயல் எழுகிறது. இக்கதையின் வடிவம் மாறியிருந்தால் இவ்வனுபவம் என்னைத்தொட்டிருக்குமோ என்றும் நான் யோசித்துப்பார்க்கிறேன். ஏனெனில் இவ் அனுபவத்தளம் சிறப்பானதொன்று. அது எல்லா இடமும் தொட்டுச்செல்லவேண்டிய ஒன்றாகும்.

அனுபவத்தளத்தினூடாகவும், சொல்லப்பட்ட முறையினூடாகவும் என்னைப்பாதித்த கதையென்று ஷோபாசக்தியின் "எலிவேட்டை" கதையையே நான் குறிப்பிடுவேன். மிக முக்கியமான கதை இது. இக்கதையில் சொல்லப்பட்ட செய்திகள் அனேகம். அவற்றைச் சிறப்பாகச்சொல்லிமுடிக்கிறார் ஷோபா சக்தி. இலங்கையில் சிறுவர் விபச்சாரம், இராணுவத்தைவிட்டு சிங்கள இளைஞர்களின் வெளியேற்றம், வர்க்க முரண்பாடு, புலம்பெயர் வாழ்விலிருந்து புறந்தள்ளப்பட்ட அவலம் எனப்பல்வேறு விடயங்கள் இக்கதையில் கையாளப்படுகிறது. ஆனால் பிரச்சாரவாடை வீசாமல் இக்கதை சொல்லப்பட்டமுறை என்னைப்பெரிதும் கவர்ந்தது. சமீபத்தில் நான் வாசித்த கதைகளுள் என்னைக்கவர்ந்த முக்கிய கதைகளுள் இதவும் ஒன்று. முக்கியமாக இக் கதையை ஷோபாசக்தி இன்னும் விரிவாச்சொல்லியிருக்கலாமோ என்றும் நான் யோசித்தேன். அவ்வாறு சொல்லப்பட்டிருந்தால் இவ்வனுபவத்தை நாம் மேலும் உள்வாங்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு விரிக்கப்புறப்பட்டு பிரச்சாரத்தன்மைக்கு ஆளாகிவிடுமோ என்றும் நான் சந்தேகப்படுகிறேன். எலிவேட்டை குறிப்பிடத்தகுந்த ஒரு கதை.

எனது கதையில் ("மகிந்தாவின் சாவு" - அ. இரவி) எழுத்துப்பிழைகள் அதிகம் இருந்தன. பல எழுத்துக்கள், சொற்கள், வசனங்கள், ஏன் பந்தியே கூட விடுபட்டுப்போயிருந்தன. ஒரு இடத்தில் வரவேண்டிய பந்தி இன்னொரு இடத்தில் வந்தது. "மகிந்தாவின் சுமையில் அரைப்பங்கை ராஜா சுமக்கிறான்" எனும் வசனம் மகிந்தாவின் சமையலில் அரைப்பங்கை ராஜா சமைக்கிறான்" என வந்துள்ளது. எனது கையெழுத்தும் ஒழுங்கற்றதுதான். குறைசொல்வதற்காக அல்ல; இதில் கவனமெடுப்பதும் முக்கியம் தானே!

சிறுகதைக்கு இவ்வாறான ஒரு சஞ்சிகை வெளியாவது மிக அவசியமானது. இது "பாரமான" முயற்சியும் தான். தடக்குப்படாமல் இரண்டுமாதத்திற்கு ஒரு தடவையாவது இச்சஞ்சிகை வெளிவருமென்றால் சிறுகதை மேலும் வளம்பெறும். தமிழில் மிகமுக்கியமான சிறுகதைகள் "அம்மா"வில் வெளிவரவேண்டுமென்பதே என் பேரவா.

- அ. இரவி.
Room N°: 237, EMBRICA
MARCEL, OTAVI Str-11, 28237
BREMEN, GERMANY

# சமுதாயத்தை கேள்விக்குள்ளாக்கும் கதையாக வரட்டும்!

அம்மா1ல் வெளியாகிஉள்ள கதைகள் மீதான சில குறைகளை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். சமுதாயத்தில் காணப்படும்சில முரண்பாடுகளை கதை சுட்டிக்காட்டுகின்ற போதிலும், அதில் சில,பல குறைபாடுகள் உள்ளது. அதை நிவர்த்தி செய்யவும், கதையின் எல்லாப் பக்கத்தையும் பார்க்கக் கோரும் நோக்கில் இவ் விமர்சனத்தை எழுதுகின்றேன். இதன்மீதான துல்லியமான அரசியல் விமர்சனத்தை வைப்பதைத் தவிர்த்து, பதிலாக எழுதுபவர்களில் உள்ள சில முக்கிய குறைபாடுகளை இனம் காட்ட முனைகிறேன்.

"எலிவேட்டை" என்ற ஷோபாசக்தியின் கதை பிரான்சிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட ஒருவன் தனது கொழும்பு நண்பன் ஒருவனுடன் தங்கியிருந்த போது அங்கு நடந்த சில யதார்த்த சம்பவங்களை கதையில் வெளிக்கொண்டு வருகிறார். இராணுவத்தில் இருந்து தப்பியோடும் ஒருவன், அவனின் தங்கையைக் கெடுக்கும் தமிழ் முதலாளி, அவனிடம் வேலைபார்க்கும் தமிழ்ச் சிறுவன், சிறுமியுடன் நடக்கும் பாலியல் வன்முறை என அனைத்தையும் உண்டாக்கியதே இக்கதை.

நாடு திருப்பி அனுப்பப்படும் ஒருவரை பிரான்ஸ் பொலிஸ் மரியாதையாக அழைத்து வந்து ஏற்றி அனுப்பியதாக சொல்வது யதார்த்தத்துக்கு புறம்பானது. சட்டவிரோதமாக 15 வருஷம் வசித்த ஒருவன் எதிர்த்துப் போராடும்போது அங்கு வன்முறை நிகழ்கின்றது.

சிலவேளை மூடிய அறைக்குள் நடக்கும் வனமுறை சட்டப்படி நிறுவமுடியாமல் போகலாம் ஆனால் யதார்த்த வன்முறையை கதை மறுதலிக்கிறது.

இரண்டாவது அவர்கண்ட நிகழ்வு அதன் பிரதிவிளைவாக மீளவும் பிரான்ஸ்செல்லுவதும், சிறுவனின் மோசமான உழைப்பைத் தடுக்க பிரான்ஸ் கூப்பிட நினைப்பதும், அதனூடாக பாதிக்கப்பட்ட சிறுமியை அழைக்க நினைப்பது என சொல்லும் கதை தமிழ் சினிமா தனிநபர் கதாநாயகத் தன்மை வாய்ந்தது.

இலங்கைச் சமுதாயத்தில் புரையோடிப்போய் உள்ள சிறுவர் உழைப்பு, சிறுவர் மீதான உல்லாசப் பயண பாலியல் வன்முறை, பாலியல் வன்முறை........என அனைத்துக்கும் தீர்வு பிரான்ஸ் வருவதா? அல்லது அச்சமுதாயதத்துக்குள் தீர்வை தேடுவதா? இரண்டாவது, நாட்டைவிட்டு வெளியேற என காட்டும் காரணம் விசனத்துக்குரியது.

பிரான்ஸ் வருவதன் மூலம் பிரான்ஸில் இன்று ஒரு நீதியான, நியாயமான, மனிதாபிபமான தீர்வு பிரஞ்சு சமூகத்தில் கிடைத்துவிடும் எனக்கூறுவது அதிர்ச்சிக்குரியது. இலங்கை சமூகத்தில் ஒரு மனிதன் வாழ்வதைவிட பிரஞ்சு சமூகத்தில் ஒரு மனிதன் நாயாகவே வாழ்கின்றான் என்ற உண்மையை கதை மூடிமறைக்கிறது. இங்கு மீள வருவது, வேறு பெயரில் விசா போட்டாலும் இங்கு வாழும் உரிமையை நாம் பெற்றுவிட முடியுமா? பிரான்சின் நிலையை சரியாக காட்டாத போக்கு அதுபற்றிய மாயை ஏற்படுத்துகின்றது.

இலங்கை - பிரான்ஸில் இருக்கக் கூடிய சில வேறுபட்ட தன்மை அடிப்படையில் நிலப்பிரபுத்துவமுதலாளித்துவ வேறுபாடே ஒழிய வேறு ஒன்றும் அல்ல. இரண்டுக்கும் பண்பியல் ரீதியில் வேறுபாடு உண்டே ஒழிய பொதுவான மனித விரோதத்தில் அல்ல.

"நியாயார்த்தங்கள்" என்ற வாசுதேவனின் கதை இங்கு உள்ள தொழிலாளர் அறியாமையையும், அதைத் தெரிந்தவர்களுக்குள் இடையில் உள்ள ஒரு யதார்த்த முரண்பாட்டை சுட்டி நிற்கின்றது.

இக் கதையில் உள்ள விமர்சனம் சமுதாயத்தை தெரிந்து கொண்டவனின் அணுகுமுறை தொடர்பானதே. சுரண்டல் என்பதும், அதன் மீதான ஒடுக்கு முறையையும் இனம் காட்டுவது என்பது எப்போதும் ஒரேமாதிரியானது அல்ல. ஒடுக்கப்பட்டவன் தன்மீதான சுரண்டலை உணர்வது இல்லை என்ற வரையில் எப்படி உள்ளானோ, அதை புரிந்து கொள்ளலும், அதன் மீதான தெளிவை ஏற்படுத்த எப்போதும் நிலமையைப் பொறுத்து மாறும் வடிவம் கொண்டது. இதை இக்கதை கவனிக்க தவறுவது என்பது சுரண்டலுக்கு எதிரான ஒரு மனிதனின் பணியை கதையின் போக்கில் மறுதலிக்கின்றது. கதை சுட்டவந்தவிடயம் சரியானது. ஆனால் அதை எப்படி செய்வது என்பதை காண மறுத்தது என்பது கதையில் சுட்டவந்த விடயத்துக்கு எதிரானதாக மாறிவிடுகிறது.

"நுளம்பு + நுளம்புகள்" என்ற அஸ்வதியின் கதை ஒரு கதைக்குரிய அடிப்படை விடயத்தை காணத்தவறுகிறது. கதை எதைச் சொல்ல விரும்புகின்றது என்பதே காணமுடியாத அளவுக்கு பல்வேறு பிரச்சனைகளை உள்ளடக்கி விடுகிறது. நித்திரை, கனவு, நுளம்புப் பிரச்சனை எனச் சொல்லும் கதை ஒரு மனிதனின் நிம்மதியான இரவு பற்றி பேச முனைகிறது. ஆனால், ஆரும் அந்த நிம்மதி இல்லாமல் போன சமூக காரணத்தை தொடமுடியாது கதை நின்றுவிடுகிறது. ஒரு பிரச்சனை மீதான சமூக காரணத்தை யதார்த்தமாக படைக்கப் படவில்லை என்பதே இக் கதையின் மீதான முதல் விமர்சனமாகும்.

"போய் வருகிறேன்" என்ற புவனின் கதை நாட்டை விட்டு வெளியேறும் ஒருவனின் குடும்பப்பிளவையும் அதன் துயரத்தையும் கதை பேசுகின்றது. கதையில் உள்ள கதாபாத்திரம் ஏன் நாட்டைவிட்டு வெளியேறுகிறான்? ஒன்றில் இயக்கத்தில் இருந்த என்ற ஊகம், ஆமி வந்து வீட்டுக்குமுன் நின்று விட்டுச் சென்ற நிலமை. இது இன்றைய இலங்கையின் யதார்த்தம். இந்த யதார்த்தத்துக்கான தீர்வு நாட்டைவிட்டு வெளியேறுவது என்பதாக காட்ட முனைவது தவறானது. அப்படிப் பார்த்தால் இலங்கையில் உள்ள ஆண், பெண் அனைவரும் இன்று வெளியேற வேண்டும் அல்லவா?

இயக்கத்தில் இருந்தார் என்ற ஊகம், உண்மையில் இருந்திருந்தால் ஏன் போராடவில்லை என்ற கேள்வி தொக்கிவிடுகின்றது. நாட்டை விட்டு வெளியேறினாலும் அரசியல், பொருளாதார காரணம் எப்போதும் நியாயப் படுத்தக் கூடாது. மாறாக கதை குறிப்பான நிலையில் வெளியேற்றத்தின் தவிர்க்க முடியாத தன்மையை சுட்டியிருப்பின் சரியானதாக இருந்திருக்கும்.

"மகிந்தாவின் சாவு" என்ற அ. இரவியின் கதையில் அரசியல் தொடர்பான சில விளக்கத்தை முன் வைக்கின்றார். அரசியல் என்றால் என்ன? அழகாக இருக்கிறாள் அல்லது இருக்கிறான் என்றால் என்ன?

அழகு என ஒன்றைக் கூறுவது எமது இயல்பான மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பு அல்ல. மாறாக அழகு என்பது சமூக வாழ்த்தளமேயாகும். ஒன்றின் மீதான அழகியல் கவர்ச்சி உணர்வு என்பது சமூகத்தளத்தில் ஏற்படும் ஒன்றே என்பதையும், இது வெவ்வேறு மக்கள் கூட்டத்திலும், ஒரே மக்கள் கூட்டத்திலும் வேறுபாடு கொண்டது.

அழகு உண்டு என ஒருவன் வாதிடின் சினிமாவில் அழகான கதாநாயகர் அழகான கவர்ச்சி நாயகி இவ்வாறு போய்விடின் படம் தோல்வியடைந்துவிடும் என கூறுவது சரியாகிப் போய்விடும்.

www.tamilarangam.net

ஒரு பெண் அழகானவள் என்று எதைக் கூறுவர். பெண்ணின் முகம், மார்பு. இடை, கால், உயரம். . . என எதுவாக இருந்தாலும் அது 90 வீதமான பெண்களை நிராகரிக்கும் வியாபார விளம்பரத்தின் தொடர்ச்சியே.
ஒரு பெண்ணைப் பார்த்த மாத்திரத்தில் தான் இது ஏற்படின், அல்லது வெளிப்புறமாக நீண்ட நாட்கள் பார்த்தபின் ஏற்படினும், நாம் ஆதிக்கவாதியாக இல்லாவிட்டாலும் இது ஆணாதிக்கத்தின் தொடர்ச்சிதான்.

மாறாக அரசியல் வாழ்வியல் இருப்புடன், வாழும் கருத்துடன், உழைக்கும் கலையுடன் என பலவற்றுக்குள் பார்க்க வேண்டும். மாறாக பார்த்த மாத்திரத்தில் அழகை ரசிக்கும் போக்கு ஆணாதிக்கம் சார்ந்த உழையாத பிரிவின் புலம்பலாகும்.

முகம், கண், இடை, மார்பு.........என அனைத்தும் கொச்சைத் தனமான இன்றைய உலகின் விளம்பர ஆணாதிக்கத்தின் விளைபொருளாகும்.

அழகு, நிறம், இனம், உயரம், வெளித்தோற்றம், கண், மூக்கு.......என்ற அனைத்தையும் தாண்டி உலக மக்களின் பொதுவான அம்சங்களில் அழகியலை தேடவேண்டும். இது மக்களின் உழைக்கும் திறனில் தேடவேண்டும்.

இக்கதை இனவாதத்தின் விளைவு சாதாரண சமூகத்திற்குள் எப்படி புரையோடி உள்ளது என்பதை யதார்த்தமாக காட்டுகின்றது. இதை இன்னும் துல்லியமாக அரசியல், சமூக விளைவுடன் இணைத்திருப்பின் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கும்.

"தேர்" என்ற விஸ்வநாதனின் கதை கலை தொடர்பாகவும், மக்களின் கலையின்மை தொடர்பாகவும், கலைஞனின் பாத்திரம் தொடர்பாக பேசுகின்றது. இக்கதை அரசியல் ரீதியாக அதிக விமர்சனத்துக் குரியது. இருந்த போதும் குறிப்பாக பார்ப்போம்.

மக்களின் கலையுணர்வின்மை என்பது, மேட்டுக்குடியால் களவாடப்படும் கலையாக உள்ளது என்பது ஏன் ஏற்பட்டு ள்ளது என்பதை கதைகாண மறுத்து அதை எரிக்கும் நிலையை நியாயப்படுத்துகின்றது.

கலை கலைக்காக என்ற கோட்பாட்டாளர்களின் போக்கை நியாயப்படுத்த முனையும் வகையில் எரித்தல் நிகழ்கின்றது. மக்களில் இருந்து அந்நியப்பட்ட கலையை மக்கள் எப்போது நிராகரிக்கின்றனர். இக்கலை மோதிரம் போடும் பணக்காரனின் தேவையுடன் இணைகின்றது. மக்களின் அறியாமையை ஏற்படுத்தும் வகையில் கலையை கோரும் நிலையில் மக்களின் கலையுணர்வு இல்லை என்ற அளவுக்கு செல்கின்றது.

இதே மேட்டுகுடி தனது வியாபார நோக்கத்துக்காக அதே மேட்டுக்குடியை கவருவதற்காக கடத்தி செல்வதை காண மறுக்கும் கதை மீண்டும் அதை எதிர்த்து எரிக்க கோருகின்றது. இது கலைகலைக்காகன என்ற பிரிவின் அழுகுரல்களே ஒழிய வேறு ஒன் றுமல்ல. சிறு குறிப்பான விமர்சனத்துடன் இதை நிறுத்திக் கொள்கிறேன்

**- பி. றயாகரன்**

## தமிழ்ச் சிறுகதை உலகிற்கு அம்மா வழிகாட்டியாகவேண்டும்!

**அன்பின் அம்மா,**
அம்மா..........! உன் முதல் இதழ் தாமதமானாலும் தரமாக அமைந்திருந்தது. பணத்திற்காக பாலியல் உணர்வுகளுக்கு பலிக்காடாக்கப்படும் ஆசியச் சிறுவர்களின், குறிப்பாக தென் இலங்கைச் சிறுவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ள ஷோபாசக்தியின் "எலிவேட்டை", வெளிநாட்டு வாழ்க்கையில் அந்நிய முதலாளி வர்க்கத்தினால் சுரண்டப்படும் தொழிலாள வர்க்கத்தின் முரண்பாடுகளை முற்றுமுழுதாக சொல்லாவிட்டாலும் தன் சுயகதையின் மூலம் சற்று விளக்கி நிற்கும் வாசுதேவனின் "நியாயார்த்தங்கள்" மற்றும் "தேர், நுளம்பு + நுளம்புகள், போய் வருகிறேன், மகிந்தாவின் சாவு" எல்லாமே சிறப்பாக அமைந்திருந்தன.

ஆங்காங்கே சில எழுத்துப் பிழைகள் இருந்தாலும், இன்றைய உண்மை நிகழ்வுகளை தாங்கி நிற்கும் கதைத்தெரிவில் அம்மா வென்று விட்டாள் என்றே சொல்லலாம்! இனி தொடர்ந்து வரும் "அம்மா" இந்தப் பிழைகளை நீக்கி உருவத்தில் சிறுத்து, தரத்தில் உயர்ந்து வர்ணஉருவில் வெளிவர வேண்டும் என்பதே எமது ஆவல்....

ஒரு தாய் எப்படி தன் பிள்ளையை திருத்தி நல்வழியில் வழிகாட்டி அனுப்பி வைக்கின்றாளோ, அதுபோல் தமிழ் இலக்கிய சிறுகதை உலகிற்கு வழிகாட்டியாக "அம்மா" வளர எங்கள் வாழ்த்துக்கள்

நண்பர்கள் சார்பாக
**- துரைசுதன்**

**'முடிவுகளையும் நீதிநெறிகளையும் அப்பட்டமாகப்பிரகடனப்படுத்திவிடுவதல்ல படைப்பிலக்கியத்தின் இலக்கணம். அவ்வாறுசெய்துவிட்டால் வாசகர்களின் சிந்தனைகளுக்கும் சலனங்களுக்கும் தூண்டுதல் இல்லாமல் போகும். விரும்பாத ஒரு முடிவைநோக்கி வாசகனை கோபத்துடனோ வருத்தத்துடனோ திசைதிருப்பிவிட்டு, அதற்கான காரணங்களைச் சிந்திக்கின்ற ஒரு உந்துதலை உண்டாக்கிவிடுவது இலக்கியத்தின் சக்திமிகுந்த உத்திகளில் ஒன்று'**

**- த.ராசு**

www.tamilarangam.net

**'உன்னுடைய வாழ்பனுவத்திலிருந்தே மகத்தான இலக்கியத்தை நீ உருவாக்கமுடியும்'**

## இப்படியான கதைகளை எம்போன்ற இளைஞர்களிடம் திணிப்பது நியாயமானதா?

அன்பின் அம்மாவுக்கு,

"ஆனால் மக்கள் இதைத்தான் விரும்பகிறார்கள். இதில்தான் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த மூட நம்பிக்கையை பேணிப்பாதுகாக்கவே வேண்டும். இப்படித்தான் நினைத்தார் தோபோரோல். ஆனால் இப்படி நினைக்கும் தோபோரோலைப் போன்ற கொடியவர்கள் எப்போதுமே இருந்து வந்திருப்பதால், இன்னும் இருந்துவருவதாலும் தான் இவர்கள் அறிவொளி பெற்றிருந்தும் தமது இந்த ஒளியை ஏனையோரும் அறியாமைஇருளிலிருந்து வெளியேறுவதற்கு உதவியாகப்பயன்படுத்தாமல் ஏனையோரை மேலும் இருளில் மூழ்கடிப்பதற்குப் பயன்படுத்துவதால் தான் மக்கள் மூடநம்பிக்கையை விரும்புவதாக அவருக்குத்தோன்றியது. (தல்ஸ்தோயின் புத்துயிர்ப்பு நாவலிலிருந்து....)

"நியாயார்த்தங்கள்" கதையை எழுதிய வாசுதேவனுக்கு மேற்கூறிய வரிகளை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். என்னைப்போன்ற இளைஞர்களின் வாழ்க்கையைப்பற்றிய தேடலுக்கும், போராட்டத்திற்கும் நீங்கள் கூறும் தீர்வு எது? எங்களைவிட வயது அனுபவம் எல்லாவற்றிலும் கூடிய நீங்கள் இப்படியான கதைகளை இளைஞர்களிடம் திணிப்பது நியாயமானதா? புலம்பெயர்வாழ்வில் எத்தனையோ அவலங்கள் இடம்பெறுகின்றன. அவர்களை நல்வழிப்படுத்தும் விதத்தில் நல்லகதைகளை எழுதலாம் தானே! எங்களுக்கு அறிவொளி தருவதற்காக எழுதும் கதைகள் எங்களுக்கு விளங்கவில்லையா? அல்லது நீங்கள் எங்களை அழிப்பதென்றே முடிவுகட்டிவிட்டீர்களா?

- த. தயான்
நியூலி பிளெஸன்ஸ், பிரான்ஸ்.

## கலை என்பதே எப்போதும் சுயானுபவங்களினதும் கற்பனைகளினதும் புனைவுதான்'

அம்மா கண்டேன். -இது படைப்பாளிகள், விமர்சகர்கள், ஆர்வம் உடையவர்களிடையேயான தயாரிப்புத்தான், ஐம்பது பிரதிகள் வரையிலேதான் பிரசுரமாவாள்- என்ற அவளின் நிலைப்பாட்டைக் கவனித்தபோது சுந்தர ராமசாமி அவர்கள் ஒரு சந்திப்பில் கூறியதாகக் கேள்விப்பட்டவை ஞாபகத்திற்கு வந்தன.

-இத்தனை காலமாக (4தசாப்தங்கள்?) தமிழில் எழுதுகின்றேன் இருந்தும் என்னை இன்னும் இரண்டாயிரம் வாசகர்களாவது தெரிந்து வைத்திருப்பார்கள் என்றெல்லாம் சொல்லமுடியாது.-

-தேர்ந்த ஆயிரம் வாசகர்கள் தமிழில் தோன்ற ஐந்தாண்டுகள் ஆகின்றன. காரணம் தமிழில் நல்ல ஒரு நாவலோ, சிறுகதைத்தொகுப்போ ஆயிரம் பிரதிகள் விற்றுப்போக ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன.-

உண்மைதானென்றாகிறது. புலம்பெயர்ந்த தமிழரிடையே பார்ப்போமே...... நம் எண்ணிக்கையை வேண்டுமானால் இலட்ஷங்களில் சொல்லிக் கொள்ளலாம். இவர்களுள் தேர்ந்த வாசகர்கள் எத்தனை பேர்? ஒரு நூறு பேராவது தேறுவார்களா? இவர்களுள் ஐம்பது பேர் படைப்பாளிகளாகவும் இருக்கின்றார்கள். இந்த திக்கிலான வளர்ச்சியின் தேக்கமே சிறுபத்திரிகைகள் என்றும் சிறுபத்திரிகைகளாகவே நின்றுவிடுவதன் காரணமாகும்.

கணையாழியை ஒரு வாசகர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார் இது படைப்பாளிகளின் பத்திரிகை என்று.அநேகமாக எழுதுபவர்களே சிறுபத்திரிகைகளின் வாசகர்களாகவும் இருக்கிறார்கள்.

அம்மாவைக் கொண்டு வந்துள்ளோருக்கு இத்துறையில் நிரம்பிய அனுபவமுண்டு. அட்வைஸ் என்ற வகையில் நானும் எதையாவது பட்டியலிட்டு இக் குறுகிய இடத்தை அடையாமல் நிலமைகள் எவ்வாறுதான் வியாகூலமாக இருப்பினும் இரு கவிதைகளையாவது சேர்த்துக் கொள்ளல் மலரின் சுகிர்தத்தை அதிகரிப்பதாகும் என்று மட்டிலும் கூறி அம்மாவின் படைப்புகள் மீதான என் பார்வையை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

இதழின் முதலாவது கதையான எலி வேட்டை முதலாவது கதைதான். ஷோபா சக்தி என்ற பெயரில் இவரின் வேறு எந்த ஆக்கத்தைத்தானும் இதற்கு முன்னர் நான் சந்தித்ததில்லை. எனினும் கதையில் பேச எடுத்துக்கொண்ட விஷயங்கள், நடை, மொழி என்பனவற்றில் இருந்து படைப்பாளி ஆண்தான் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. -ஏன் பெண்களால் எழுதமுடியாதா- என நீங்கள் கேட்பதுவும் கேட்கிறது. முடியும். எழுதுவது இல்லை.

சிறுகதை ஒன்றில் இத்தனை விஷயங்களைத் தொட்டுப்பேசும் வேறொரு கதையினை அண்மைக்காலங்களில் நான் படித்ததில்லை. அகதி வாழ்வின் அவலங்கள், என்றும் நிலவும் வர்க்கபேதம், வறுமை, அராஜ முதலாளித்துவம் குழந்தைத் தொழிலாளரிம்ஷைகள், பாலர் பாலியல் துஷ்ப்பிரயோகம், தன் புத்ரர்களை த்தானே போர்ப்பலிக்களத்திற்கு அனுப்பும் அரசின் ஷ்வானிஸப் போக்கு என்று இத்யாதி விஷயங்கள். பாராட்டலாம். கதையின் இறுதிப்பகுதியில் விபரிக்கப்படும் இரண்டு காட்சிகள் மாத்திரம் யதார்த்தக்குறைவுடன் மனதில் ஒன்ற மறுக்கின்றன. எலிவேட்டைக்குப் பயந்த காமினி இரவு சகாயராசன் கடைக்கு தலையில் சாக்குப் போட்டுக் கொண்டு வந்தான் என்பது. சாக்குப்போட்டு ஒளிக்கும் முயற்சியே அவனைக் காட்டிக் கொடுத்துவிடாதா? இவ்வாறே இவர்கள் பார்வையில் படும்படியாகவே சகாயராசன் சுவர்ணமாலியைத் தன்னுடன் சேர்த்து நசுக்கினான் என்பதோ அறைக்குள் இழுத்துச்சென்று புணரத் தலைப்பட்டான் என்பதோவுமாகும். இவற்றைத் திருஷ்டியாகக் கொண்டு கதைக்கு மீண்டும் பாராட்டுதல்கள்.

நியாயார்த்தங்கள் கதையானது வாசுதேவனால் ஐரோப்பாவில் அகதிவாழ்வு வாழ நேர்ந்து எலி ஓட்டவாழ்வில் சேர்ந்து ஓட நேர்ந்து விட்ட ஒருவருக்கு தொடர்ந்து எலி ஓட்டம் ஓட எவ்வாறு சமயங்களில் எவ்வாறு மனச்சாட்சியையும் , அதை ஒத்த மானிட விழுமியங்களையும்

www.tamilarangam.net

மறைத்து வைக்க வேண்டி வருகிறது என்பதையும் அதனால் ஏற்படும் மனோ ரணங்களையும். அதன் வலிகளையும் ஒரு கவிதைக்குரிய நேர்த்தியுடனும் சொற்செட்டுடனும் வார்க்கப் பட்டிருக்கிறது. நாகரீகம் என்று நாம் எண்ணிக்கொள்ளும் வாழ்க்கையை, தற்செயலாகத் திரும்பிப் பார்க்க நேர்கையில் எதிர்ப்பரிணாமத்தில் எவ்வளவு தூரம் விலங்குகளாக மாறிவிட்டிருக்கிறோம் என்பது நெஞ்சிலிருந்து புறப்படும் அலங்காரமற்ற வார்த்தைகளால் சித்திரமாக்கப் பட்டிருக்கிறது.

வாடிய பயிர் கண்டு வாடும் மென்மனது அவருக்கு. வேலை ஸ்தலத்தில் சக தொழிலாளித் தோழர்கள்பால் கொண்ட நேயம் காரணமாக சமயங்களில் உதவியோ, அட்வைஸோ பண்ணப் போய் தானே மூக்குடைபட்ட அனுபவங்கள் அவரது. அதிலிருந்து தான் பிழைக்கவேண்டுமானால் இரக்கம், தாட்ஷண்யம் போன்ற குணங்களையெல்லாம் கழற்றித் தூர வைத்திடவேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்.

<u>வேலைக்கு வெளியேயான தனிப்பட்ட வாழ்விலும்அவர் அதே கொள்கையைத் தொடர முயற்சிப்பது அப்பாத்திரத்தின் தன்மைக்கு இயல்பாயில்லை.</u>

இயன்குமு கிழவன் மரண ஆபத்தை விளைவிக்கக் கூடிய இறைச்சியை வாங்கிக்கொண்டு போகும் போதும் வாளாதிருந்தேன் என்பதும் அதனால் அவன் துன்பங்களிலிருந்தும் விடுதலை கிடைத்துவிடும் என்பதும் சற்றே மிகை. இது ஒரு அப்பாவியின் உயிருடன் விளையாடும் மரண விளையாட்டல்லவா?
ஒரு பிரச்சனையை நிஜவாழ்வில் எதிர்கொள்வதற்கும் படைப்பிற்குள் treat; பண்ணுவதற்கும் மிகநுட்பமான வித்யாசமொன்றுண்டு. இவ்வகை பேதங்களுடன் படைப்பாளியின் தர்க்கத்திற்கப்பாலான மனது சதா மோதும். கலை என்பதே எப்போதும் சுயானுபவங்களினதும் கற்பனைகளினதும் புனைவுதான். ஒவ்வொரு சுயானுபவமும் படைப்பாளியைப் பொறுத்த வரையில் முக்கியமானதுதான். ஆனால் எதனைக்கலை பண்ணுவது என்ற தேர்வின் நுணுக்கத்திலும், அதை அழகில்தோய்த்துப் புனைந்து மெட்டுப் பண்ணும் தொழில்நுட்பத்திலுந்தான் படைப்பாளியின் ஆளுமை தெறிக்கின்றது.
இதில் படைப்பாளி மறம் சார்ந்த முடிவுகளைத் தர நியாயமான காரணங்களில்லை.
படைப்பாளியின் அனுபவம் யதார்த்தத்தில் அவ்வாறேதான் அமைந்துவிடினும் அவன் அதைப் படைப்பிற்குள் நியாயப்படுத்தவோ சமாதானப் படுத்தவோ முயலக்கூடாது. அது வாசகனின் ஞானத்தைக் குட்டுவதாகும். ஒரு உயர்ந்த படைப்பின் முதல் தகுதி அதை நுகர்வோன் அதைக்கொண்டு தன் வாழ்க்கையை மறுபரிசீலனை செய்யமுடியும் யோக்யதையைக் கொண்டிருத்தலாகும்.
வாசுதேவனின் மொழிப்பிரவாகம் அபாரம்! வாசகர்கள் அவரிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கலாம்.

நுளம்பு + நுளம்புகளை வாசித்தபோது நீர்கொழும்பில் ஒரு நண்பர் வீட்டில் ஒருமுறை நுளம்புடன் பட்ட அவஸ்த்தையே ஞாபகம் வந்தது. நான் பட்ட துன்பத்தைப் பார்த்த அவர் மூன்று நான்கு நுளம்புத்திரிகளைக் கொழுத்தி என்னைச் சுற்றிலும் வைத்தார். காலையில் எழுந்ததும் கரிசனையுடன் கேட்டார்:

-நுளம்புத்திரிகள் வைத்தபின்னால் தொல்லை எப்படியிருந்தது?-

-இதற்கு என் இதயத்திலிருந்து வரும் உண்மையான பதிலை அப்படியே சொல்லுவேனாயின் அது முரண்நகைச்சுவையாகவும் உங்களின் விருந்தோம்பலைக் குறைத்து மதிப்பிட்டதாயுமாகும்.-

-பரவாயில்லை...... பரவாயில்லை சொல்லுங்கள்... சிரித்து நாளாச்சு!-

-திரிகளின் தீமுனைகளைத் தவிர அறையின் சர்வமுடுக்கிலும் நுளம்புகள் நீக்கமற வியாபித்திருந்து என்னைக்குதறி விட்டன நண்பரே- என்றேன்.

அஸ்வதியின் அனுபவம் நன்கு வார்த்தைவயப்பட்டுள்ளது. தன்னுடைய கூடாத கெமிக்கல் ஒன்றை எமது உடம்பில் விட்டுச் சென்றுவிடும் என்று எழுதுவது தவறு. கெமிக்கல் என்ற வார்த்தை ஆங்கிலப் பொதுவழக்கில் அசேதனச்(இரசாயன) சேர்வைகளை குறிக்கவே பயன்படும். நுளம்பு விட்டுப்போவதோ சேதன நொதியம்(கரைப்பானூ குருதிஉறைதலெதிரி) ஒன்று.

நுளம்புகளின் கதை ஒரு உருவகக்குறியீடாகவே படுகிறது. அண்ணனின் அறையில் நுளம்புத்தொல்லை குறைவாக இருக்கும் என்று எண்ணிய தம்பி அங்கே போகிறார். அண்ணனோ தூக்கத்திலும் மெல்லச்சிரிக்கிறார். அண்ணன், தம்பி, நுளம்பு பாத்திரங்களின் விவரணம் புரிந்துபோகிறது. இப்போதைக்கு நுளம்புகளிடமிருந்து விரைவில் விடுதலை கிடைக்கும் என்று நம்புவது சுகமாக உள்ளது.

ஒரு நேரத்தில் பெற்றவர்களின் அன்புகூட அலட்சியத்திற்குரியதாய் தோன்றும்.
என் நண்பனொருவனுக்கு தன் திருமணத்தின் போதுகூட ஆசீர்வாதங்களுக்காக தாயின் பதங்களைப் பணிதல் அவமானத்திற்குரியதாகப் படுகிறது அவன் மனைவி மட்டுமே ஒற்றையாகப் பணிகிறாள். பின்னால் தாய் இறந்தால் மட்டும் பெரிதாய் மூன்றுக்கு நாலு அடியில் அவர் படத்தைப் பெரிது பண்ணி அறையில் வைப்பான் என்று நினைக்கிறேன்.
புவனது கதை புலம்பெயர்ந்து விட்ட சராசரியானவர்க்கு ஏற்படும் பாச ஈர்ப்புகளும், குடும்ப உறவுகளுக்கான ஏக்கங்களின் தொடர்ச்சியுந்தான்.

மகிந்தாவின் சாவு-வில் சிங்கள மக்கள் வாழும் சமூகமொன்றில் வாழ ,நேரும் தமிழ்க்குடும்பம் ஒன்று எதிர்நோக்கக்கூடிய பிரச்சனைகள்,தொடரும்போரினால் தமிழர்கள் மாத்திரமல்ல சிங்களவர்களும் எவ்வாறு தம் பிள்ளைகளை இழந்து பரிதவிக்கிறார்கள் போன்ற நிகழ்வுகளை நேர்த்தியாகக் கூறிச்செல்கிறார் அ. இரவி.
கதைக்குள் இருந்து பெறக்கூடிய ராஜாவின் பிரிவு, விறகு வாங்க ஆயிரம் ரூபாய்கள்கூட இல்லாது போகும் கையறுநிலை போன்ற தரவுகளிலிருந்து மகிந்தாவின் மரணத்திற்குரிய காரணங்கள் எதுவுமே அழுத்தமானதாக இல்லை. இவ்வாறு ஊகங்களுக்கு இடந்தரமுடியாத பலவீனமான நிகழ்வுகளுடன் அப்பாவிப் பாத்திரம் ஒன்றின் மரணத்தின் மர்மம் ஒன்றையும் வைத்து கதையை மூடித்தைத்துவிடுவதன் மூலம் கதாசிரியர் எதனைத்தான் சாதிக்க விழைகிறாரோ?

தேர் கதையை எழுதிய மீ. விஸ்வநாதன் எழுத்துக்குப் புதியவரென்றே தெரிகிறது. பிள்ளையின் கண்ணழகை ரசிக்க முடிந்த ஒரு கலைஞனாற்றான் அவ்வழகை பிரகலாதன்டத்திலும் சிருஷ்டிக்க முடியும். கதாசிரியர்

www.tamilarangam.net

சற்றே இங்கு சறுக்குகிறார். உயிருள்ள சிலையை இழந்தபோது ஏற்படாத கோபமும், உன்மத்தமும் மரத்தாலான தேர் சிதைவுக்கும் களவுக்கும் உள்ளானபோது சிருஷ்டிகர்த்தாவுக்குண்டாகிறது. இதைப்போன்றே கலையின் மீதான காதலைலாகிரியாக்கிவாழ்க்கைக்கு அப்பால் கடத்திச்சென்று பார்க்கும் அதீத கற்பனா முயற்சிகள் ஏலவே தமிழில் நிறையவுண்டு. ஒரு கிலோ வீரை விறகைக்கூட அரை மணிக்குமேல் வைத்து எரிக்கலாம். ஒரு முழுத்தேர் அரை மணியில் சாம்பராவதென்பதும் கற்பனைக்கசடுதான். இவர் போன்ற எழுத்தாளர்களின் கற்பனைகளை எத்தனை வடங்கள் கொண்டுதான் இழுத்தாலும் யதார்த்த உலகிற்கு இறக்குவதென்பது சிரமம் அவர்களாகவே தம் வாசிப்புப் பரப்பைப்பெருக்கி,கலானுபவங்களை விஸ்தரித்துக்கொள்ளும் வரையில்.

- **பொ.கருணாஹரமூர்த்தி**
Skalitzer str. 142
10999 BERLIN,
GERMANY.

## ஏழ்மையான அம்மாவைப்பபார்த்தபோது அழத்தோன்றவில்லை. மகிழத்தான் தோன்றியது!

அம்மா" ஆசிரியர் அவர்களுக்கு,

வாய்க்கட்டுப் பலமாகவும், அடிப்பாகம் பலப்பில்லாமலும் இழைக்கப்படும் பெட்டிகளைப்பார்த்திருக்கிறோம். இதேபோல இலக்கியம் என்று! சொல்லி சினிமாவின் சதைகளுக்கு வெளிச்சம் போட்டுக்கொண்டு இடநிரப்பும் இலக்கியத்தெய்வங்களையும் பார்த்திருக்கிறோம்.

முற்றிலும் மாறுபட்டநிலையில், ஓர் இலக்கியமடல் வெளிவந்திருப்பதையிட்டு மகிழாமல் இருக்கமுடியாது. வெறும் ஏழுமுழம் கைத்தறிப்புடவை அணிந்து கண்ணையும் மூக்கையும் வெறும் சேலைத்தலைப்பால் துடைத்துக்கொண்டு வந்த "அம்மா"வைப் பார்க்கும்போது அழத்தோன்றவில்லை. மகிழத்தான் தோன்றுகிறது. அட்டையில் அம்மாவின் சரிந்த தோற்றம் நடை உயர்ச்சியைத்தான் காட்டுகிறது.

தரமான சிறுகதைகள். சோகத்தை அப்பியவண்ணம் இருகதைகள்.

எலிவேட்டையில், தேவன்கள் சுவர்ணமாலிகளைக் காப்பாற்றவேண்டும். இது மனிதாபிமானம். அதேவேளை, அன்னலட்சுமிகளின் மகள்களை இராணுவத்திலிருந்து திரும்பிவந்த காமினிக்கள் காப்பாற்றுவார்களா? இல்லையென்றுதான் சொல்லத்தோன்றுகிறது. வயிற்றுப்பசிக்கு காமப்பசி தன்கோரப்பார்வையை முதலாளித்துவத்தின் முதுகில் ஏறிநின்று வீசுகின்றது. இதற்கு முடிவே இல்லையா?

"நியாயார்த்தங்களில்" ஒவ்வோருமனிதனும் தன் மனச்சாட்சியை அடகுவைத்து, வரும் வருமதிக்காய் மனச்சாட்சியை ஊமையாக்குகிறான். மனிதம் விழித்துக்கொள்வதுதான் எப்போது? நீதிவேண்டி நீதி, இனி எந்த நீதிமன்றம் செல்லும்?

"போய்வருகிறேனில்", நடுத்தரக்குடும்பத்தின் சொத்து, பாசம், வறுமை பிடிவாதம் இந்த விழுமியங்களின் பிரதிபலிப்பத்தான் இன்றைய இளைஞர்களின் விரக்திவடிவம். பாசங்கள் கண்ணீர்த்துளிகளின் வழி வெளிப்படுகிறது. "அம்மா கோபத்ததில் என்னைத்தன்னுடன் கதைக்கவேண்டாமென்று சொன்னாள்" காரணத்தைக்காண கடைசிவரை முயன்றும் பதிலில்லை. அனுபவித்து எழுதியது போன்று இருக்கிறது.

"மகந்தாவின் சாவு" வாசிக்கத்தூண்டியது. பயமே வாழ்க்கையாகி, உண்மைகள் மௌனமாகியநிலை. துவேசங்களுக்குத்துணைபோகாதவர்களுக்கு தினம்சோதனை.

"தேர்" ஓர் கலைஞனின் உழைப்புத்திறமை கொச்சைப்படுத்தப்பட்டதால் ஏற்பட்ட மனவெடிப்புத்தான் தேர் எரிப்பு. மனதைப் பாதிக்கின்ற கருவாகவந்தாலும், ஏற்கனவே பிரசுரமான படைப்பைத்தோந்தெடுக்கவேண்டிய நிலை ஆசிரியருக்கு ஏன் ஏற்பட்டது.

மீண்டும் அம்மாவைக்தரிசிக்கக் காத்திருக்கும் இவன்

- **சிவலிங்கம் சிவபாலன்.**
14, Rue des Champs, 75016 Paris.

## அம்மா உலகம் பூராவும் வாழும் எம்மவர் மத்தியில் பவனிவரல்வேண்டும்!

......அம்மா பங்குனி "97 இதழ் படிக்கக்கிடைத்தது. ஆக்கங்கள் தரமாக உள்ளன. எனது கருத்தையும் வெளிடுவது கடமையே!

"எலிவேட்டை" கரு பழமையானது. கதையின் தொகுப்பு நன்று.

"நியாயார்த்தங்கள்" உரைநடை கனமாவுள்ளது. ஜீரணிக்கும் தன்மை குறுகியவாசகர்களுக்குத்தான் இயலும். எந்தநாடாயினும் முதலாளித்துவ அமைப்பின் கீழ் சம்பவிக்கும், முதலாளி தொழிலாளி இருதரப்பினரதும் சுயநலங்கள், சுரண்டல்கள் சர்வசாதாரணமானவையே. பிரான்ஸ் நாட்டில் எம்மவர்கள் மத்தியில் பாஷைப்பிரச்சினை முன்னைய நாட்கள் போல் அல்ல. கடன்தொல்லை, குடும்பப்பொறுப்பு உள்ளவர்கள் பாஷை படிக்கவில்லை. இவர்கள் சிலசமயங்களில் பிரச்சினைகளை எதிர்நோக்கலாம். ஆனால் இவர்களும் தங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தங்களது பிள்ளைகள் மூலம் அணுகித்தீர்க்கின்றனர். இந்நாட்டில், அரசு. சமூகசேவை ஸ்தாபனங்களின் பணஉதவியுடன் கல்விகற்றவர்கள் நம்மவர்களிடம் உதவி என்றபெயரில் தயவுதாட்சண்யமின்றி உபகாரம் பெற்றுள்ளார்கள். இந்நாட்டு சமூகசேவை ஸ்தாபனங்கள் இவ்விடயத்தில் அதிருப்தி கொண்டுள்ளது பலருக்குத்தெரியும்.

உற்பத்தியாளர்கள், பழுதான இறைச்சியை அரசதடைகளையும் மீறி சந்தைப்படுத்துகிறார்கள். இந்நிலை முதலாளித்துவ அமைப்பில் நிலவுவது சர்வசாதாரணம். "நியாயார்தங்கள்" திரும்பதிரும்ப படிக்கும்போது, தர்க்கரீதியாக கொடுக்கப்பட்டவிடயங்கள், சிருஷ்டித்தவர் பாதிக்கப்பட்டு

www.tamilarangam.net

தம்மை நியாயப்படுத்த தர்க்கம் செய்கிறாரோ என எண்ணத்தோன்றுகிறது.

நுளம்பு நுளம்புகள், மகிந்தாவின் சாவு, போய்வருகிறேன் என்பவை மனசைத்தொட்டுச்சிந்திக்கவைக்கின்றன.

"தேர்" சுமாராக உள்ளது. ஒரு உண்மைக்கலைஞன் தான்சிருஷ்டித்த கலைச்சிற்பங்களை அழிக்கமுற்படமாட்டான் என்பது எனது கருத்து. தன் சிற்பங்கள் களவுபோகின்றது. தேரின் புனிதத்தன்மை துர்ப்பிரயோகம் செய்யப்படுகின்றது என்ற காரணத்தால் விரக்தியுற்று தீமூட்டி அழிப்பானா என்பது சந்தேகம். கலைஞர்கள் உடைந்த சிற்பங்களுக்கு உயிர்கொடுப்பவர்கள். காணாமல்போகும் சிற்பங்களுக்குப் பதிலாக புதுச்சிற்பங்கள் நிலைநாட்டுபவர்களே கலைஞர்களாவார்கள். தான் சிருஷ்டித்த கலைச்சிற்பங்களை அளிக்கும் கலைஞன் சினிமாவில் வருவான். கலைக்காக பிள்ளையையே தாக்கிய கலைஞன் கலையை அழிக்க முன்வருவானா என்பது சந்தேகம். எம் கலைஞர்கள் சிருஷ்டித்த தேர்கள் படைகளால் அழிக்கப்பட்டபோது எழுதவிரும்பாத கதாசிரியர், கலைஞன் தேரை அழித்தான் என்று முடித்தது ஏற்றுக்கொள்ளமுடியாது.

"அம்மா" உலகம்பூராவும் வாழும் எம்மவர் மத்தியில் பவனிவர எல்லோரும் அயராது உழைக்கவேண்டும். இலக்கிய ஆர்வமுள்ளவர்கள், வாசகர்கள் பேராதரவு கொடுக்கவேண்டும். இதுவே எனது ஆசை.

**"செந்தமிழர்",**
சேர்ஜி பொந்துவாஸ், பிரான்ஸ்.

**'....கதையின் முடிவையிட்டு நீங்கள் வருத்தப்படுகின்றீர்களா? ரொம்ப நல்லது. அதற்காகத்தான் அந்தமுடிவு. அந்த வருத்தத்தினூடே வாழ்வின் போக்கைப் புரிந்துகொண்டால் வருத்தம் என்கிற உணர்ச்சிகுறைந்து வாழ்வில் அப்படிப்பட்டவர்களை, அந்த நிகழ்ச்சிகளைச் சந்திக்கும்போது மனம் விசாலமுறும்'**
**- ஜெயகாந்தன்.**

## கொந்தளிப்புகளுக்கு வடிகால்தேடும் களமே படைப்புக்களம்!

.....ஷோபாசக்தியின் "எலிவேட்டை" நாவலுக்குரிய கரு. நல்ல கரு. கதை அமைப்பிலும், சொல்லும் திறனிலும் நேர்த்தியாகஅமைந்தது. இலங்கையின் சிங்களப்பகுதிகளில் இளைஞர்களுக்கிருக்கும் நெருக்கடியும் கதையினூடு வெளிக்கொணர முயற்சிக்கப்பட்டிருக்கிறது. எலிவேட்டைக்குப்பயந்து காமினியைச் சாக்கால் மூடி தெருவிற்கு இறக்குவது யதார்த்தமாக அமையவில்லை. வழமையான "கதைபண்ணல்" பாணியில் புலம்பெயர்ந்தநாடொன்றிலிருந்து கதைநாயகனை இலங்கைக்குப்போராட அனுப்பாது இலங்கையிலிருந்து பிரான்சுக்கு அனுப்பப்படுவது ஒருமாறுபட்ட அம்சம். பல்வேறு சிந்தனைகளைத்தூண்டுகிறது.

வாசுதேவனின் "நியாயார்த்தங்கள்" சொல்லல்முறை தமிழிற்குப்புதிது. மொழிஆற்றல் பிரமிக்கவைக்கிறது. ஆயினும் "சுத்திச்சுழன்று சொல்வித்தை காட்டாமல்" வேறுவழியால் தான் எடுத்துக்கொண்ட கருப்பொருளை இன்னும் நேர்த்தியாகச் சொல்லியிருக்கலாமோ என்றும் தோன்றுகிறது. நான் ஒரு சுயநலவாதி! நேர்மையற்றவன்!! என நேரெதிரிடையாக கருவுக்கு அழுத்தம் கொடுக்கமுனைந்தாலும், நியாயப்படுத்தும் மறுபக்கம் சமநிலைதவறி மெலெழவே செய்கிறது. இயன்குழு கிழவனின் மரணம் சஞ்சலத்தைத்தருகின்றது. இதன் நிமித்தம் "நான்" என்கிற பாத்திரத்தின் மீது வருகின்ற வெறுப்பே கதையை சிறப்பிக்கின்றது.

அஸ்வதியின் "நுளம்பு+ நுளம்புகள்". நல்லதொரு உருவகம். பிரச்சினைகளுக்குள் சிக்கித்திணறி தீர்வு தெரியாது திண்டாடிக்கொண்டிருப்பதில் என்னபயன்? பிரச்சினைகளுக்குத்தீர்வு எந்த உருவத்திலும் இல்லையென்றால் பிரச்சினைகளை ரசிக்கப்பழகிக்கொள்வோம். இம்முடிவு இயலாமையின் வெளிப்பாடாக இருப்பினும் தான் எடுத்துக்கொண்ட கருவை அழகாக உருவகப்படுத்த முனைந்திருக்கிறார் அஸ்வதி. இன்னும் காலம் எடுத்துச்செய்திருக்கலாம்.

அ. இரவின் "மகிந்தாவின் சாவு". வாழ்க்கை. எளிமையான மொழி. வாசகனை இழுத்துச்செல்கிறது. கதையை இவ்வளவுக்கு நீளமாக்கித்தான் இப்பிரச்சினையை சொல்லியிருக்கவேண்டுமோ "தெரியவில்லை. மகிந்தாவின் சாவு" தலைப்பு அரசியல் அர்த்தம் கொண்டு பார்க்கும்போது அர்த்தமுள்ளதாகத்தான் தெரிகிறது. ரோகினியின் பாத்திரத்தை கடைசியில் இப்படி எதிர்நிலைக்கு மாற்றி இருக்கவேண்டிய அவசியமில்லை. நம்பிக்கைதானே வாழ்வு. பரஸ்பர நம்பிக்கையை, புரிந்துணர்வை தகாத்தெரியும் விதமாக இம்மாற்றம் அமைவது நல்லதல்ல. சிலவேளைகளில் யதார்த்தமாக இருப்பினும் ஆசிரியரின்பணி அதற்கப்பாலும் உள்ளது.

"தேர்" கதை என்னுள் பாதிப்பை ஏற்படுத்திய கதை. ஒரு கலைஞனின் உள்ளுணர்வைப்புரிந்து கொள்ளமுடிந்தது. படைப்பாளியின் வாழ்வுக்கொந்தளிப்புகளுக்கு வடிகால்தேடும் களமே படைப்புக்களம். வடிப்புக்களே படைப்புக்கள். நிஜ உலகிலிருந்து, இன்னோரு உலகிலிருந்தே அவன் படைப்பைப் பிரசவிக்கிறான். படைப்புக்கணத்தில் உறவு, சுற்றம் எதுவும் பொருட்டல்ல. இக்கதையில் தேர் செய்யும்போது தன்மகனை உளியால் அடித்த கலைஞன் வீடுசென்றதும் மகனைப்பார்க்கிறான். "கட்டுப்போட்ட மண்டையோடு படுத்திருக்கும் மகனின் அருகில்சென்று அமர்ந்துகொண்டேன். அவன் தன்னை மறந்து தூங்கிக்கொண்டிருந்தான். அவனைப்பார்க்கப்பாவமாக இருந்தது. அவன் மார்பைத்தடவிக்கொடுத்தேன். அவன் இதயம் மெல்லமெல்ல அடித்துக்கொண்டிருப்பதை என் உள்ளங்கையும், விரல்களும் தெரிந்து எனக்குச்சொல்லியது" இந்த இடத்தில் கலைஞனின் மென்னுணர்வு வெளிப்படுகிறது. அவனால் முடியவில்லை. மீண்டும் தன் உலகிற்குச் செல்கிறான். தன்மனக்கொந்தளிப்பை வடிக்கமுயல்கிறான். பிரகலாதனின் கண்களைத்திறப்பதினூடு தன்மகனின் கண்களைத்திறக்க முறல்கிறான். அவனது அல்லாடல்

www.tamilarangam.net

தெரிகிறது. இப்போப்பட்ட ஒரு கலைஞனிற்கு தனது கலைப்படைப்பு தன்கண்முன்னாலேயே சிதறி சின்னாபின்னமாகிப்போவதை எப்படிச் சகிக்கமுடியும். வேறு எதையுமே செய்யமுடியாத அவனால் தேரை தானே தீயிட்டுஅழிப்பதைத்தவிர வேறுவழிதெரியாது. சில கவிஞர்களின் மரணங்கள் "அர்த்மில்லாது" தற்கொலையில் முடிவதுபோல இவ்வாறான தேர் எரிப்புக்களும் சாத்தியமானவையே.

- புவனன்.

●

## அ. இரவியினுடைய கதைகள் தொகுப்பாக்கப்படவேண்டும்!

அன்புள்ள அம்மாவுக்கு,

நண்பர்களான தி. யோகராஜா, கருணாநிதிமூலமாக எனக்கு அம்மா கிடைத்தது. உங்களது முயற்சி சந்தோசமூட்டுகிறது.

எல்லாம் நல்ல சிறுகதைகளே. பிறப்பிலே இனவாதக் கட்சியான சுதந்திரக்கட்சிஆட்சியமைக்கிறபோதெல்லாம் முருங்கைமரத்தில் போய் ஏறிஇருந்து "மக்கள் இலக்கியம்" என்றபோர்வையில், தங்கள் பலவீனங்களை மறைத்துக்கொண்டு பலவீனமானதும் மிகமோசமானதுமான நடையோடு செயற்கைகதைபண்ணி வளர்ந்துவரும் இளைஞர்களையும் அவ்விதமே எழுதத்தூண்டி, பாழாக்கி சிறுகதைஎழுதும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க அணியினரின் கதைகளோடு பார்க்கிறபோது இவையெல்லாம் நல்லகதைகளே.

கொழும்பின் பகைப்புலத்தில் எழுதப்பட்ட ஷோபாசக்தியினதும், அ. இரவியினதும் கதைகள் மிக அண்மைக்காலம்வரையிலான தமிழர்களின் வாழ்நிலையைக்கூறுவது நன்றாக உள்ளது. பைபிள்பாணி மொழிநடையோடு ஆரம்பித்த ஷோபாசக்தியின் கதையின்மொழி நன்றாக உள்ளது.

ஏறத்தாழ அ. இரவியினது அனைத்துக்கதைகளையுமே நான் படித்திருக்கிறேன். எண்பதுகளில் உருவாகிய ஈழத்துஎழுத்தாளர்களில் மிகமுக்கியமானவர். ரஞ்சகுமார், உமாவரதராஜன், க. சட்டநாதன், எம். எல். எம். ஹனீபா முதலியவர்களோடு வைத்து எண்ணத்தக்கவர். அவரது தொகுதி ஒன்றும் இன்னமும்வராதது துரதிஸ்டவசமானது. இதுவரைகாலம் வரையான அவரது கதைகளை தொடர்ந்து கவனிக்கிறபோது அவர்பயன்படுத்துகிறமொழி, அவர் எழுதிக்கொண்டிருக்கிற இரண்டாவது தசாப்தத்தில் கொஞ்சம் மாற்றமடைந்து செழுமையடைந்தால் நல்லது என்றுதோன்றுகிறது. அவர் தொடர்ந்து எழுதிக்கொண்டிருப்பதும் மகாஜனாக்காதல் கதைகளிலிருந்து ஆயுதஇயக்கமுரண்பாடுகள் மிகச்சிக்கலடைந்த நமதுபோராட்டக்கதைகள் வரை அவரது அனுபவத்தளம் விரிவடைந்திருப்பதும் மிகமுக்கியமானது.

புவனனடைய கதை என்னை அதிர்ச்சியடையச்செய்தது. ஏனெனில் இதுவரைகாலத்தில் யாழ்ப்பாண பாரம்பரிய குடும்பங்களில் இவ்விதம் நிலவும் மௌனமானஉறவைப்பிரதிபலித்த எந்தக்கதைகளையும் வாசித்ததில்லை. ஆனால் பெரும்பாலான குடும்பங்களில் இவ்விதமான ஒரு உறவு நிலவிவருகிறது. அவர்களுக்கிடையில் கட்டற்ற அன்பு இருக்கும். அச்சமோ நாணமோ இன்னுமேதோ கதைக்கவிடுவதில்லை. புவனன் இன்னும் எழுத்துத்துறையில் தீவிரமாக உழைத்து இயங்கவேண்டும்.

மீ. விஸ்வநாதனுடையகதை எனக்குப் பிடிக்கவில்லை. ஒருவகையான தீவிர இலட்சியப்பாங்கு அதன் முற்பகுதியில் வந்து குழப்பகிறது. "அந்நியனில்" கம்யூவால் தாய் செத்தபோது அழமுடியவில்லை. அவருக்கு எந்தச்சலனமும் வரவில்லை. அவரதுதாயை அவர்கொல்லவில்லை என்பதனால் அது இயற்கையானது. ஆனால் இங்குவரும்சிற்பி தன்மகனையே கொன்றும் வாழாவிருப்பது செயற்கையாகப்படுகிறது.

எனது முகவரிகண்டு அ. ரவி. தொடர்புகொள்வாரென்று நம்புகிறேன். கொழும்பிலிருந்து இருவரும் விடுபட்டபிறகு தொடர்பு அறுந்துபோயிற்று.

-நட்சத்திரன் செவ்விந்தியன்.
Arun Ampalavanar, 7/50 Lane Str, Wentworthville, 2145 Australia.



www.tamilarangam.net

# வேறுபாடுகளை நியாயப்படுத்துவதே அழகியல்

- பி. நயாகரன்

அம்மா இதழ்மீதான விமர்சனத்தில் அழகியல் தொடர்பான சிறுகுறிப்பொன்றினை எழுதியிருந்தேன். இதை விரிவாக விவாதிக்கம் நோக்கிலும், ஒரு விவாதமாக வளர்க்கும்நோக்கிலும் அழகியல் தொடர்பான மாயை - அதன் வர்க்கச்சார்பு தொடர்பாக எழுதமுனைகிறேன்.

இன்று மனிதநேயத்தை மீறிய சமுதாயத்தில் இயங்கும்தன்மையைமீறிய அனைத்தும் அழகியலாக நியாயப்படுத்தப்படுகின்றது. இந்த அழகியல் என்பது எது?

மனிதனுக்கு மனிதன், பொருளுக்குப்பொருள், சாதிக்குச்சாதி, மதத்துக்கு மதம், நிறத்துக்கு நிறம், இனத்துக்கு இனம், நாட்டுக்கு நாடு, சூழலுக்குச்சூழல், இயற்கைக்கு இயற்கை, சேர்க்கைக்குச் சேர்க்கை, நகரத்து நகரம், கிராமத்துக்குக் கிராமம் என உலகில் உள்ள எல்லாவற்றிலும் காணப்படும் இடைவெளிவேறுபாட்டையே அழகியலாக இனம்காட்டி, அதன் இருப்பு நியாயப்படுத்தப்படுகின்றது.

ஒன்றுக்குமேற்பட்ட ஒரே பொருட்களிற்கிடையில் இருக்கும் வேறுபாட்டை அழகியலாக இனம்காட்டி அதன் இருப்பு நியாயப்படுத்தப்படுகின்றது.

இந்நிலை ஒழிக்கப்படுவதன்மூலம் சமுதாய இடைவெளி அகற்றப்படுவதுடன் போலிமாயை அழகியலும் அழிந்துபோகும். "இனவேறுபாடுகள், தனிப்பட்ட மக்கள் குழுக்களுக்கு உரிய வகை வேறுபாடுகள் கூட வரலாற்று வளர்ச்சிப்போக்கில் நீக்கப்படவேண்டும், நீக்கப்படமுடியும்" என்கிறார் மார்க்ஸ்.

ஆம்! உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது. எல்லாம் எப்போதும் மாறுகின்றது வேறுபாடு இடைவெளிமீதான வேறுபாடுகூட மாறித்தான் ஆகும். மனிதனை ஒரேமாதிரி உருவாக்கமுடியும் என்பதை அண்மைய விஞ்ஞான முடிவு. அழகியல் என்ற பெயரில் உள்ளமனிதவிரோதப் போக்கு அடிப்படையில் உயர்வர்க்கம் சார்ந்தது.

மனிதனின் ஆழமான உணர்வை, இரக்கத்தை, சுதந்திரத்தை, நியாயத்தை, வீரத்தை, போராடும் தன்மையை, அறிதல்வேட்கையை, பயன்பாட்டின் இலகுதன்மையை, இயற்கைபாதுகாப்பை, ஒழுங்கை, நேர்த்தியை, கலையுணர்வை, உள்ளடக்கத்தை, பயன்பாட்டின் வடிவத்தை....எனப் பரவலாக ஒவ்வொன்றிலும் நாம் அழகியலுக்கு பதில்தேடவேண்டும். மனித உடலியல் வடிவத்தை எடுப்பின் அவை புவியியல், வர்க்கம், சாதி, இனம், நிறம், மதம், மரபு என பலவற்றுடன் தொடர்புடையது. இதை ஆழமாக காணமறுத்த புறநிலைத்தோற்றம் அழகியல் என்று போலியான மனிதனை விரோதிக்கின்றநோக்கோடு தொடர்புடைய அடிப்படையாகும்.

ஒருபெண்ணையோ, ஆணையோ நாம் எடுத்துக்கொள்ளின், அவரவர் சமூகம்பற்றி என்னநோக்கு கொண்டுள்ளனர் என்றுகாணவேண்டும். இதைவிடுத்து தலைமுடி, கண், மூக்கு, முகம், மார்பு, இடை, கால், விரல் என காண்பதும் அதை ஒட்டி அழகியல் என வகுப்பது அடிப்படைப் புறத்தோற்றம் சார்ந்த பொய்மையின் படிவங்களாகும்.

இவை சூழலியல், மதம், சாதி, இனம், நிறம், என அனைத்துடனும் மாறியகாரணியே ஒழிய வேறொன்றுமல்ல. இது மனித இன தோற்றத்தின் தொடக்கப்புள்ளியில் ஒன்றாக இருந்ததும், பின்னால் மனிதனின் நீண்டபோராட்டத்துடன் நகர்ந்ததும் சூழலியலுடன் மாறுபட்டவையே தவிர இயற்கையாதுஅல்ல.

ஒரு நான்கு வயதை அண்மித்த பிள்ளைஒன்றிடம், மனிததோலில் கறுப்பா, வெள்ளையா அழகானது எனக் கேட்டுப்பார்ப்பின், வெள்ளை அழகானது என்றே பதில்வரும். இது சமூகம்பற்றிய பொதுவான கருத்துநோக்காக உருவாக்கப்பட்டதேஒழிய இயற்கையானது அல்ல.
ஒரு கறுப்பு நிறக்குழந்தைகூட வெள்ளையே அழகானது எனக்கூறும் அழகியல் வெள்ளையின் வர்க்கஆதிக்கத்தின் வெளிப்பாடாக உள்ளது.

கறுப்பா வெள்ளையா அழகானது என ஒரு அழகியல்கோட்பாட்டாளரிடம் கேட்பின் பதிலளிக்கமுடியாத சூனியநிலையிலேயே அவர் நிற்பார். இரண்டும் அழகென்று ஏதோ ஒன்றைக்கூறி சமாளிக்கமுடியுமே தவிர வரைவிலக்கணம் தரமாட்டார்.
ஆனால் கறுப்பைக் கிண்டல் செய்யும் கறுப்புப்பணம், கறுப்புக்கொடி, கறுப்புநாள், கறுப்புவேலை என அடயாளப்படுத்தி இழிசொல்லாகவே கறுப்பைப்பயன்படுத்துவர்.

துப்பரவுசெய்யும் ஒருபெண் தொழிலாளியின்மார்பை முழுமையாகக்காணும்போதும், ஒரு மேட்டுக்குடிபெண்ணின் அரைகுறைமார்பைக்காணும் சமூகம் இதில் அழகியல் என்ற பெயரில் வக்கிரத்தையே வெளிக்கொட்டுகின்றது.

அழகியல் என்று ஒன்றுஉலகில் கிடையாது. அழகு என்று ஒன்றை ஒருவன் குறிப்பிடின் அது பொய்த்தோற்றம் கொண்ட புறநிலைசார்ந்த உள்ளடக்கத்தை நிராகரிப்பதாகும்.

அழகியல், கவர்ச்சி என்பன பண்பால் மாறுபட்டனவே ஒழிய இரண்டும் வேறுவேறு விடயமல்ல. அழகியலின் புறநிலைமாயைக்கு தெட்டம்தெட்டமாககொடுக்கும் வேறுபாடே கவர்ச்சியாக உள்ளது. அழகான நடிகை- கவர்ச்சி நடிகை என்பதில் சில பண்புமாற்றம் உள்ளதே தவிர வேறுஎதுவும் அழகியல் உள்ளடக்கத்தில் வேறுபடுவதில்லை.
மனிதனின் நோக்குக்கு இலகுவாக ஒழுங்குபடுத்தப்பட்ட வடிவம் அதற்குள் உள்ள உள்ளடக்கம், சொல்லும்விதம், கோரும்விதம் என இவைகளைகோரும் அனைத்தையும் நாம் இனம் கண்டுகொள்வதன்மூலம் ஒன்றின் தெரிவை நாம் இனம்காணவேண்டும்.

புறநிலை அழகு, கவர்ச்சி என்பன மனிதனின் போலியான மனித வாழ்வுக்கு, அப்பாற்பட்ட சில வர்க்கம்சார்ந்த பிரிவுகளின் தேவையாக உள்ளன. இவை மனித இடைவெளியை, சமூக இடைவெளியை, இயற்கை இடைவெளியை.. நிரந்தரமாக வைக்க இருக்கக்கோரும் கோட்பாட்டின் வடிவமே!
அழகு என்பதே கிடையாது. அதற்கு வரைவிலக்கணமும் கிடையாது. ஒரு குறுகியகுழுக்களின் பார்வை மட்டுமே உண்டு. இது அக்குழுவின் உயர்வர்க்கத்துடன் சார்ந்தது.

□

www.tamilarangam.net

மைக் கொன்ஸலஸ்

மாஜிக் ரியாலிஸம்

# கேப்ரியல் கார்ஸியா மார்க்வெஸ்

## மந்திர யதார்த்தத்தின் பின்னுள்ள சமூக யதார்த்தம்

முக்கியமான உலக மொழிகளிலெல்லாம் மார்க்கவஸின் படைப்புகள் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. இலட்சக் கணக்கில் விற்பனையாகி உள்ளன. குறிப்பாக அவரது அகண்டு விரிந்த படைப்பான ONE HUNDRED YEARS OF SOLITUDE. ஒரு நூற்றாண்டு தனிமை நாவல். இன்றளவும் இவரது கதைகள் தனது பாட்டி தனக்கு சொன்ன கதைகள், கொலம்பிய எல்லைப் பிரதேசத்தின் அர்க்கபகடி நகரத்திலிருந்து தனது பாட்டி சொன்ன கதைகள் என்று மார்க் வெஸ் அழுத்தமாக சொல்கிறார்.

மார்க் வெஸ்ஸை நாம் நாட்டுப் புறவியலாளனாக காணலாம். தொலைந்து விட்ட கிராமிய கபடமின்மையை மீளக் கண்டுபிடிப்பவராகி, நீண்டகாலம் முன்பு காணாமல்போன ஒரு வகையான "கனவுக் காலத்தை படைப்பவராக' அவரை நாம் சுலபமாக காண முடியும். உண்மைதான். அவருடைய படைப்புகளிலும் அசாதரணமான சம்பவங்கள் இடம் பெறுகின்றன. நீண்டபச்சைநிறத் தலைமுடிகள் கொண்ட அழகான பெண்கள், பட்டாம்பூச்சிகளின் கூட்டத்திலிருந்து சாவினின்று உயர்ந்தெழும் மனிதர்கள், தீராத பாலுறவு வேட்கையுடன் குறியில் உடம்பில் பச்சை குத்திய பையன்கள், புல்லைத் தின்னும் மருத்துவர்கள். இவை எல்லாமுமே அவரது பாட்சடின் தொல்காப்பியங்களாகவோ, பிரம்மைகளாகவோ, மந்திர சூத்திரங்களாகவோ தானிருக்கும். ஆனால் இவையெல்லாமே தொலைதூர கடந்த காலம் பற்றிய நினைவுக் கற்மிதங்கள் அல்ல. மார்க்ஸிவன் எல்லாப் படைப்புகளிலும் இடம்பெறும் யதார்த்தங்களுக்கான எதிர் விளைவுகளே ஆகும். (responses to a reality)

கொலம்பியாவில் ஆண்டாண்டுகளாக நிலவும் வன்முறை குறித்த யதார்த்தமே அது. 14 வருட கொல்ம்பிய உள்நாட்டு யுத்தம் 200,000 மக்களை பலி கொண்டது. சமூக வாழ்வின் சகல நடவடிக்கைகளும் அற்றுப்போனது. அரசியல் என்பது மாறி மாறி வந்த கன்ஸர் வேடிவ்கள் பிறகு தாராள வாதிகள் எனவாகிப் போனது. EVIL HOUR இல் வரும் யதார்ததம் முடிவற்ற, சுற்றி வளைக்கப்பட்ட இந்நிலையை சொல்வதுதான். நகரத்து மேயரின் உலுத்துப்போன பற்களை குறியீடாகக் கொண்ட மாற்றமாறிய காலம் அது. நகரத்து பல் வைத்தியன்- அவரது மகன் புரட்சிகர இயக்கத்தின் தலைவன். உழுத்துப்போன மேயரின் பல்விலிக்கு வைத்தியம் செய்ய விரும்பவே இல்லை. ஒப்பந்தம் அகற்றப் படுகிற போது ஒரு பாத்திரம் சொல்கிறது ஆசுவாசத்துடன். எல்லாம் இப்போது வழக்கத்துக்கு வந்து விட்டது!

The Autumn of the Patriarch நாவலின் ராணுவ சர்வாதிகாரிகள் பராகுவாவின் ஸ்டோரஸனலிருந்து நிகரகுவா சொமாஸாவரை மைய இடம் பெறுகின்றார்கள். தனது எதிரிகளை இச் சர்வாதிகாரி சித்திரவதை செய்கிறான். குழந்தைகளை கொல்கிறான். சொற்ப உழைப்பு மிஞ்சியதைக்கூடஅமெரிக்காவுக்கு விற்கிறான். தெருக்களின் வதந்திகளை செவியுற வைக்கிறான். இவை எல்லாமே யதார்த்தம்தான். இத்தகைய உலகத்தில் வெளிப்படையாக பேசுவது புத்திசாலித்தனம் இல்லை. உருவங்களில் தவிர. ஆகவே ஜனங்கள் தம் கதைகளைச் சொல்கின்றார்கள், ஒரு வரலாற்றை மறுபடி எழுதுகின்றார்கள். ஒரு மாறுபட்ட வித்தயாசமான உலகைப் படைக்கிறார்கள்.

மார்க்யிசின் அனைத்து நாவல்களும் செயல்படும் நிகழுமிடம் மகான்டோ(Macondo) எனும் புனைவுச்சமூகம் ஆகும். ஒரு வகையில் இது ஒரு சொர்க்கம். வயதானவர்களாகவோ அல்லது ஆண்மையற்றவர்களாகவோ இங்கு எவரும் ஆவதில்லை. இது காலனியவாதிகள் கற்பனையில் உருவாக்கி வைத்திருந்த இலத்தீன் அமரிக்கா. ஆனால் அங்கு மண்ணுயிர் வாழும் மக்களுக்கு தப்பித்துப் போகிற கற்பனாலோகம் எதுவுமில்லை. இவர்கள் எங்கெங்கு திரும்பினாலும் ஊடுருவ முடியாத அடர்ந்த, உயர்ந்த மலைகளும் கடலும்தான் இருந்தன. அந்த உலகம் அத்து மீறலுக்குரிய, படையெடுப்புகளுக்குரிய உலகம். ஆனால் எவரும் வெளியேற முடியாத உலகம்.

Leaf storm ஒரு அமெரிக்க வாழைப்பழ ஏற்றுமதி நிறுவனத்தின் நுழைவுடன் துவங்குகிறது. சூறாவளிபோல் நுழைகிறது அந்நிறுவனம். அவர்களுக்கென சேவகம் செய்ய சேரியை உருவாக்கி வைக்கிறது. நகரத்தின் முழுப்பெண்களும் சேவகம் செய்ய விபச்சாரிகள் ஆக்கப் படுகின்றார்கள். வாழைத் தோட்டங்களின் கர்ப்பத் தன்மையை முடிந்தவரை உறிஞ்சுகின்றார்கள். பிற்பாடு நுழைந்த மாதிரியே விட்டும் போய்விடுகிறார்கள். அழிவை ஏற்படுத்தி விட்டு போய் விடுகிறார்கள்.

ONE HUNDRED YEARS OF SOLITUDE நாவலில் வரும் வாழைத்தோட்ட தொழிலாளர்கள் கூட்டமாக கொல்லப் படுகிறார்கள். அவர்களது உடல்கள் காணாமல் போய்விடுகிறது. Disappeared பிரபஞ்ச மயமான மொழிவழமைக்கு இலத்தீன் அமரிக்கா வழங்கிய சொற்களில் முக்கியமானது 'காணாமல் போதல்' என்ற வினைச்சொல். அடுத்தநாள் மன்னித்து விடுவதென்ற பிளேக் நோய் அவர்களது சொந்த இருப்பையே துடைத்துவிட்டுப் போகிறது. 1968 ஒலிம்பிக் பந்தயத்தை தொடர்ந்து மெக்ஸிக்கோவில் கொல்லப்பட்ட 500 மாணவர்களது மரணம் மறக்கப்பட்டது போலதான் இதுவும். ஆனால் வெகுமக்கள் நினைவு என்பது அவ்வளவு சீக்கிரம் அழிந்து

www.tamilarangam.net

போகக் கூடியது அல்ல.
அவர்களது நினைவுகளுடன் பாதுகாக்கப்பட்டு ஒரு தலைமுறையினின்று அடுத்த தலை முறைக்கு மாறிச் செல்கிறது.

மகண்டோ(Macondo) சமூகக் குழுவின் தனிமைபட்ட தன்மை(Isolation) என்பது ஒரே சமயத்தில் யதார்த்தமும் ஆகும் உருவகமும் ஆகும். தொழில் சார்பிலும், சமூக நகர்ப்புற வாழ்க்கையிலும் ஏற்படும் புதியவளர்ச்சிகள் பகுதியாகவும்(partially) சித்தார்ந்த ரீதியாலும் காலனிய உலக வந்தடைகின்றன. ONE HUNDRED YEARS OF SOLITUDE நாவலில் ஒரு ஜிப்ஸி மால்க்விடஸ்(Melquiedes) மகோன்யோவுக்கு வந்து சேர்கிறார். ஒவ்வொரு ஆண்டும் அவர் வருகையின் போது அசாதாரணமான சாமான்களை அவர் கொண்டு வருகிறார், பொய் பற்கள், ஸ், அற்புதமான இயந்திரங்கள். இந்த கற்பித நாட்டின் அதிகாரத்திலிருக்கும் அரிலியாடினா புவடிசயா இந்த ஜிப்ஸியின் சாதுரியங்களை ஆச்சரியத்துடனும் குதூகலத்துடனும் அவதானித்துக் கொண்டிருக்கிறான். ஆண்டுக் கணக்காக இவன் மந்திரக் கலையை கஷ்டப்பட்டு தேடுகின்றான். அது ஈயத்தை தங்கமாக மாற்றும் அவனுக்கு வாழ்வின் ரகசியங்களை கொண்டு தரும். ஜிப்ஸியை அவன் சந்திக்கும்போது ஏற்கனவே அவன் அதை அறிவான் என நினைக்கிறான். மகோன்யோ வாழ் மக்களிடமிருந்து மறைத்து வைத்திருக்கிறான் என்றும் கருதுகிறான்.

வரலாற்றிலிருந்து விலகி மூடுண்டு கிடக்க மகோண்டோ அவ்வாறு சபிக்கப்பட்டிருப்பதற்கான குறியீடு அந்த உலகம் கற்பனை செய்யவும் எட்டப்படவும் முடியாதது என விலகி நிற்கும் குறியீடு. பொய்பற்கள், ஐஸ் அறிவிக்கப்பட்டபடி வரும் ரயில் போன்றவை மாயா ஜாலங்களாக தோன்றுகிறது. ஏனெனில் இந்த மக்களை உருவாக்கிய சமூகப் பொருளாதார வளர்ச்சியின் தாக்கத்தை அவர்கள் அனுபவ பூர்வமாக பார்க்க முடியாமல் இருப்பதால் தான்.

முன்னேற்றம் அதன் சாராம்சத்துடன் மகோன்டாவை எட்டவில்லை. நுகர் பொருட்கள் தான்-மாற்றத்தின் உற்பத்திகள் விளை பொருள்கள், நுகர் பொருள்கள் தான் எட்டுகிறது. நகர்புறச் சேரிகளில் வாழும் இலத்தீன் அமரிக்க குழந்தைகள், நைக் ஷீக்களுக்கும், மகோன்யாவின் ஒரு தரிசனத்துக்காகவும் அலைகின்றன. அவர்கள் எல்லாருக்கும் தொலைக்காட்சி இருக்கின்றது ஆனால் சுத்தமான குடி தண்ணீர் இல்லை.

மகோன்டோவின் சமூகத்துக்கு திரும்பிப் போக முடியாத ஒரு அடர்ந்த காலமும், கட்டமைக்கப் படவே முடியாத தெளிவற்ற எதிர்கால மொன்றும் இருக்கிறது. இவற்றிற்கிடையில் சிக்குண்டிருக்கிறார்கள் அம்மக்கள். இரண்டு வகையான மொழிகளுக்கிடையிலும், இருவகையிலான கற்பனைப் பிம்பங்களுக்கிடையிலும் அவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள்.

ஒரு புறத்தில் வெகுஜனக் கலாச்சாரம் ஏதுமற்ற மக்களின் அனுபவங்களினூடே அவர்களின் கதைகளையும் ஐதீகங்களையும் எடுத்துச் சொல்கின்றது. அதிகார பூர்வ வரலாறு இம்மக்களின் அனுபவங்களை மறுக்கிறது.

CHRONIDE OF DEATH FORETOLD நாவலின் எதிர்காலம் பற்றிய அறிவு கூட, அந்த எதிர்காலத்தை தவிப்பதற்கு அவர்களுக்கு உதவுவதில்லை. அந்தச் சமூகம் தன்மீது விதிக்கப்பட்டவைகளாகக் காண்பதெல்லாம், அதன் பார்வைக்கு அகப்படாத பொருளாதார சக்திகளின் விளைவுகள்தான் என்று அவர்களால் அறிய முடியவில்லை.

EVIL HOUR கதையில் புனித தீர்த்தத்தில் நிறைய எலிகள் செத்துக் கிடப்பது ஏன் என்பதற்கான காரணங்களையோ, விளக்கங்களையோ அம்மக்களுக்கு தேவாலயங்கள் சொல்வதில்லை. Chronide of a death foretold கதையில் அதிகார வர்க்கம் அறியப்படாத ஆவணங்களை ஒழித்து வைக்கிறது. முடிவற்ற பகையில் அரசியல் வாழ்க்கை நிராகரிக்கப்படுகிறது. No body writes to the colonel கதையில் வருகிற நாயகன் மாதிரி பென்சனுக்காக மக்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

மார்க்யுஸின் மேஜிக்கல் ரியாலிஸம்/ மந்திர யதார்த்தம் வெகுஜனப் பிரக்ஞையின் பொருள்பொதிந்த அழகியலை வெளியிடுகிறது. சிறைப்படுத்தப்பட்ட யதார்த்தத்தை கடந்து, அதற்கு அப்பால் உள்ள எதிர்ப்புணர்வின் ஆன்மாவை அதனது பாடல்கள், நையாண்டிகள் ஐதீகங்கள் போன்றவற்றின் மூலம் வெளியிடுகிறது. தலைகீழாக மாற்றப்பட்ட ஒரு உலகத்தை தொடர்ந்து அது கற்பனை செய்தபடி இருக்கிறது. அவரது நிற ஜாலங்கள் நிறைந்த வேடிக்கையான, பிரமிப் பூட்டும் எள்ளல் மொழிக்குப் பின்னால் செயல்படும் ஆதாரங்கள் இவைதான்.

ONE HUNDRED YEARS OF SOLITUDE நாவலின் இறுதியில் மகோன்டோ சமூகம் கலைந்து போகிறது. மறைந்தும் போகிறது. ஆனால் அதனது கதை, வரலாறு (History) இருக்கிறது. அதற்குப்பின்னால் வருகிறவர்களுக்கு உத்வேகமூட்ட இருந்து கொண்டு இருக்கிறது.

மார்க்வெஸ் எப்போதும் வரலாறு குறித்தே எழுதுவதால் வரலாறு பற்றிய வெகுஜனங்களின் புரிதலில் அது எதிரொலி செய்கிறது. அது ஒருநாள் அந்த வரலாற்றுக்கு குறியீடுகள், உருவகங்கள் தந்து அர்த்தம் தருவது மட்டுமல்லாமல், அதிகாரமுள்ளவர்களின் வரலாற்றுக்கு மாற்றாக, மூண்ட நெடு காலங்களாக விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்ட மக்களை வரலாற்றின் அதிகாரமுள்ள இடங்களின் மைய இதயத்திற்கு கொண்டு செல்லும்.

**தமிழில் - யமுனா ராஜேந்திரன்**

நன்றி- *Socialist review / April . 1997/ London*

---

**புரிசையில் மார்கஸின் 'பெரிய சிறகுடைய ஒரு வயோதிகமனிதன்' சிறுகதையினை புரிசை கூத்துக்குழுவினர் கூத்தாக்கியிருக்கிறார்கள்.**

---

www.tamilarangam.net

## கருத்தாடலுக்காக....

**அன்பு நண்ப,**

ஐயரின் 'கிழக்கும் மேற்கும்' மலரில் வெளிவந்த கதைகள் பற்றி எழுதியிருந்தாய். உனக்குப்பிடித்த பிடிக்காத கதைகள் பற்றி எனக்கும் பெரியளவில் அபிப்பிராயபேதமில்லை.
எலுமிச்சை(அ. முத்துலிங்கம்), ஆரம்பகாலக்கவிதைகள்(அம்பை), துணை அகதி (ஸ்ரீதரன்), போதிமரம் (பொ. கருணாகரமூர்த்தி), பயணம் (ரவீந்திரன்), நாடோடிகள்(கி.பி. அரவிந்தன்) என்பவை நல்ல கதைகளே!
இவற்றுள் நீ குறிப்பிட்டிருந்த தீக்குளிப்பு (பாலகணேசன்) என்னை அவ்வளவாகக் கவரவில்லை. கதை சரியாக கோர்க்கப்படவில்லை. ஒரு மெல்லிய பறைஒலியை மட்டும் கேட்கமுடிந்தது. நல்ல கதைகளுக்குள் அமுதனின் "வேலை இழந்து.." கதையையும் சேர்த்துக்கொள்ளலாம். உனக்குப் பிடிக்கவில்யோ தெரியவில்லை. நல்ல உத்திமுறை. புதிய சொல்லல்வடிவமாக இருந்தது. இது ஒருகதைக்கு மட்டுமே சரியாக இருக்கும். தொடர்ந்து இதேபாணியில் அடிக்குறிப்புக்களோடு எழுதினால் அது "இயலாமை"என்றாகிவிடும்.
கதைகளுக்குள் புகுந்துகொள்ளும் வேற்றுமொழிச்சொற்களைப்பற்றி என்ன நினைக்கிறாய்? நானும்கூட சிலவேளைகளில் யதார்த்தமாக இருக்குமே என்று சொல்லி பாவிக்கமுயல்வதுண்டு. ஆனால் அது எந்தவகையில் நியாயப்படுத்தினாலும், உண்மையில் "இயலாமை"தான். சொற்பஞ்சம்.

அ. முத்துலிங்கத்தின்(எலுமிச்சை) என்னை அதிகம் சலனப்படுத்திய கதை. பொதுவாக உடல்நிலை பலவீனப்பட்டிருக்கும்போதுதான் கதைகள் வாசிக்கும்போது, படங்கள் பார்க்கும்போது அழுவேன். ஆனால் இக்கதை வாசித்தபோது மீறிவிம்மினேன். பஸ்ஸிற்குள் சிறிது சங்கடமாகவும் போய்விட்டது. நாய்க்கும் எனக்கும் நெருங்கியபந்தம் இருக்கவே செய்கிறது.
அ. முத்துலிங்கத்தின் இன்னொருகதை "தூரி" கணையாழியில் வெளிவந்தது. அதுவும் நாய்க்கதைதான். எனக்குப்பிடித்தகதை.

அம்பையின் "ஆரம்பகாலக்கவிதைகள்". அம்பையின் கதைகள் அதிகம் எனக்குப்படிக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. படித்த ஓரிருகதைகளும் உட்புகவே கஷ்டமாக இருந்தன. ஆனால் இக்கதை என்னை இயல்பாகவே தூக்கிச்சென்றது. கடைசியில்மட்டும் பெரும் நெருடல். கெப்பம்மாவின் கணவன் வந்து பத்துநிமிடங்களுக்குமேலாக அவளைஅடித்து துன்புறுத்தி இம்சைசெய்யும்போது எல்லோருமே வேடிக்கை பார்த்துக்கொண்டுதான் நின்றார்கள் - மனிதாபிமான உணர்வுமிக்கவர்களாகஇருந்தும். எவரிடமிருந்தும் சிறு உணர்வுச்சலனம்கூட எழவில்லை. பெண் ஒடுக்கப்படுகிறாள் என்று இப்படி வலிந்து காட்டவேண்டிய அவசியமில்லை என கருதுகிறேன்.

அரவிந்தனின் "நாடோடிகள்" கதை பின்னப்பட்டமுறை என்னைக்கவர்ந்தது. நாடோடிகள் பற்றியசெய்தி, அதற்கூடாக சொல்லமுன்வந்த இன்னொருமுக்கிய செய்தி. நல்லகோர்வை. ஆரம்பத்துண்டை தவிர்த்து, இன்னும் சிறிது செப்பனிட்டிருக்கலாம் போலவும் படுகிறது.

என்னுடையகதை (பானுக்குட்டி) உன்மீது ஒருவழியிலேனும் சலனத்தை ஏற்படுத்தவில்லை எனக்குறிப்பிட்டிருந்தாய். வேறுசில நண்பர்களும் குறிப்பிட்டிருந்தார்கள். கதையை எழுதிவிட்டு அதற்குபிறகு வியாக்கியானம் செய்வது எனக்கு எந்தவகையிலும் உடன்பாடான விஷயம் அல்ல. எழுதியாச்சு. கதை எடுபடவில்லை. அல்லது அந்தளவுக்கு எழுதமுடியவில்லை. முடிந்தால் தோல்விக்குரிய காரணத்தை ஆராயலாம். அவ்வளவுதான். நான் எழுதியவற்றுள் இந்த "பானுக்குட்டி" கருப்பொருள் எனக்கு பிடித்த கருப்பொருள் என்பதைமட்டும் சொல்ல விருப்பமாக இருக்கிறது. ஐரோப்பிய தொடர்மாடிக்கட்டிடம் ஒன்றுள் வதியும் எம்மவர்கள் படும் அவஸ்தை. மையப்படுத்தவிரும்பிய விடயம் உளரீதியாகப்பாதிக்கப்படும் குழந்தை.
இதை நான் இப்படி எழுத உனக்குச் சிரிப்பும் வரலாம். என்ன செய்வது ஆசை. அவசரம். நான் மட்டுமல்ல பலரும் அவசரப்படுவதை அவதானிக்கமுடிகிறது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் நல்லகருக்களும்கூட இப்படி பாழடிக்கப்படுவது தான். எனக்கு இப்போ எழுதக் கொஞ்சம் கூச்சமாகவும்தான் இருக்கிறது.

உன்னுடையகதை "காலமுதிர்" பற்றி தொலைபேசியில் நான் பாராட்டியதைச்சுட்டி, "சும்மா உணர்ச்சிவசப்படாதை, அறிவுரீதியாய் கொஞ்சம் விமர்சி" என்று எழுதியிருந்தாய்.

www.tamilarangam.net

உன்னுடைய கதை உனதுகதைகளுள் சிறுஅளவிலாவது மாறுபட்டமொழியாலும், கலைநேர்த்தியான அனுபவப்பதிவாலும், எனக்கு நன்கு பரிச்சயப்பட்ட தளத்தாலும் என்னைக்கவர்ந்தது.
சரி, இனி கொஞ்சம் அறிவுரீதியாய்க் கதைப்பம்.
உன்னுடைய கதைகள் நாலைந்துவரையில்தான் படித்திருக்கிறேன். திரும்ப யோசிக்கும்போது இவை படைப்புக்களா? என்ற கேள்வி எழுகிறது. அதிலும் மகாஜனன் மலரில் நான் எழுதிய "பூமராங் மாஸ்ரர்" பற்றிய நினைவுக்குறிப்பினை நீ நல்ல சிறுகதையெனப்பாராட்டும்போதுதான் இன்னும் சந்தேகம் அதிகமாகிறது.
பொதுவாக என்னுடைய கதைகள்பற்றியும் இதே சிக்கல் தான். வெறும் அனுபவப்பதிவுகள் எப்படி படைப்புக்கள் ஆகமுடியும்?
படைப்புக்கள் என்றால் என்ன?
நான் சில பாத்திரங்களை சிருஷ்டிக்க முயலும் போது இடறிவிழுகிறேன். பலதடவை முயன்றும் தோற்றுப்போகிறேன். இந்த இடத்தில் நல்ல அனுபவங்களை கொஞ்சம் கலைஅழகோடு பதிவாக்கும்போது வெற்றியாகியும் விடுகிறது. அனுபவப்பதிவுகள் நல்லஇலக்கியங்கள் தான் என்பதில் எனக்கு மாறுபாடுகிடையாது. கதைகளைவிடவும் சிலவேளைகளில் நல்லஇலக்கியங்களாக அமைந்துவிடுகின்றன. எனது வாதம் அவை படைப்புக்களா? படைப்பாளிகளை நான் நிஜத்தில் தெரிந்துகொண்டிருப்பது இக்கருத்தில் சிறிது இடறலாக இருப்பினும், அதையும் மீறி படைப்புத்திறன் பற்றியதே எனது கேள்வி.

எனது அனுபவத்தில் படைப்பு கடினமானது. மூளையைக் கசக்கிப்பிளியவேண்டிய தேவை அதற்கிருக்கிறது.
எல்லாமே படைப்புத்தான் என நீ என விளக்கமுற்படலாம். எனக்கென்றால் மெல்லிய இடைவெளியாவது இருப்பதாகவே தோன்றுகிறது.

அம்மா முதலாவது இதழில் ஷோபாசக்தியினது "எலிவேட்டையையும்" வாசுதேவனது "நியாயார்த்தங்கள்"கதையினையும் எங்களது கதைகளை விட சிறிது வேறுபடுத்திப்பார்க்கலாம். அங்கு பாத்திரங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. பார்த்திபனின் கதைகளுள்ளும் இவ்வாறான சிருஷ்டிப்புத்தன்மையினை காணலாம்.

பார்த்திபன் என்றதும் தான் நினைவுக்கு வருகிறது. பார்த்திபன் பற்றி மலரில் யமுனா எழுதியது அதிகம் என்றே நினைக்கிறேன். புலம்பெயாந்த எழுத்தாளர்களுள் பார்த்திபன் கவனத்திற்கொள்ளப்படுவதும் பதியப்படுவதும் தொடர்பாக எனக்கு மாறுபட்டகருத்து கிடையாது. வரவேற்கக்கூடியவிடயமும்கூட. யமுனா தலைப்பில் குறிப்பிட்டிருந்தது போல பார்த்திபனின் கதைகளை முன்வைத்து புலம்பெயர் இலக்கியம் பற்றிய ஆய்வு நடத்தியிருப்பாரேயானால் மலருக்கும் சிறப்பாக இருந்திருக்கும். தவிர்த்து ஒரு முதிர்ந்த படைப்பாளியாக பார்த்திபனை அடயாளப்படுத்திவிட்டிருப்பது ஓரேயடியாக "முடக்கியும்"விடலாம் எனக்கவலைப்படுகிறேன்.
நீ என்ன நினைக்கிறாய்!
பார்த்திபன் இன்னும் வளர இருக்கு. வளரமுடியும். நல்ல கருக்கள் மட்டும் நல்லகதையாகாது.

ஐயரின் தொகுப்பிலுள்ள இந்த பத்தொன்பதுபதைகள் பற்றியும் யாராவது அம்மாவில் அல்லது வெறெங்காவதுதன்னும் எழுதினால் நல்லதாயிருக்கும். இது மலர்தொடர்பாக பத்மநாபஐயரின் உழைப்பை கௌரவப்படுத்தியதாகவும் இருக்கும். சிறுகதைபற்றிய ஆரோக்கியமான கருத்தாடலாகவும் இருக்கும்.
என்ன யோசிக்கிறாய்!
மறவாது பதில்போடு!
உடன் எழுது!
எதையுமே உடன் செய்தால்தான் உண்டு.

அன்புடன்
- புவனன்.



www.tamilarangam.net

## எனக்குப் பிடித்தகதை

# சொல்ல முடிந்தது

வண்ணதாசன்

அரைக்குப்பியை மூன்று மடக்குகளில் முடித்திருந்தான். தடுத்து நிறுத்த இயலாத எல்லையில் எடுத்த எடுப்பிலேயே போய் நிற்பது, இன்னும் அதிகம், அதிகம் என்று தொடர்ந்து பருகுவது, பக்கத்தில் இருப்பவன், எதிர் பெஞ்சில் இருப்பவனிடம் சகஜம் கொண்டு தீப்பெட்டி, சிகரெட் பகிர்ந்து கொள்வது, பேசுவது இதில் எதிலும் மாறுதல் இல்லாமல் இருப்பவன்தான் குன்னங்குளம் டொமினிக்.

அவித்த கடலைச் சுண்டல் வேண்டாம் என்று ஒதுக்கிவிட்டு, தட்டையாக இருந்த கருவேப்பிலை புதைந்து கொப்பளம் வெடித்திருந்த அந்தக் காரமான தின்பண்டத்தை வைத்திருந்த தாளையே பார்த்துக்கொண்டு-

"சௌரஸ்யாவின் அந்தப் புகைப்படம் எவ்வளவு அருமை"

என்று என்னை ஒரு நிமிடம் நோக்கிய பின் தலையை தொங்கப் போட்டுக் கொண்டான். அவனுடைய கையிலிருந்து சிகரெட் கனிந்து புகைந்தது.

"பாறையின்மேல் உட்கார்ந்து கடலைப் பார்த்து வாசிக்கிறதுதானே. ஆமாம் அற்புதம்" என்றேன்.

டொமினிக் "முழு மூடன். ஆனால் நல்ல சினேகிதன் நீ" என்றான்

"பாறையில் வீசி, வீசி அலையடிப்பது உச்சி வெயிலில் அபத்தமாகக் கம்பளிச் சால்வை போர்த்திய கதாநாயகன் கடலை நோக்கிப் பாடுவது, ஃபில்டர் போட்டு ரத்தச் சிவப்புச் சூரியனைக் காட்டி நிழல் மாதிரி பாறைமேல் ஏறிநின்று இரண்டு கைகளையும் உயரத் தூக்கி இன்னும் முக்கிப் பாடுவது..... சினிமாக் கிறுக்கு உங்களிடம் தெளியவே தெளியாது. எத்தனை முகாம், எத்தனை பட்டறை நடத்தினாலும் உருப்படுகிற மார்க்கமில்லை." டொமினிக் சிறிது விழுங்கிக் கொண்டான். பன்னீர் போன்று திரவம் மிகச் சுத்தமான தளும்பலுடன் டம்ளரில் குறைந்தது.

"சௌரஸ்யா அந்தப்புறம் பார்த்துப் படுத்துத் தூங்கிக் கொண்டிருப்பார். ஜன்னல் வழியாக வெளிச்சம் வந்து துண்டு, துண்டாக சுவரில் சாய்ந்திருக்கும். படுக்கைக்கு பக்கத்தில் முந்தின ராத்திரி எழுதின பேப்பர், மூக்குக் கண்ணாடி இருக்கும். புரண்டு படுக்க இடம் விட்டு, தூங்குவதற்கு முன்பு வாசித்த புல்லாங்குழல்கள் இரண்டு இருக்கும். தலை மாட்டில் ஹார்மோனியம் இருக்கும். அந்தப் படத்தைப் பார்க்கும் போது மனம் எனக்கு இசையால் நிரம்பி விட்டது. அந்த வெயிலின் அசைவும், நிழலின் நகர்வும், ஜன்னலோரம் தொங்கின

**'சொல்ல முடிந்தது' பற்றி..**

வண்ணதாசனின் "கனிவு" எனும் தொகுப்பிலிருந்து இக்கதையை எடுத்தேன். எனக்கு இருக்கிற ஆதங்கங்களில் மிக முக்கியமானது - சிறுகதை, நாவலைப்பொறுத்து இலங்கைப்படைப்புக்கள் இன்னமும் தமிழ்நாட்டுப் படைப்புக்களைத் தொட்டுவிடமுடியாமல் தவிக்கின்றன. சிறுகதைகளும் நாவல்களும் தமிழ்நாட்டிற்குரிய வளம். கவிதையும், நாடகத்திலும் இலங்கைப் படைப்பாளர்கள் நெஞ்சை நிமிர்த்தி நிற்கலாம்.

நான் வாசித்தவற்றுள் நல்ல சிறுகதைகள் என்றால் நூற்றுக்கணக்கான சிறுகதைகளை என்னால் காட்டமுடியும். புதுமைப்பித்தன், கு.ப.ரா. ஜானகிராமன், அசோகமித்திரன் என்று வரிசையாக அடுக்கிக்கொண்டே போகலாம். அதை விடுங்கள்.

சொல்லமுடிந்து பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்ல விரும்பவில்லை. இதே "கனிவு" தொகுப்பில் வேறும் நல்ல கதைகள் உள்ளன. எனக்குப்பிடித்த இக்கதை பற்றி முதலில் நீங்களும் வாசியுங்கள். பிறகு கருத்துக்களைப் பகிர்வோமே!

- அ. இரவி.

www.tamilarangam.net

திரையும் அந்தப்படுக்கையிலிருந்த புல்லாங்குழல்களும்.......அது புகைப்படமல்ல....... ஓவியம்."

இதைச் சொல்லிக் கொண்டே டொமினிக் எழுந்து கௌண்ட்டர் பக்கம் வந்து, மேலும் ஒரு அரைக்குப்பி வாங்கி 'நாளைக்குச் சாயந்திரம் வரையிலான தேவைக்கு' என்று தன் கைப்பையில் வைத்துக் கொண்டான். திருப்பிக் கொடுத்த நேற்றைய காலி சீசாக்களுக்கான காசு கழிக்கப்பட்டு விட்டதா என்று உறுதி செய்து கொண்டான்

'ராஜா ஸ்ருடியோ மாடியில் நம்பி, பன்னாரைக் கோஷின் இசைத்தட்டை அறிமுகம் செய்து கேட்கச் செய்த தினம் ஞாபகமிருக்கிறதா உனக்கு?"

டொமினிக் நானும் கடையைவிட்டு வெளியே வந்த சமயம் முற்றிலும் இருட்டியிருந்தது.

"அன்று என்னை ஒரு இடையனாக உணர்ந்தேன். என்னைச் சுற்றி கால்நடைகள் இருந்தன. முக்கியமாக அடர்ந்த மரங்களின் நிழலும், வெயிலும் படுத்திருந்த கால்நடைகளின் மேல் பட்டுச் சிதறிக் கீழேயும் தெறித்தன. நம்பியை ஊன்று கோல்களுடன் பார்க்க நேர்ந்ததன் துக்கம் தீவிரமாகி விட்டது பன்னாலால் கோஷைக் கேட்கக் கேட்க. "

குன்னங்குளம் டொமினிக் அழ ஆரம்பித்தான்.

"எந்தச் சமாதானமும் வேண்டாம்" என்று என் கையை உதறினான். என்னையும் டொமினிக்கையும் பார்த்தவர்களைப் பார்க்கப் பார்க்க எனக்குக் கூச்சமும் அவமானமும் உண்டாயிற்று. இன்னும் முகாமின் மெயின் கேட் வரவில்லை. அதற்கப்புறம் மூன்று கிலோ மீட்டர் தள்ளி இன்னொரு கேட். அதற்கப்புறம் தான் விடுதி.

"வருத்தப்படாதே இனிமேல் முந்திரிக் கொட்டைகள் பொறுக்க முடியாது. இன்றைக்கும் சேர்த்து நாளை நானும் உதவுகிறேன்" என்று டொமினிக் நெருங்கி வந்து என்னுடைய தோளைத் தட்டிக் கொடுத்தான்.

காற்சட்டைப் பைக்குள் கைவிட்டு எடுத்தேன். நேற்றைவிட இன்று அதிக எண்ணிக்கையில் முந்திரிக் கொட்டைகள், பால் பிசுபிசுப்பு, "கவிதை எழுதுவதை விட நீ முந்திரிக் கொட்டைகளை நன்றாகச் சேகரிக்கிறாய்"- குன்னங்குளம் இதைச் சொல்லிவிட்டுச் சிரித்தான். முகாமில் எழுதுவதற்கென்றே ஊரில் கலிக்கோ பைண்ட் செய்து தயாராக நோட்டுப் புத்தகம் கொண்டு வருபவன் நீ. இனிமேல் சாக்குப் பைகளும் கொண்டு வருவாய். காரியம் செய்கிறீர்களோ இல்லையோ, காரியத்திற்கு தயாராவதில் உங்களை மிஞ்சமுடியாது!"

நான் டொமினிக்கையே பார்த்துக் கொண்டிருந்தேன். அவனுடைய கண்கள் பரவசமான ஜீவனுடன் இருந்தன.

"எதன் மீதாவது அபிப்பிராயம் சொல்லேன். வாயைப் பொத்திக் கொண்டு கிடப்பது, தலையைத் தலையை ஆட்டுவது, எனக்குப் பானங்கள் தெரியாது. பெண்ணா ஐயையோ! இப்படியே சொல்லிக் கதவைச் சாத்திக்கொண்டு எழுதி, இன்னொருவனைக் கதவைச் சாத்திக் கொண்டு படிக்கச்சொல். நாசமாகப் போகட்டும் உன் கவிதை."

டொமினிக் சொல்லிக்கொண்டு வரவர என் மீதான அவனுடைய அக்கறை தீவிரம் பெருகி, இந்த இருண்ட பாறைகளுக்கு இருபுறமும் உள்ள மிக நெருங்கிய மரங்களின் மூச்சுக்களில் கலந்து, இலைகளின் அசைவில் கசிந்து இந்தப் பிரதேசத்தின் முழுமைக்கு எழிலூட்டிக் கொண்டிருப்பது போலத் தோன்றிற்று. கனிந்த முந்திரிகைப் பழங்களின் நெடியேபோல ஒரு அன்பும் சினேகிதமும் பரவிக்கொண்டே வந்தது.

மிக அமைதியாக என்னுடன் நடந்து வந்துகொண்டே இருந்த டொமினிக் நின்று என்னைப் பார்த்து, "உன்னிடம் கார்ட்..... போஸ் கார்ட் இருக்கிறதா? என் பொன்னு மகளுக்கு கடிதம் எழுத வேண்டும்" என்றான்.

டொமினிக்கை இப்போது எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது.

இந்த மூன்றாவது முறையில்தான் முந்திரி மரங்களை என்னால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது மரங்களை அந்த மரங்களாலேயே இனம் கண்டுகொள்ள, சென்ற இரண்டு முறைகளிலும் என்னால் இயலவில்லை. பழுத்துப் பழுத்து பாதையோரங்களில், முழுப்பழங்களுடன் உதிர்ந்து கிடந்ததைப் பார்த்த பிறகுதான் அது முடிந்தது. வந்த காரியத்தை விட்டுவிட்டு முதல் தினத்திலிருந்து முந்திரி பொறுக்கிச் சேர்த்து வருவதற்காகவே அவசர அவசரமாகக் காலையில் எழுந்து நடைபோகிற மூக்கண்டப்பயல் நாகேந்திரனை நானும் டொமினிக்கும் பார்க்க நேர்ந்தது. நாங்கள் சைபீரியன் வாத்துக்களை பார்க்கப் புறப்பட்ட அதே அந்த அதிகாலை நேரத்தில்தான்.

நேர்த்தியான கட்டில் மெத்தைகள், கொசுவலைகள் சாம்பல் கிண்ணம் காணாததற்கு படுத்துக்கொண்டு படிக்கிற மாதிரி சௌகரியத்துடன் விளக்குகள். மேசையில் இன்னொரு விளக்கு, தண்ணீர் கூஜா. படிப்பதற்கு அங்கிருக்கிற நூலகத்திலிருந்தே விநியோகிக்கிற அருமையான புத்தகங்கள்.

"புஸ்தகத்தை மூடிவைத்து விட்டுவா, உடனே வா." அறைக்கு நேரே அறையிலிருந்த நாற்காலியை (அதில் சாய்மானத்திற்குத் திண்டுகள்) இழுத்து வெளியே போட்டுக் கொண்டு அமர்ந்திருந்த டொமினிக்கை கூப்பிட்டான்.

"புஸ்தகத்தை உடம்பில் போடு" என்னைநோக்கி மறுபடியும் டொமினிக் சத்தம் போட்டான். வெளியே சுத்திகரிப்பு ஆலை புகைபோக்கியை விட்டு விலகி, ஒரு பெரிய திரைச்சீலையினுடைய அடர்த்தியின் மேல் மிகவும் பெரியதாக சூரியன் சுழன்று கொண்டிருந்தது. அந்தப் பிரதேசத்தின் அமைதி முழுவதையும் தன் சுழற்சியுடன் இணைத்துக் கொள்ளவல்லதாக கற்றுக்கொள்ள இயலாத இயற்கையின் அழகுடன், வீரியத்துடனும் ஒரு சர்வ எளிமையுடன் அது செயல்பட்டுக் கொண்டிருந்தது.

"சூரியனைத் தெரிந்து கொள்வது நல்லதுதான். ஆனாலும் அங்கே பார்.

டொமினிக் காட்டிய திசையில் இந்தக் கட்டிடத்தை மூன்று பக்கங்களுக்கும் மேலதிகமாகச் சூழ்ந்திருக்கிற நீர்ப்பரப்பு ஒரு கொந்தளிப்பின் உச்சத்தில் இருப்பது போல சூரிய வெளிச்சத்தில் தூண்டுதலற்றுப் புரள, பழுப்பு இலைகள் போல வலது பக்கம் முழுவதும் தண்ணீரில் ஏதோ நகர்ந்து கொண்டு வந்து கரையில் ஒதுங்கின. இலையுதிர் காலத்தையே பெருக்கிக் குளத்திற்குள் தள்ளிவிட்டது போல, குளத்தின் ஜலம் முழுவதும் சருகின் படகு.

சூரியன் - நீர்மேல் சருகுகள் - என்றே நின்றேன்.

'சைபீரியன் வாத்துக்கள்' இதை சொல்லிக் கொண்டே குன்னங்குளம் டொமினிக் என்னை அந்த இரண்டாம் மாடியின் கைப்பிடி சுவர் ஓரம் இழுத்தான். கைப்பிடியின் பக்கம் நின்று பார்க்கையில் அந்த இலைகளின் வரிசைகள் ஒவ்வொன்றாகப் பிரிந்து, விலகி, பழுப்பு அசைவுகளுடன் கரையில் ஏறிக்கொண்டிருப்பது தெரிந்தன. கரைக்கு வந்ததும் நடையில் சிறகுகளைக் கோதிக் கொள்வதில் கூட்டம் சேர்ந்த நகர்வில் எல்லாம் வாத்துக்களின் அடையாளம் சட்டென்று வந்துவிட்டது.

www.tamilarangam.net

"சைபீரியன் வாத்துக்களுக்கு நாளை நாம் குட்மோனிங் சொல்கிறோம்" என்றான் டொமினிக்.

நாளைக்கு கவிதை எழுத முடியாது என்று தோன்றியது. ஒத்திப்போடுவதற்கு மேலும் ஒரு காரணம் கிடைத்ததற்கு சந்தோஷம் கூட லேசாக மனதுக்குள்.

வாத்துக்கள் அவ்வளவு அதிகாலையிலும் இடம் பெயர்ந்து விட்டிருந்ததில் குன்னங்குளம் டொமினிக்கிற்கு ஏமாற்றம்தான். புலம்பிக் கொண்டே இருந்தான். அடர்ந்த காடுகளினூடு சென்று சரிவில் இறங்கிக் குளக்கரையை அடைந்தபோது உதிர்ந்த இறகுகளும், பறவை எச்சத்தின் வாடையும், கால்பதிவுகளின் பின்னல்களுமாக இருக்க , டொமினிக்

'என்ன வாசனை' என்று மூச்சு நிறைத்து சுவாசித்தான். "மேய்ச்சலுக்கு போய்விட்டு வருகிற மாடுகளையும் புழுதியையும் சேர்த்து நீ சுவாசித்திருக்கிறாயா" என்றான். மறுபடியும் அந்த சைபீரியன் வாத்துக்கள் தன்னிடம் சொல்லாமல் இடம் பெயர்ந்து விட்டதற்கு வருத்தப்பட்டான்.

"இதைப் பார்த்த கையோடு என் மகளுக்கு எழுத வேண்டும் என்று நினைத்தேன்." என்றான்

மறுபடியும் நாங்கள் மேட்டில் ஏறி, மரங்களின் ஆள் நடமாட்டமற்ற பயம்தரும் வரிசைகளைத் தாண்டி வந்தபோதுதான் நான் முந்திரி மரங்களைப் பார்த்தேன். சாலை விளிம்பில் இருந்த மரங்கள் அனைத்தும் முந்திரிகைகளே. நான் பழங்களைப் பொறுக்கி, கொட்டைகளை மாத்திரம் சேகரித்துக் கொண்டு வீச ஆரம்பித்தேன். காலம், காலமாக இதைச் செய்து வருவது போலவும், அப்படிச் செய்ததன் காரணமாக என் உறுப்புக்கள் முக்கியமாக இடுப்பும் , கைகளும் இந்த வேலைக்கு தங்களை அனுசரித்துக் கொண்டது போலவும் எடுத்த எடுப்பிலேயே ஒரு வேகம் உண்டாகி விட்டது.

ஊரில் வேப்பம் கொட்டைகளை சிரட்டையில் பொறுக்கின ஞாபகங்கள் புதுப்பிக்கப்பட்டு, ஒருவரால் காணப்படாததை அவர் எதிரிலேயே இன்னொருவர் கண்டு சேகரிக்கிறதில் ஏற்படுகிற உற்சாகத்துடன் டொமினிக்கும் நானும் சேகரிக்க ஆரம்பித்தோம்.

"இந்த மரம் என் மனைவியைப்போல ரொம்பவும் சோனி. ஆனால் குழந்தைகள் பெறத் தயங்காதது" - டொமினிக் எதிர்த்த வரிசையில் நின்ற ஒரு முந்திரி மரத்தின் கீழ் உதிர்ந்திருந்த ஏராளமான பழங்களைப் பொறுக்கினபடி சொன்னான். ஏனைய பழங்களைப்போல சிவப்பும், மஞ்சளுமாக அல்லாமல் முழுக்க முழுக்க மஞ்சளா இருந்த அந்த முந்திரிப் பழங்கள் அளவில் சிறியதெனினும் கொட்டைகளின் திரட்சிக்கு குறைவில்லை.

"இந்த மரம் என் மனைவியேதான்" டொமினிக் பேசிக் கொண்டே இருந்தவன் காலை ஷி·ப்டிற்குப் போகிற இரண்டு பெண்களின் கவனம் திருப்பி, அவர்களிடம் அந்த மரம் மெலிந்து, வலுவான குழந்தைகளைப் பெற்றவளுமான தன் மனைவியைப் போல இருக்கிறது என்று சொன்னான். அவர்களின் மிதியடிகள் நடந்து நடந்து தேய்ந்திருந்தன. வெற்றிலைச்சாறு கசிய நனைந்தும் இறுகியும் இருந்தன உதடுகள்.

"உன்னுடைய மனைவிக்கு பிரசவம் பார்க்க இப்போது நேரமில்லை" என்று பார்த்துச் சிரித்துச் சொல்லிக் கொண்டே அவர்கள் போனார்கள்.

"குன்னக்குளம் நீ ஏன் கலாட்டா செய்கிறாய்? வேலைக்கு போகிற யார் உன்னுடன் கதைபேசு வார்கள்" நான் டொமினிக்கிடம் கேட்டேன்.

"நிழலில் குறட்டைவிட்டு தூங்குபவர்களுக்குப் போய்க் கவிதை வாசிக்கத்தான் நீ இருக்கிறாயே" டொமினிக் என்னைப் பார்த்துச் சிரித்தான்.

தொடர்ந்த குடியினால் கண்கள் கனத்தும் மினுமினுத்தும் இருந்தது முகம். கைகளில் நாலைந்து முந்திரிப் பழங்கள், பாதிக்குப் பாதி நரைத்த சிகையும், அக்கறையற்று தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிற சட்டையும், அவிழ்ந்து அவிழ்ந்து மீண்டும் கட்டப்படுகிற கைலியும் சிகரெட்டுமாக அவனைப் பார்க்கும் போது ஒரு கேலிச் சித்திரக்காரனாகவும் எழுத்தாளனாகவும் மிகப் பிரபலமாக ஒன்பது வருடங்களுக்கு முன்பிருந்த குன்னங்குளம் டொமினிக் என்பவன் அவன்தானா என்று அவன்மேல் பரிதாபம் ஏற்பட்டது.

□

உடம்பு மிகவும் சிதிலமாகி, அவனுடைய அத்யந்த வாசகன் ஒருவனின் பராமரிப்பில் மனச் சிகிச்சைக்கு உள்ளாகி, குடிப்பதைக் கூட விட்டுவிட்டதாக எல்லாம் சொல்லப்பட்ட டொமினிக். தனது அதிரடி விமர்சனத்தாலும், போதையினாலும் ஒவ்வொருத்தராலும் ஒதுக்கப்படுவதை இரண்டாவது தடவையாக நானே உணர்ந்திருக்கிறேன்.

மிகத் தற்செயலாக அவன் வந்திறங்கிய ஆட்டோவும் நான் வந்த டாக்சியும் ஒரே நேரத்தில் இந்த முகாமிற்குரிய கட்டிடத்தில் நுழைந்து நிற்க, வரவேற்பில் இருந்த பெண் இந்தப் பட்டறையின் விதிகளில் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த இரண்டு பேருக்கு ஒரு அறை என்று சொல்லி எங்களை விசாரிக்க -

"உன்னுடன் நான் தங்க ஆட்சேபனை ஒன்றும் இல்லையே?" என்று என்னைக் கேட்டான்.

"நிச்சயமாக நீ என்னுடன் தான் இருக்க வேண்டும் டொமினிக்" என்று சொன்னேன். டொமினிக் என் கையைப் பற்றிக் கொண்டான்.

"தனிமையில் இருந்தும் கழிவிரக்கத்திலிருந்தும் என்னைக் காப்பாற்றின மனுஷன் நீ" என்று சொல்லிக் கொண்டே பதிவேடுகளில் கையெழுத்துப்போட்டான்.

அவனிடமிருந்து வெளிப்பட்ட தளாமுடியாத சாராயவாடையை உத்தேசித்து, "இரண்டாவது மாடிக்குப் போய்விட முடியும் அல்லவா திரு டொமினிக்" என்று அந்தப் பெண் கேட்க-

"எல்லா உயரத்திற்கும். எல்லா உயரத்திற்கும் முடியும்" என்று திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டே லக்கேஜ்களை எடுத்துக் கொண்டான் டொமினிக்.

"பட்டம் எல்லாம் வாங்கியிருக்கிறாய். உன்னுடைய கவிதைகளை நீயே ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கிறாய். மேலும் ஓரளவு சுரணையும் இருக்கிறது. அப்படியிருந்தும் ஏன் அறைக்குள்ளேயே கிடக்கிறாய்? கலந்துரையாடல்களிலும் பின்வாங்கிச் செல்கிறாய்? உன் அபிப்பிராயம் என்ன என்று உனக்கு மட்டும் தெரிந்தால் போதுமா? உது பற்றியும் பேசாமல் நல்லபெயர் வாங்கிக் கொள்வதில் என்ன இருக்கிறது. என் கூர்மையை என்னால் தவிர்க்க இயலாது. வெட்டு ஒன்று துண்டு இரண்டுதான். இந்த வருடாந்தர தமாஷிற்காக எல்லா அபத்தங்களையும் சகித்துக் கொண்டு இருக்க முடியுமா நான்" -டொமினிக் என்னிடம் பேசிக் கொண்டும், சிகரெட் புகைத்துக் கொண்டும், நான் பொறுக்கித் தருகிற முந்திரிக் கொட்டைகளை அவனுடை தோள்ப் பட்டையில் இட்டுக் கொண்டு வந்தான்.

போகிற வழியில் எல்லாம் எங்களுக்கு முன்பே யாரோ வந்து பொறுக்கி விட்டுச் சென்றதன்

www.tamilarangam.net

அடையாளங்கள் இருந்தன. புதிய புதிய பழங்கள் அப்போதுதான் விழுந்தவை அல்லது பறிக்கப் பட்டவை. பருப்பு மாத்திரம் திருடப்பட்டுக் கிடந்தன. நான் பொறுக்கிக்கொள்ள எதையும் விட்டுவைக்காதது போல, குனிந்து எடுத்த எந்தப் பழத்திலும் கொட்டைகள் இல்லை. திரட்சியும், மிருதுவும் சதைப் பற்று, மிக்க ஏமாற்றமாக அவை இருந்தன. பால் பிசுபிசுப்பின் மீது கூடக்கோபம் வந்தது. எனக்குரியதை வேறு யாரோ அபகரித்துக் கொண்டது போலத் திகைப்பு உண்டாகி, எட்டின தூரத்தில பிடித்துவிட முயல்வது போல என்னுடைய பார்வை துரத்தி அலைந்தது.

"திருட்டுப் பயல்கள். எந்தப் பாவிகளோ நமக்கு முன்னால் வந்துவிட்டுப் போயிருக்கிறார்கள்" - இவை நான் சொல்கிற வார்த்தைகளே அல்ல. எனினும், என்றுமில்லாமல் அன்று என்னிடமிருந்தே பதற்றத்துடன் வெளிவந்தன.

டொமினிக் என்னையே பார்த்துக் கொண்டிருந்தான். "முந்திரிக் குத்தகை எடுத்தவன் போலப் பேசுகிறாய்" -இதைச் சொல்லிக் கொண்டிருந்த டொமினிக்கிடம் சைக்கிளில் வந்த மனிதன் நெருப்பு வாங்கிப் பீடியைப் பற்ற வைத்துக் கொண்டான். சைக்கிளைப் பாதையோரமாக வைத்துவிட்டு, அதில் அவன் தொங்க விட்டிருந்த அரிவாளை மட்டும் கையில் எடுத்துக் கொண்டான். முந்திரி மரச் சரிவுகளை தாண்டி ஏறி, காட்டின் எட்டுப்பக்கம் செல்லவும் குன்னங்குளம் அவனைக் கைதட்டிக் கூப்பிட்டான்.

"நாங்கள் வரலாம் அல்லவா?" என்றான்

மிகவும் இறுகின கருந்திரேகியாக இருந்த அந்த மனிதன் ஒன்றும் சொல்லாது சிரித்துக் கொண்டு கையசைத்தான்.

"ஓடிவா..... ஓடிவா யோசிக்காதே" என்று என்னைக் கூப்பிட்டுக் கொண்டே டொமினிக் மரங்களுக்கிடையில் ஓடினான்.

முந்திரி மரங்களைத் திரும்பிப் பார்த்தேன்.

என்ன இப்படி அலைகிறான் டொமினிக் என்றிருந்தது என்றாலும் சென்றேன். நான் சென்றபோது டொமினிக் வரிசையாக றப்பர் மரங்களை கீறிக்கொண்டிருந்த அந்த மனிதனிடம் பேசிக்கொண்டே அவன் செல்கிற ஒவ்வொரு மரமாகச் சென்று கொண்டிருந்தான்.

எப்படியோ எல்லோரிடமும் டொமினிக் பேசிவிடுகிறான். நான் அருகில் சென்ற சமயம் 'மழை இல்லை' என்பதை அந்த மரம் சொல்வது போலிருந்தது. ஒரு குத்துச் சருகுகளைக் கீழே இருந்து அள்ளி ஒரு அரை வட்டமாக அந்த மரங்கள் நிற்கும் எல்லையைக் காட்டி கையை மேலே உயர்த்தி மறுபடியும் தரையைக் காட்டி அப்படிச் சொன்ன சமயம் அந்த வனத்தின் அத்தனை வறட்சியும் பற்றி எரிவதுபோல ஒரு மினுமினுப்பு அவன் முகத்தில் இருந்தது. ஒவ்வொரு கீறலுடன் கொப்பறையில் சொட்டுச் சொட்டாக உடனடியாகப் பால் துளிர்த்துத் திரண்டு வழிந்து கொண்டிருந்தது.

டொமினிக் அவனிடமிருந்து அரிவாளை வாங்கி ஒரு மரத்தைக் கீறிவிட முயன்றான். திரும்பத் திரும்ப முயன்று கீறி, அதிலிருந்து பால் கசியத் துவங்கியதும் பரவசப்படுவதற்கு பதில் மரத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு 'சித்திரவதை' என்று முனகினான். 'என்னால் முடியாது' என்று கும்பிட்டான். அந்த மனிதனிடம் ஒரு பீடியை வாங்கி பற்ற வைத்துக் கொண்டே விடைபெற்ற போது 'மழை இல்லை' என்று அந்த மனிதன் வானத்தைப் காட்டி மீண்டும் உதடுபிதுங்கினான்.

திரும்புகிற வழியில் ரோட்டோரமாகத் தன்னந் தனியாக ஒரு அன்னாசிப் புதர் முளைத்திருந்தது.

யாருக்கு அனுப்புவது என்று தெரியாமலேயே நான் அங்கொன்றும், இங்கொன்றுமாகத் திரிந்தும் வரிசையாக மிக கவனமாக வளர்க்கப்படும் தொட்டிகளிலிருந்து பறித்தும், இதுவரை பார்த்தறியாத பூவகைகளை ஒரு பாலித்தீன் பையில் சேகரித்துக் கொண்டிருந்தேன். ஒரு ஓவியனின் சேர்மானத்திற்கு உட்பட முடிகிற அனைத்து வண்ணங்களிலும் விதங்களிலும் சிறியதும் பெரியதுமாக சுமார் இருபது வகையான பூக்கள் இருந்தன.

காய்ந்த, பாடம் செய்யப்பட்டு அலங்காரத்திற்கு மேடையேற்றப் பட்டிருக்கிற, ஆகாயம் நோக்கி விரல்களைப்போல குத்திட்டு நிற்கிற மரக்கூட்டின் நிழல் அந்த மிகப்பெரிய புல்வெளியில் கிளைகளாக சாய்ந்திருந்தது. அன்ற தினத்தின் புதிய வெயிலின் இன்னும் தீர்மானிக்க முடியாத வெப்பத்திற்கு மினுமினுத்துக் கொண்டிருந்த புல்வெளி. சீரான தோட்டக்கலை துல்லியத்துடன் ஒரே அளவில் பச்சை கட்டுப்படுத்தப் பட்டிருக்க, தண்ணீர் பீச்சுகிற ரப்பர் குழாய்கள் மிக நீளமாக வளைந்து கிடந்தன. அந்தக் குழாய் புல்லில் புதைந்து பெருக்குகிற தண்ணீரை, ஆனந்தமாக ஒரு சாம்பல் நிறப்புறா குடித்துக் கொண்டிருந்தது. நான் கவனிக்கவில்லை. குன்னங்குளம் டொமினிக் தான் அதைக்காட்டினான்.

"தண்ணீர் பஞ்சத்தினாலா அந்தப்புறா இங்கு வந்தது? ஏகமாக மூன்று பக்கமும் விரிந்து கிடக்கிற ஏரி. இவைகளின் பல ஜோடிகள் குடியிருக்கிற தண்ணீர் தொட்டி. அதையெல்லாம் விட்டுவிட்டு இந்த ஒரு புறாவுக்கு மட்டும் இந்த வெயிலையும் புல்லையும், ஃரோஸ் பைப் நுனித் தண்ணீரையும் தேர்தெடுத்துக் கொள்ளும் சுதந்திரம் இருக்கிறது. பறவையின் சுதந்திரம் கேள்விகளுக்கு அப்பாற்பட்டது. நீ பூவைப்பறித்து சேகரித்து என்ன செய்யப் போகிறாய்? இந்தப் பறவையிடம் நீ கற்றுக் கொள்ள பாடங்கள் உண்டு. இந்த முகாமின் நெறியாளனாக நான் இருந்தால் இந்த சாம்பல் புறாவின் கழுத்தசைவுகளையும் மினுக்கத்தையும் நிறஜொலிப்பையும் மட்டும் ஒரு நாள் முழுவதும் பார்க்கச் சொல்வேன். எழுதுகிறவன் யாருக்கும் பார்க்கத் தெரியவில்லை. பூக்களைத் தூரப்போடு. பூக்களைச் செடியில் விடு. எந்தக் காமினியைச் சீராட்டவென்று நீ பூத்தொடுத்துக் கொண்டிருக்கிறாய். உன் கவிதையும் அதைத்தானே செய்கிறது, விலகிவா. அந்தப் பறவையிடம் போ."

குன்னங்குளம் டொமினிக் இதைச் சொல்லிக் கொண்டு இருக்கும்போதே, அந்தப் புறா பேரானந்தத்துடன் பறந்தது. சூரியனின் சாய்ந்த கிரணங்களின் சாட்சியில் கலகலவென்று புல்லில் தண்ணீர் மட்டும் பெருகிக் கொண்டே இருந்தது. எனக்கு அருகிலிருந்த பூச்செடிகளுக்கிடையில் இதுவரை தெரியாதிருந்த சிலந்திவலை மிகத்துல்லியமாக வெயில் விளிம்புடன் மின்னியது.

டொமினிக் புல்லிலேயே மல்லாந்து படுத்திருந்தான். ஒரு காலின் தாங்கலில் மடக்கியிருந்த இன்னொரு கால்பாதம் மட்டும் ஆடிக் கொண்டிருந்தது. இந்த இடத்திலிருந்து பார்க்கும்போது அந்தபாதம் ஒரு கால்ப்பந்தைப் போல சூரியனை உதைத்து எறிய உயர்ந்திருந்தது.

சம்பிர்தாயங்களுக்கு நம்மிடம் குறைவேது? அதுவும் வெள்ளைக்காரன் தன் சீதோஷணத்திற்கு தயாரித்த நிகழ்ச்சி நிரலில் நுழைந்து வெளிவர நாம் படுகிற பிரயத்தனங்களின் கேலிக்கூத்துக்கு அளவே இல்லை.

இந்த தேசத்தின் நீண்ட பாரம்பரியம் பற்றியும், வேர்கள் பற்றியும், கலாச்சார பரிவர்த்தனை பற்றியும் இனமத கலவரங்களும் வன்முறையும் மிதமிஞ்சுகிற இந்த நாட்களில்

www.tamilarangam.net

ஆன்மீக, தார்மீகப் புனர் அமைப்புகளில் தேசத்தின் கலைஞர்களுக்குரிய பங்களிப்பு பற்றியும் மிகச் சரியான இடங்களில் சமஸ்கிருத ஸ்லோகம், கன்னடப் புரட்சிக்கவி அஸ்ஸாமிய நாட்டுப்பாடல் உதாரணங்களுடன் பேசிவிட்டு உதவி மந்திரி சென்றபின், முகாமின் இறுதிக்கட்டம் எப்போதும் போல மிகச் சுமுகமாகத் துவங்கி பரிசளிப்புகளின் தேர்வு மீதான ஞானம், ஞானமின்மைக்கு போய் பரிசு வாங்கத் தரமற்றது என்று உணர்ந்த படைப்புகளின் ஆசிரியர்களைக் கிழித்து உலர்த்துவதில் இறங்கி, அப்புறம் கட்சிக்கு நான்காக ஒரே இரைச்சல்.

குன்னங்குளம் டொமினிக் இதுபோன்று கூட்டத்திற்கு கூட்டம் சண்டைபோட்டு பெயர் வாங்கியவன்தான். 'டொமினிக் வருகிறானா, எதற்கு வம்பு' என்று கூட்டத்திலிருந்து விலகியவர்களும், ஆவலுடன் வரிசைபோட்டு சிலம்பம் ஆடி வென்று கூட்டத்தின் கடைசிக் கைதட்டலை தன்னுடைய ஜிப்பா பைகளில் அள்ளிக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதற்காகவே புஜங்களின்மேல் துணியைச் சுருட்டிவிட்டு வந்தவர்களும் உண்டு.

டொமினிக் இன்று மிகவும் விலகி இருந்தான்.

இத்தனை நாட்களும் இவனுடன் பேசாமலே இருந்த, முகாமில் இவன் எதிர்ப்படும் போது எல்லாம் தயங்கிப் புன்னகைத்து அப்புறம் சென்று கொண்டிருந்த நாவலாசிரியை, கடைசித்தினம் என்ற சலுகையில் ஒரு மரியாதையான தூரத்தில் நாற்காலியிட்டுப் பேசிவிட்டு அவளுடைய சமீபத்திய புத்தகத்தின் பிரதியில் ஒன்று கொடுத்துவிட்டு "கடைசியாக என்ன எழுதியிருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

டொமினிக் தன் உடுப்பின் வெவ்வேறு பைகளில் தேடி இரண்டாக மடிக்கப்பட்டிருந்த கார்டு ஒன்றை எடுத்தான்.

"என் பொன்னு மகளுக்கு நான் எழுதிய கார்டுதான் நான் எழுதிய கடைசி விஷயம்" என்றான்.

"நீண்ட பயனத்தில் நான் சாப்பிட முயற்சி எடுக்கமாட்டேன் என்பதற்காக என் மகள் எனக்குப் பொட்டலத்தில் ஓடி ஓடி உணவு கட்டிக் கொடுத்தாள் அதுவும் பக்கத்துக் கடையில் கடனுக்கு வாங்கப் பட்டதே. நான் கண்டிப்பாக சாப்பிட வேண்டும், தூரப்போட்டுவிடக் கூடாது என்று வற்புறுத்தி என்னை அனுப்பினாள். குடிப்பதற்கான தண்ணீரைக் கூட பாட்டிலில் அடைத்துக் கொடுத்தாள். தன்னுடைய அப்பா டொமினிக் குடிகாரன் என்பது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்பதற்காக. அந்த பாட்டிலின் மீதிருந்த லேபிளைச் சுரண்டி எடுத்தாள். தன்னுடை நகக்கண் வலிக்கச் சுரண்டினாள். நான் சாப்பிடவே இல்லை. அதைத் தூக்கிப்போடவும் இல்லை. ஆனால் சாப்பிட்டுவிட்டதாக, அவளுக்கு இதில் எழுதியிருக்கிறேன். இதுதான் அவஸ்தை. இதுதான் வலி. வலியை உள்ளடக்கியதுதான் எல்லாம் எழுதும்."

குன்னங்குளம் டொமினிக் நடுங்கும் விரல்களுக்கிடையில் அந்த மடிந்த கார்டு நீண்டிருந்தது. எந்தெந்த ரயில்களில் பதிவு செய்யப்பிட்டிருக்கிறது அது. அது புறப்படும் நேரம் என்ன என்று ஆட்டோவின் குலுக்ககல்களுக் கிடையில் டொமினிக் என்னிடம் கேட்டுக் கொண்டான்.

"நிறையப் பொழுது இருக்கிறது ரயில்வே நிலையங்களுக்கும் பஸ் ஸ்டாண்டுகளுக்கும் அருகில் சாராயக் கடைகளை மோப்பம் பிடிப்பதென்பது மிகச் சுலபம்." என்று சிரித்தபடி சாய்ந்து கொண்டான்.

சட்டென்று பாதை முழுவதிலும் முந்திரிவாடைஅடித்தது. ஆட்டோ மட்டும் விர்ரென்று உறுமிக் கொண்டிருக்க, அவரவரின் தனித்த மௌனத்தில் சற்று நேரம் அப்பிக் கொண்டிருந்தோம்.

டொமினிக் திடீரென்று டிரைவரின் முதுகில் கை வைத்து "கொஞ்சம் நிறுத்து" என்றான்.

நின்ற இடத்தில் நிறைய முந்திரிப் பழங்கள் சிதறிக் கிடந்தன. ஒரு அறுபது வயதுக் கிழவன் கையில் 'தொரட்டி' யும், தோளில் உரச் சாக்குப் பைகளில் தைத்த பையுமாக இருந்தான். டொமினிக் பார்க்கும் போது அவன் நிற்க கூட இல்லை அந்த சாக்குப்பையை தோளில் ':ம்ப்' என்ற முனகலுடன் வீசி ஏந்திக்கொண்டு, அதே சமயம் தொரட்டியையும் கையில் எடுத்துக்கொண்டு நிமிர்கிற விநாடி அது முழுவதும் நிமிராது. ஒருகை தரைநோக்கி இயங்கிய அந்த நிலை, ஏதோ ஒரு வயதான மிருகம் இரை தேடுவதுபோல இருந்தது டொமினிக்கிற்கு.

சுற்றிலும் மிகக் கவனமாகப் பறிக்கப்பட்டமுந்திரிப் பழங்கள் சிதறிக்கிடந்தன. எல்லாவற்றிலும் கொட்டைகள் நேர்த்தியாக திருடப்பட்டிருந்தன. உதிர்ந்திருந்த இலைகளின் சொற்பத்தில் பறிப்பின் நேர்த்தியும் பழக்கமும் இருந்தது. அநாவசியமாக ஒரு பூ இல்லை, பிஞ்சுஇல்லை. பயமில்லாமல் மிரட்சி இல்லாமல்கடந்து செல்லும் எத்தனையோ வாகனங்களுக்குள் ஒன்றாக இதையும் காணாதிருந்தது. தன்னருகில் நின்றது என்ற காரணத்துக்காக நிமிர்ந்து பார்த்துச் சிரித்த முகத்தில் வயது, அனுபவம், கடுமையான உழைப்பு எல்லாம் தாண்டி ஒரு தெளிவு எல்லாம் நெருங்கியிருந்தன.

சிரித்துக் கொண்டே போக, அந்தக் கிழவனுடைய கண்கள் மேலும் இடுங்கின. நட்சத்திரம் போல பார்வை மின்னித் தெறித்தது.

டொமினிக் என்னிடம் கேட்டான்-

"மற்றவர் யார் தெரிகிறதா?"

எனக்கு உடனே தெரிந்தது.

"எனக்கு முன்னால் கிளம்பிவந்து முந்திரிகளை எடுத்துக் கொண்டஆள்"

டொமினிக் நான் சொன்னதைக்கேட்டு வலிக்கிறதுபோலச் சிரித்தான். என்னை மிக ஆழமாக பக்கவாட்டில் பார்த்துச் சொன்னான்.

"நீதான் அவனிடமிருந்து எடுத்திருக்கிறாய். அவனுடைய சாப்பாட்டுத் தட்டிலிருந்து."

இன்னும் அந்தக் கிழவன் சிரித்திருக்க, டொமினிக்கின் முதுகுத் தட்டலில் ஆட்டோ கிளம்பியது.

இடது சரிவில் இரண்டுபேர் மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள். ஒன்று இரண்டு என எதிர்த்திசையில் இரண்டு யாஸ்தி வாகனங்கள் சீறின. வேகத்தடையில் நிதானிக்கும்போது பாதுகாப்புச் சிப்பந்தி வாகன எண்ணைக் குறித்துக் கொண்டார். ஒரு பகுதி மூடியிருந்த உயரமான இரும்புக் கேட்டினுடைய ஈட்டி முனைகளில் ஒரு கருநீலப் பூங்கொத்து உரசிக் கொண்டிருந்தது.

வண்டி இடது வளைவில் திரும்பி வேகம் எடுக்கையில் "புரிகிறது டொமினிக்" என்றேன்.

அவ்வளவுதான் சொல்ல முடிந்தது.

வணக்கம்.

சிறுகதைச் சஞ்சிகை ஒன்றினை வெளிக்கொண்டுவரவேண்டும் என்ற நீண்டநாள் விருப்பத்திற்கு, பல்வேறுவகை அபிப்பிராயங்கள், கருத்துப்பரிமாறல்களுக்குப்பின் வடிவம் கொடுக்கவிழைகின்றோம்.

ஏற்கனவே சஞ்சிகைநடாத்திய அனுபவம், மாபெரும் எதிர்பார்ப்புகளோடு பலதரப்பட்ட வாசகர்களையும் வென்றெடுத்து ஒரு 'குட்டிப்புரட்சி'யே நடாத்திவிடுவோம் என்ற கனவு கொஞ்சமும் கிடையாது.-படைப்பாளிகள், விமர்சகர்கள் ஆர்வமுள்ளவர்களிடையே மட்டுமேயான தயாரிப்புத்தான்.
படைப்புத்துறையில் ஆர்வமுள்ளவர் என்றவகையில் இச்சஞ்சிகையில் தங்களின் பங்களிப்பையும் நட்புடன் நாடுகின்றோம்.

குறுகிய செயற்பாடாகையால், செயலுக்கு முன்னர் அதிகம் கதைப்பது அவசியமில்லை. அனாவசியமான கேள்விகள், சந்தேகங்களுக்கு செயலினூடு பதிலளிப்பதே சிறந்தது.
முதல் இதழினை மாசிமாத நடுப்பகுதியில் வெளிக்கொணர்வதாக உத்தேசம். நீங்கள் விரும்பும் பட்சத்தில் உங்களிடமிருந்து சிறுகதைகளோ, அல்லது சிறுகதைகள் தொடர்பான கட்டுரைகளோ எதிர்பார்க்கின்றோம்.
உங்கள் பதில் கண்டு 'அம்மா' உங்களுடன் தொடர்பு கொள்வாள்.

ஆர்வமுள்ள உங்கள் நண்பர்களுக்கும் 'அம்மா'வை அறிமுகம் செய்யுங்கள்!
நன்றி

அன்புடன்

14. 01. 1997

தொடர்புகளுக்கு:
S. Manoharan,
(Esc. E13)
210, Ave. du 8 Mai 1945
93150 Le Blanc Mesnil,
France.

'படைப்பாற்றல் இல்லாத சமூகம் எழுச்சிகொள்ளமுடியாது'

# 'அம்மா'

'அம்மா' படைப்பாளிகள், விமர்சகர்களுடன் மட்டும் தனது எல்லையை மட்டுப்படுத்திக்கொள்வாள்.

ஆரவாரங்கள், ஆர்ப்பரிப்புக்களுக்கு இடம்கொடாது படைப்பாளிகளை உற்சாகமூட்டலை மட்டும் அம்மா தன் நோக்காகக்கொண்டிருப்பாள்.

படைப்பாளிகளிடம் பரஸ்பரம் இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் படைப்பாளியின் ஆன்மா சோர்ந்துவிடாது குளிர்மைப்படுத்தல் அம்மாவின் பணி.

அம்மாவால் சிறுகதை, விமர்சனம் என்ற எல்லைக்குள் மட்டுமே நடந்துகொள்ளமுடியும்.
சிறுகதைகள், தரமான விமர்சனக்கடிதங்களை அம்மா தாங்கிநிற்பாள்.

புதியபடைப்புக்களை மட்டுமே அம்மா வரவேற்பாள்.
அம்மாவின் எல்லை குறுகியதாகையால், அம்மாவில் பிரசுரமாகும் கதையினை ஒரே நேரத்தில் படைப்பாளி இன்னொரு சஞ்சிகை, பத்திரிகைக்கு அனுப்பிவைப்பினும் அம்மா சர்ச்சை கொள்ளாள்.

படைப்பினூடு படைப்பாளியை இனங்காணும் இன்னொருபடைப்பாளி அல்லது ஆர்வலர் அம்மாவுடன் இணக்கம் காணாது படைப்பாளியுடன் நேரடித்தொடர்பு கொள்ளும் பொருட்டு, படைப்பாளியின் சம்மதத்துடன் படைப்பாளியின் முகவரியும் படைப்பின் கீழ் பதியப்படும்.

ஐம்பது பிரதிகள் வரையிலே அம்மா பிரசுரமாவாள். எவரும் போட்டோ கொப்பி மூலம் மறு பிரதிசெய்யக்கூடிய வகையில் அம்மாவின் அமைப்பு இருக்கும்.
எவரும் மறுபிரதி செய்வதற்கு தடையிருக்காது.
படைப்பாளியின் சம்மதமின்றி எவரும் படைப்புக்களை மறுபிரசுரம் செய்யமுடியாது.

அம்மாவிற்கு காலவரையறை கிடையாது.
இருப்பினும் குறைந்தது இருமாதத்திற்கு ஒருதடவையேனும் பிரசவிக்கத் துடிப்பாள்.



www.tamilarangam.net

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்